பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 11 வியாழக்கிழமை (28.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 336

# இறுதிப் போரில் நடந்த மனித உரிமை மீறல்கள்:

# சர்வதேச விசாரணை அவசியம் என்கிறது பிரிட்டன்

## அந்நாட்டின் பிரதமர் நாடாளுமன்றில் தெரிவிப்பு



லண்டன், ஒக்ரோபர் 28

இலங்கையில் நடந்த போரின் இறுதிக்கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச, பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்று அவசியம் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தி உள்ளார். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிட்டிஷ் பிரதமர் இந்த விடயத்தில் பிரிட்டனின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

இறுதிப் போரின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்கள் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கும் போது அது பற்றிய பிரிட்டிஷ் பிரதமரின் கருத்து என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவோண் மக்டொனால்ட் கேள்வி எழுப்பினார்.

''இலங்கையின் மதிப்பை அனைத்துலக மட்டத்தில் உயர்த்துவதற்கு மக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்றை பயன்படுத்தி அந்த நாட்டு அரசு எவ்வளவு முயற்சிக்கின்ற போதிலும், அங்கு படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடந்ததாக மேலும் ஆதாரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் மனித உரிமை மீறல்கள் குறித்து உறுதி செய்வதற்கு சர்வதேச பக்கசார்பற்ற விசாரணை ஒன்று நடத்தப் படுவது அவசியம் என்று நான்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடிகள் கொழும்பில் நீக்கம்

கொழும்பு,ஒக்.28

கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து வீதித்தடைகளையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

அதன் முதல் கட்டமாக நேற்று வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டிப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த வீதிச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுவிட்டன என்றும் - இன்னும் சில தினங்களில் கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் அனைத்து வீதித் தடைகளும் அகற்றப்படும் என்றும் மெதவல தெரிவித்துள்ளார்.

இதேசமயம் கொழும்பு வீதிகளின் முக்கிய பகுதிகளிலும் சந்திகளிலும் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது.

அதேவேளை, சரத் என் சில்வா பிரதம நீதியரசராக இருந்த காலத்தில் கொழும்பின் வீதித் தடைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.-(ஒ)

## சந்திரிகா கொலை முயற்சி: வவுனியாவாசிக்கு 30 வருடச் சிறை

கொழும்பு,ஒக்.28

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்குவைத்து 1999ஆம் ஆண்டு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான குற்றவாளிக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் 30 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

வவுனியா நாவற்குளத்தைச் சேர்ந்த சக்திவேல் இலங்கேஸ்வரன் என்பவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. எம்.பி.டி. வராவெவ மேற்கண்ட தண்டனையை விதித்தார்.

கொழும்பில் 1999ஆம் ஆண்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தத்துக்கு எதிராக கூட்டமைப்பு வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஒக். 28

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. "உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்தில் சிறுபான்மைக் கட்சிகளைப் பாதிக்கும் பல ஷரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதை எதிர்த்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது'' - என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

உத்தேச திருத்தம் சிறுபான்மைக் கட்சிகளைப் பாதிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சில கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்து வருகின்றன.

உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டமூலம் வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. எனினும் பின்னர் அது கைவிடப்பட்டது. சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர அரசு தீர்மானித்துள்ளதால் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதம் வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைகின்றது. அதற்கு முன்னர் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும். எதிர்வரும் மார்ச் மாதம் இத் தேர்தல்கள் நடைபெறும் என அரசு ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இதேவேளை, (24ஆம் பக்கம் பார்க்க)

### நீதிமன்றம் செல்வதை மு.காங்கிரஸ் கைவிட்டது

கொழும்பு, ஒக்.28

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தம் குறித்து அரச தரப்பு பேச்சு நடத்தி திருத்தங்களைக் கொண்டுவர இணங்கியதை அடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றம் செல்வதைக்(24ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

**சிவில் நிர்வாகத்தை இராணுவ நடைமுறைகள் ஊடாக முன்னெடுப்பது பொருத்தமற்றது**
கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளரின் இடமாற்றம் தொடர்பாக சுரேஷ் எம்.பியின் கருத்து — பக்கம் 2

**தந்தை செல்வா சதுக்கத்தை சேதப்படுத்திய விஷமிகள்!** — பக்கம் 13

**வயிற்றுக்குள் நவரத்தினம்; சிக்கினார் இலங்கையர்**
தனது வயிற்றுக்குள் 2ஆயிரம் நவரத்தினக் கற்களை மறைத்துக் கடத்திய இலங்கையர் இந்தியாவில் கைது — பக்கம் 3

# இந்திய வியாபாரிகள் 20 பேர் யாழ். நகரில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ்ப்பாணத்தில் நடமாடும் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த இந்திய வியாபாரிகள் 20 பேர் நேற்று காலை கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிய விஸா இல்லாமல் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இந்திய வியாபாரிகள் தங்கி இருந்த விடுதிகளுக்கு வெள்ளை நிற''ஹைஏஸ்'' வாகனத்தில் சென்று இறங்கிய சிலர் தம்மைக் கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர். தொடர்ந்து''அந்த விடுதிகளில் இந்திய வியாபாரிகள் தங்கியிருக்கிறார்களா?'' என்று விசாரித்தனர். விடுதி உரிமையாளர்களின் பதிலுக்குக் காத்திராமல் விடுதியில் உள்ள அறைகளுக்கும் சென்று தேடினர்.பின்னர் விடுதிகளில்

(24ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் பதவி ஏற்பை முன்னிட்டு ஒருவார காலத்துக்கு வைபவங்கள்



கொழும்பு,ஒக்.28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலப் பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு ஒரு வார காலம் முழுவதும் வைபவங்கள் இடம்பெறவுள்ளன. ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலப் பதவியேற்பு வைபவம் எதிர் வரும் 19ஆம் திகதி காலி முகத்திடலின் முன்னாலுள்ள ஜனாதிபதி செயலக (பழைய நாடாளுமன்றம்) முன்றிலில் நடைபெறவுள்ளது. காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை நடைபெறும் இவ்வைபவத்தில் அரசியல்வாதிகள், வெளிநாட்டுப் பிரதி நிதிகள் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தை(24ஆம் பக்கம் பார்க்க)

சதவீதம் வரையில் ஆகக்குறைந்த வட்டி!

உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது, 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுணுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

LiSVin LISVIN INVESTMENTS LIMITED

லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web:www.lisvin.com | E-mail:lisvin@lisvin.com

குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு

அங்கீகாரம் பெற்ற விசேடமான நிதிக் குத்தகை நிறுவனம். 2000 ஆம் ஆண்டு 56ம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. *நிபந்தனைகள் உள்ளடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் திடீர் இடமாற்றம் ஏற்புடையதல்ல

# இராணுவ நடைமுறைகளைப் பின்பற்றி சிவில் நிர்வாகத்தை முன்னெடுப்பது எத்தகைய வகையிலுமே பொருத்தமற்றது

## சாடுகிறார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஒக்.28

வடமாகாண ஆளுநர் இராணுவ உயர் பதவியில் இருந்திருக்கலாம். ஆனால், இராணுவ நடைமுறைகளைப் பின்பற்றிச் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பது பொருத்தமற்றது. சிவில் நிர்வாகத்துக்கும் இராணுவ நிர்வாகத்துக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலரும் பேச்சாளருமான நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திடீரென இடமாற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடமாகாண சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் இராணுவ நிர்வாகச் செயற்பாடுகள் போன்றே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போர்க்காலத்தில் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றிய அதிகாரிகள் போதிய காரணங்கள் இன்றி இடைநிறுத்தப்படுகின்றமை அவர்களை மிகுந்த மன உளைச்சலுக்கு உட்படுத்துவதுடன், ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளையும் இடையூறுக்கு உட்படுத்துகின்றது.

நடைபெற்ற வன்னிப் போரின் இறுதிக்காலப்பகுதியில் தனது ஒரே ஒரு பிள்ளையையும் மனைவியையும் இழந்த முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா. தேவேந்திரன் சரியான காரணம் இன்றி திடீர் பணி மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டார். அதேபோல ஏழை விவசாயிகளுக்காகக் குரல் கொடுத்துவந்ததால் கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்கல் பணிப்பாளர் சீதாலட்சுமி ஆனந்தராஜாவின் பதவியும் பறிக்கப்பட்டதாக விவசாயிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இன்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பணி இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதாக வடமாகாண ஆளுநரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அவர் பதவியில் இருந்து விலக்கப்படுவதற்கும் சொல்லப்பட்ட காரணமும் உரிய காரணம் அல்ல. தர்மபுரம் இல 01 பாடசாலையின் கட்டடத்தை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநரால் அடிக்கல் நட்டப்பட்டிருந்தது. குறித்த பாடசாலையைக் கட்டி முடிக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டே கல்விப் பணிப்பாளருக்கான பணி இடமாற்றல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலை கட்டுவதற்குரிய நிதியறிக்கை கல்வி அமைச்சுக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அதற்கான பதிலோ நிதியோ வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் பாடசாலைக் கட்டடம் அமைக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டு கல்விப்பணிப்பாளர் ஒருவரை பணி இடமாற்றுவது பொருத்தமற்ற முடிவாகும்.

அரச பணியின் இறுதி ஆண்டில் பணியாற்றிக் கொண்டிருக்கும் குருகுலராஜாவைத் தற்போது சரியான காரணம் இன்றி திடீர் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவது ஏற்புடையது அல்ல.

ஓர் அதிகாரி சமூகத்தில் நீண்டகாலம் அரிய பணியாற்றி அவர் ஓய்வுபெறும் காலத்தில் அவர் மீது பொருத்தமற்ற குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரை மன உளைச்சலுக்கு உட்படுத்துவது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாதது, என்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் செயற்பாடுகளுடன் மிக நீண்ட காலமாக ஒன்றித்து வாழ்ந்த அவரை திடீரென ஒதுக்குவது கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும்.

அதே பணிக்கு மீண்டும் ஒருவர் வருகின்றபோது அந்தப் பொறுப்பிற்கான அனைத்து விடயங்களையும் அறிந்து நிர்வகிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்பது கல்வித் துறை சார்ந்தவர்களின் கவலையாக இருக்கின்றது.

வடமாகாண ஆளுநர் இராணுவ உயர் பதவியில் இருந்திருக்கலாம் ஆனால், இராணுவ நடைமுறைகளைப் பின்பற்றி சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பது பொருத்தமற்றது. சிவில் நிர்வாகத்திற்கும் இராணுவ நிர்வாகத்திற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக கைவிட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரிய தரப்புக்களைக் கேட்டுக் கொள்கின்ற அதேவேளை கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா தனது ஓய்வு காலம் வரையில் குறித்த கல்வி வலயத்தில் பணியாற்ற வடமாகாண ஆளுநர் அனுமதி வழங்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கின்றது என்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா இன்று முதல் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றார் என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி உத்தரவிட்டதை அடுத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை பணியாளர்கள் இன்று (நேற்று) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டி ருந்தனர்.

இதனை அடுத்து கல்விப் பணிமனைக்குச் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலரும் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் கல்விப் பணிப்பாளரையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-10)

(இடமாற்றம் தொடர்பான செய்தி 9ஆம் பக்கத்தில்)

# புகலிடம் கோருவோர்கள் மீதான பிடியை ஆஸியும் இறுக்குகிறது

## இலங்கையரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்

கொழும்பு, ஒக்.28

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்களின் விண்ணப்பங்களில் அதிகளவான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் பிரன்டன் ஓ மகோர்னர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கை முடிவடைந்த பின்னர் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்து அறிவிக்கப்படும்.

அத்துடன் புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுத்து வைப்பதற்காக ஆஸ்திரேலிய அரசு இரண்டு தடுப்பு முகாம்களை நிர்மாணித்து வருகின்றது. இதனால் அகதிகளுக்கு அதிகளவு வாய்ப்பை ஆஸ்திரேலியா வழங்குகிறது என்று புகலிடக் கோரிக்கையாளர்கள் கருதக்கூடாது.

அதேவேளை, சட்டவிரோதமான முறையில் கடல் வழியைப் பயன்படுத்தி ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சகல புகலிடக் கோரிக்கையாளர்களும் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாக விசாரணைக்குட்படுத்தப்படுவர்.

புகலிடம் கோருவதற்கான சரியான காரணங்களை முன்வைக்கத் தவறும் இலங்கையர்கள் மீளவும் அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படுவர்.

-இப்படி ஆஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் பிரன்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் அதிகளவான இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை ஆஸ்திரேலிய அரசு நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கனடா அரசும் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டமூலமொன்றை அந்நாட்டு நாடாளுமன்றில் சமர்ப்பித்தமை தெரிந்ததே. (சி)

## பெறுபேறுகள் வெளியாகின

பலாலி ஆசிரிய கலாசாலையின் 2007/2008ஆம் கல்வி யாண்டுக்கான இறுதிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பெறுபேறுகளை பலாலி ஆசிரியர் கலாசாலையின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும், நூன சித்திபெற்றவர்கள் உடனடியாகத் தன்னைச் சந்திக்கும் படியும் கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் தெரிவித்துள்ளார். (எ)

## கோத்தபாயவின் நிறுவனப் பொறுப்பிலேயே இனி அரசநிறுவனங்களின் பாதுகாப்பு

அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களினதும் பாதுகாப்புப் பணிக்கு ரக்னா லங்கா தனியார் பாதுகாப்புச் சேவை நிறு வனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு நிதியமைச்சின் கீழுள்ள திறைசேரி உத்தரவிட்டுள்ளது.

பிரஸ்தாப பாதுகாப்புச் சேவை நிறுவனமானது பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு சொந்தமானதாகும்.

அதன் பிரகாரம் இனிவரும் காலங்களில் எந்த அரச நிறுவனத்துக்கும் வேறு தனியார் நிறுவனங்களின் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ள முடியாது.

கட்டணம் அதிகமாக இருந்த போதிலும் ரக்னா லங்கா நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், ரெலிகொம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவை ஊழியர்களே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

அரச நிறுவனங்கள் அனைத்தும் தனியார் நிறுவனமொன்றின் சேவையைப் பெற்றுக் கொள்வது தொடர்பல் நிர்ப்பந்திக்கப்படும் சுற்று நிருபம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளமையானது என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்தன்கேணி சிவன் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.28

சித்தன்கேணி, ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை 5 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சார்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை முற்பகல் 9.35 மணிக்கும் மு.ப. 10.25 மணிக்கும் இடையிலான சுபவேளையில் நடைபெறும் என்று ஆலயப் பிரமகுரு சிவஸ்ரீ [illegible] குருக்கள் தெரிவித்தார். [illegible]

## யாழ்.நகரில் தந்தை செல்வா சதுக்கத்தில் சேதங்களை ஏற்படுத்தியுள்ள விஷமிகள்



யாழ்ப்பாணம், ஒக்.28

தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நினைவாலய வளாகத்திலுள்ள பயன்தரு மரங்கள் பல விஷமிகளால் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. நினைவாலய வளாகத்தில் பராமரிப்பு வேலைகளுக்காக நேற்றைய தினம் அங்கு உட்பிரவேசித்த போதே இந்த விடயம் தெரிய வந்தது.

தந்தை செல்வாவின் மறைவையொட்டி அவரது நினைவாக யாழ். நகரின் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நினைவாலய வளாகத்திலேயே இந்த விஷமச் செயல் இடம்பெற்றுள்ளது.

அந்த வளாகத்தில் உள்ள முப்பதுக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அடியோடு வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல குலைகளுடன் வெட்டிச் சரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில வாழைமரங்களிலுள்ள வாழைக் குலைகள் சேதமாக்கப்பட்டும் காணப்படுகின்றன.

அங்குள்ள செவ்விளநீர் மரத்திலிருந்து செவ்விளநீர் குலைகளாக வெட்டப்பட்டு குரும்பைகள் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன. ஐந்துக்கும் மேற்பட்ட மரங்களிலிருந்து செவ்விளநீர் குலைகள் பல வெட்டப்பட்டுள்ளன.

நினைவாலய வளாகத்தினை சுற்றியுள்ள நுழைவாயில் கதவுகள் பூட்டப்பட்டுள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நினைவாலய மதில்மேல் பாதுகாப்பாக அறுக்கை செய்யப்பட்டிருந்த இரும்பு வலையை வெட்டியே உட்புகுந்து விஷமிகள் இந்தச் செயலை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலத்துள்ளேயே இந்த விஷமச் செயல் இடம்பெற்றிருக்காலம் என நம்பப்படுகிறது. நினைவாலயத்துக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்துள்ளபோதிலும் இந்தச் செயல் இடம்பெற்றிருப்பது மக்கள் மத்தில் அதிக மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. தலைமை மாறினாலும் 2015இல் மஹிந்ததான் மீண்டும் வெற்றிபெறுவார்

## ஹெல உறுமய கூறுகிறது

கொழும்பு, ஒக்.28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்பட்டாலும் கூட 2015ஆம் ஆண்டு இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் வெற்றிபெறுவார். அவருக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவு ஒருபோதும் குறையாது - என்று ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

கொழும்பில் அக்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பிலவே இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடகாலமாக எந்தவொரு ஆட்சியாளராலும் ஒழித்துக்கட்ட முடியாதிருந்த பயங்கரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெறும் மூன்று வருடங்களில் ஒழித்துக்கட்டினார். அதற்காக இந்த நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன்பட்டுள்ளனர். அவரால்தான் இந்த நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும்வரை இந்த நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது. எமது நாடு தொடர்ந்தும் பிளவுபடாத நாடாகவே இருக்கும். இப்போது மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம் தொடர்ந்து இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஒருபோதும் ஆட்சியைப் பிடிக்க முடியாது. அக்கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றினாலும் கூட 2015ஆம் ஆண்டில் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஷதான் வெற்றிபெறுவார் - என்றார். (சி)

## எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்ற முழங்காவில் வாசி மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.28

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கன் விக்னேஸ்வரன்(வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

எரிகாயங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். (ஒ-319)

## ஊழல் குறைந்த நாடுகளில் இலங்கைக்கு 91ஆவது இடம்

கொழும்பு, ஒக்.28

ஊழல் குறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 91 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஜேர்மனியின் பேர்லினைத் தளமாகக் கொண்ட ட்ரான்பரன்ஸி இன்ரர்நெஷனல் அமைப்பு, ஊழல்கள் தொடர்பான வருடாந்த அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் இலங்கை 3.1 புள்ளிகளைப் பெற்று 97ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் இலங்கைக்கான புள்ளி 0.1 இனால் அதிகரித்துள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் பூட்டான் மாத்திரமே இப்பட்டியலில் 4இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று 36ஆவது இடத்தில் உள்ளது எனவும் இந்தியா 3.3 புள்ளிகளைப் பெற்று 87 ஆவது இடத்தில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் டென்மார்க், நியூஸிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 9.3 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வகிக்கின்றன. அதாவது, இந்நாடுகளே உலகில் மிகவும் ஊழல் குறைந்த நாடுகளாகும்.

இப்பட்டியலின் கடைசி இடத்தில் சோமாலியா உள்ளது. அதனுடன் பர்மா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகியன மிக அதிக ஊழல் மிகுந்த நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. (சி)

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலத்துக்கு எதிராக அரசறிவியல் பேராசிரியர்கள் உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஒக்.28

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக மூத்த அரசறிவியல் பேராசிரியர்கள் இருவர் உயர்நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசமைப்பு விவகார அமைச்சின் மூத்த ஆலோசகர் பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவரான பேராசிரியர் நரேந்திர பண்டார ஆகியோரே இந்த மனுக்களை நேற்றுத் தாக்கல் செய்தனர்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் சிறிய கட்சிகளைப் பாதிக்கும் என்றும் சுதந்திரமான அரசியல் கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் தமது மனுக்களில் கூறியுள்ளனர்.

அரசமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆட்சியுரிமை, சமத்துவ உரிமை, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் ஆகியவற்றை மீறுகின்ற வகையில் இந்தத் திருத்தச் சட்டமூலம் அமைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கருத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி மக்களின் ஆணையைப் பெற்ற பின்னரே இந்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு ஆணையிட வேண்டும் என்று இவர்கள் உயர்நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக அரசறிவியல் பேராசிரியர்கள் கருத்து வெளியிடுகையில் -

கடந்த முதலாம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது கலப்பு தேர்தல் முறையாகும்.

வட்டாரமுறையிலான தேர்தல் மூலமும் அமைச்சர் தீர்மானிக்கின்ற 30 வீதத்துக்கும் மிகைப்படாத உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்பட இது வழிசெய்கிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு ஒவ்வொரு கட்சி அல்லது சுயேச்சைக் குழுவும் ஆகக் குறைந்தது 12.5 சதவீத வாக்குகளைப் பெறவேண்டும் என்கிறது இந்த திருத்தச் சட்டமூலம்.

இதன்மூலம் சிறிய கட்சிகள் பிரதிநிதித்துவம் பெறமுடியாத நிலை ஏற்படும்.

அதைவிட அரசியல்கட்சி ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 5000 ரூபா கட்டுப்பணத்தை செலுத்த வேண்டும் என்றும் சுயேச்சைக்குழு வேட்பாளர் ஒருவர் 20,000 ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் உறுப்பினர் ஒருவர் மரணமானால் அல்லது பதவி விலகினால் ஏற்படும் வெற்றிடத்துக்கு இடைத்தேர்தல் நடத்தும் வழிமுறையும் இதில் இல்லை.

அரசியல் கட்சியின் செயலாளரிடமே அந்த வெற்றிடத்தை நிரப்பும் பொறுப்பு விடப்படுகிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளார். (ஒ)

## 2ஆயிரம் நவரத்தினக் கற்களை விழுங்கி கடத்திய ஆசாமி சிக்கினார் பொலிஸில்!

### அவை 6 மணி நேரத்தில் வெளியே வந்தன!!



சென்னை,ஒக்.28

இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்ற விமானத்தில் இலங்கை வாலிபர் ஒருவர் வயிற்றில் மறைத்துக்கொண்டு சென்ற ஒன்றரைக் கோடி (இந்திய ரூபா) பெறுமதியான 2 ஆயிரத்து 65 நவரத்தினக் கற்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

இலங்கையில் இருந்து சென்னைக்கு வரும் விமானத்தில் வாலிபர் ஒருவர் வயிற்றில் மறைத்து வைத்து நவரத்தினக் கற்களை கடத்தி வருவதாக ப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

கடத்தல் ஆசாமியை பிடிப்பதற்காக பொலிஸாரின் தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த தனிப்படைகள் தீவிரமாகக் கண்காணித்தபோது விமான நிலைய கார் தரிப்பிடப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித் திரிந்த முகமது சுபைர் (41 வயது) என்பவரை மடக்கிப் பிடித்தனர்.

இலங்கையை சேர்ந்த இவர்தான் நவரத்தினக் கற்களைக் கடத்தி வந்தவர் என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து சுபைரை தனியார் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்ற பொலிஸார் அவரது வயிற்றை ஸ்கான் செய்து பார்த்தனர். வயிற்றுக்குள் 48 கருத்தடை சாதனங்களில் 2 ஆயிரத்து 65 நவரத்தினக் கற்கள் இருந்தன.

இதனை வெளியில் கொண்டு வர பொலிஸார் முயற்சி மேற்கொண்டனர். எனிமா, வாழைப் பழம் போன்றவை அவருக்கு கொடுக்கப்பட்டது. சுமார் 6 மணி நேரம் காத்திருந்த பின்னர் வயிற்றில் இருந்த ரூபா ஒன்றரைக்கோடி மதிப்பினாலான நவரத்தினக் கற்கள் வெளியில் வந்தன.

இவற்றைக் கைப்பற்றிய பொலிஸார் விமான நிலைய சுங்கத்துறையினரிடம் ஒப்படைக்க உள்ளனர்.

ஒருமுறை இப்படி கடத்தலில் ஈடுபட்டால் ரூ.10 ஆயிரம் கமிஷன் கிடைக்கும் என்று சுபைர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். இதற்கு முன்பு 2 முறை இதேபோல கடத்தலில் ஈடுபட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ)

## கொப்பிகள், காலணிகள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலய மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காலணிகளை வழங்கவுள்ளது.

57 வருடங்களின் பின் இப்பாடசாலை மாணவன் ஒருவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததை முன்னிட்டே மேற்படி நிறுவனம் இந்த அன்பளிப்புக்களை வழங்குகிறது.(ஒ-319)

## மண்டப உரிமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.28

தென்னிலங்கையைச் சேர்ந்த 'டொக்கோமோ மூவி' என்கிற நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 'செல்வம்' என்ற திரைப்படத்தை எடுத்து வருகிறது. இப் படத்தில் வரும் காட்சி ஒன்று கடந்த 22 ஆம் திகதி நல்லூரில் இருக்கும் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இதற்கான மண்டப வாடகை மற்றும் சேதமடைந்த பொருள்களுக்கான கட்டணம் என்பன உட்பட மொத்தம் 44,000 ரூபா மட்டுமே பெறப்பட்டதாக மண்டப உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

23ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் இது தொடர்பாக வெளியான செய்தில் மண்டப வாடகையாக ஒரு லட்சம் ரூபா செலுத்தப்பட்டது என திரைப்படத் தயாரிப்பாளர் தரப்பில் தெரிவிக்கப் [illegible]

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம்

## ஐ.தே.க. யோசனைகளை ஏற்காவிடில் எதிர்த்து வாக்களிக்க நேரிடும்

### எச்சரிக்கிறார் அக்கட்சியின் எம்.பி.யோகராஜன்

கொழும்பு, ஒக்.28

தமது கட்சி ஏற்கனவே அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள திருத்த யோசனைகளை உள்ளடக்காது போனால் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக ஐ.தே.க எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.தே.கவின் உள்ளூராட்சித் தேர்தல் குழுவின் உறுப்பினரான யோகராஜன் தகவல் வெளியிடுகையில்,

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் எமது யோசனைகளையும் இணைத்துக்கொள்வது பற்றிய அரசின் பதிலுக்காக காத்திருக்கிறோம்.

அரசிடம் இருந்து எந்தப் பதிலும் வராது போனால் நாம் இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டியிருக்கும்.

இந்த விவகாரம் தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்துவதால் சட்ட நடவடிக்கை குறித்த முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இதுதொடர்பாக ஐ.தே.கவின் குழுவொன்று அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, தினேஸ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

## இந்தியா-ஸ்ரீலங்காவுக்கு இடையேயான வர்த்தக நடவடிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.28

இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் கடந்த வருடத்தை விடவும் இந்த வருடம் கணிசமாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் முதல் எட்டு மாதங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் 1.29 பில்லியன் டொலருக்கு வர்த்தகம் இடம் பெற்றிருந்தது.

ஆனால் இந்த வருடம் முதல் எட்டு மாதங்களில் இது 1.83 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

சிறிலங்காவுக்காக இந்தியாவின் ஏற்றுமதி கடந்த வருடம் 1.10 பில்லியன் டொலரில் இருந்து 1.54 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

ஆனால் சிறிலங்காவின் ஏற்றுமதி 193.07 மில்லியன் டொலரில் இருந்து 293 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

சிறிலங்காவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளராக இந்தியா மாறி வருகிறது.

சிறிலங்காவில் இருந்து இந்தியாவுக்கு தேயிலை, உணவுப் பொருள்கள், கோப்பி, றப்பர், வாசனைப் பொருள்கள் என்பன அதிகளவில் ஏற்றுமதியாகின்றன.

இந்தியாவில் இருந்து சிறிலங்கா மோட்டார் வாகனங்கள், மருந்துப் பொருள்கள், மரக்கறிகள், கனிமங்களை இறக்குமதி செய்து வருகிறது.

அதேவேளை தற்போது சிறிலங்காவில் இந்தியாவின் முதலீடு 500 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

இதையடுத்து சிறிலங்காவில் முதலீடு செய்துள்ள முன்னணி நாடுகளில் இந்தியாவும் இடம் பிடித்துள்ளதாக சிறிலங்கா முதலீட்டுச் சபை கூறியுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் சுனாமி: 272 பேர் பலி! 412 பேரைக் காணவில்லை!!



ஜகர்த்தா, ஒக். 28

**இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் திங்கட்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பத்தால், கடலில் 10 அடி உயரத்துக்கு ஆழிப் பேரலை உருவானது.**

**இதில் 272 பேர் பலியாயினர்; பெண்கள், குழந்தைகள் என 412 பேர் காணாமல் போய்விட்டனர்.**

இந்தோனேசியாவின், மேற்குப் பகுதியில், சுமத்ரா தீவின் அருகிலுள்ள மென்டாவாய் தீவுக்கருகில் திங்கட்கிழமை இக்கடுமையான பூகம்பம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவுகோலில் 7.7 ஆக பதிவான இந்தப் பூகம்பம், மேற்கு சுமத்ரா தீவிலுள்ள பல்வேறு மாகாணங்களில் உணரப்பட்டது. பூகம்பத்தால், கடலில் 10 அடி உயரத்துக்கு சிறியளவில் ஆழிப் பேரலை ஏற்பட்டது.

மென்டாவாய் தீவுகளில் 20 கி.மீ., தூரத் துக்கு ஆழிப்பேரலையால் ஏற்பட்ட அலை கள் புகுந்தன. இந்த ஆழிப்பேரலையில் சிக்கி மென்டாவாய் தீவுகளில் 150 வீடுகள் சேதமடைந்தன.

மென்டாவாய் தீவுகளில் தெற்கு பகாய் என்ற இடத்திலுள்ள பெலு மொங்கா உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 412 பேர், வெள்ளத்தில் சிக்கிக் காணாமல் போய்விட்டனர்.

மலகோபா என்ற கிராமத்தில் 80 சதவீத வீடுகள் அழிந்துவிட்டன. உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தீவுகளின் அருகில், படகில் சுற்றுலா மேற்கொண்டிருந்த 10 ஆஸ்திரேலியர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

## ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாமின் நண்பர் தாரிக் அஜீஸுக்கு தூக்குத்தண்டனை விதிப்பு



பக்தாத், ஒக்.28

ஈராக் முன்னாள்ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் நெருங்கிய நண்பர் தாரிக் அஜீஸ் (வயது - 74). இவர் சதாம் ஹுஸைனின் அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தார்.

சதாம் ஹுஸைன் ஆட்சியின் போது இவர் பல கொடுமைகள் செய்தார். அதில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை சித்திரவதை செய்தார் எனக் குற்றச்சாட்டு உள்ளது.

சதாம் ஹுஸைன் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டு தூக்கிலிடப்பட்ட பின்னர் இவர் அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்தார். அதைத் தொடர்ந்து இவர் மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை சித்திரவதை செய்தார் எனதொடரப்பட்ட வழக்குத் தொடர்பாக ஈராக் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் அவருக்கு நேற்று தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து அஜீஸ் 30 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்ய வேண்டும். இதில் தண்டனை உறுதிசெய்யப்பட்டால் அவர் தூக்கிலிடப்படுவார் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பின்போது அஜீஸ் நீலநிற பேன்ட்டும், அதே கலரில் சட்டையும் அணிந்திருந்தார். அப்போது தலையை தொங்க போட்ட நிலையில் இருந்தார். மேலும், இந்த தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்ய இருக்கிறார் என அவரது சட்டத்தரணி ஜோர்டான் படீ இஷாத் ஆசிப் தெரிவித்துள்ளார்.



சீனா வந்திருந்த இத்தாலி ஜனாதிபதி ஜோர்ஜியோ நெப்போலிடினோவுக்கு (வலது) சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாபோ, தலைநகர் பீஜிங் ஜனாதிபதி மாளிகை யில் இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கிறார்.


கல்வி உலகில் புதிய உதயம்

வடமராட்சியில் ACCA



மிக வேகமாக வளரும் நிதி, கணக்கீடு, முகாமைத்துவக் கல்வி வலையமைப்புடன் நாமும் இணைந்திடுவோம்.

ACCA

மேலதிக விவரங்களுடன் தொடர்புக்கு :

Asst. Coordinator,
Nugavil,
Karaveddy south,
Karaveddy.
(விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு அருகில்)

T.P : 0776258034
e-mail : accajaffna@gmail.com
web site : www.accaglobal.com

புதிய மாணவர்களுக்குரிய பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கலந்துரையாடல் : 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை, மு.ப.10 மணி.


## கனடா பிரதமரை சிறைப்பிடிக்க சதி: தீவிரவாதிக்கு 16 ஆண்டுச் சிறை

டொரண்டோ, ஒக். 28

ஆப்கானிஸ்தானில் பிறந்த அல்-குவைதா தீவிரவாதி பாகிம் அகமது (வயது - 26), கடந்த 2006ஆம் ஆண்டு கனடாவில் கைது செய்யப்பட்டார்.

கனடாவிலுள்ள அணுசக்தி நிலையங்களைத் தகர்க்கவும், கனடா நாடாளுமன்றத்தை தாக்கி, அதனுள் புகுந்து பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை பணயக் கைதிகளாகப் பிடிக்கவும் அவர் சதித்திட்டம் தீட்டினார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது.

அவருடன் 17 பேர் கைது செய்யப்பட்டனர். தங்கள் சதித்திட்டத்தை நிறைவேற்ற கனடாவில் அவர்கள் தீவிரவாத பயிற்சி முகாமொன்றை நடத்தினர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கில், அல்-குவைதா தீவிரவாதிபாகிம் மதுவுக்கு 16 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து ஒன்டாரியோ உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.


ACCA புதிய பிரிவுகள் ஆரம்பம்

ACCA கற்கைநெறிக்கான புதிய பிரிவுகள் 30.10.2010, 31.10.2010 ஆகிய திகதிகளில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.

Business English - 9 am
Business Applications - 10 am

மேலதிக விவரங்களுக்கு :

ACCA

ACCA Administration,
No 46, Clock tower Road,
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)
Jaffna.

(ஞ/572207)


### மரண அறிவித்தல்

#### இராசையா கோகிலராசா

காலையடி தெற்கைப் பிறப்பிடமாகவும், சாந்தை காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கோகிலராசா நேற்று (27.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாயமூர்த்தி அன்புமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும், மணிமேகலையின் அன்புக் கணவரும் ஜெயந்தினி (ஆசிரியை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி), பிறேமானந் (ஜேர்மனி), மாலினி (இத்தாலி), கஜனேஸ் (இத்தாலி), குகனேஸ் (அபிஷன் அரைக்கும் ஆலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார், உசாநந்தினி ஆகியோரின் மாமனாரும், அபிலாஷ், அபிஷன், மிதுஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவயோகராஜா மற்றும் புஷ்பவதி, காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் ரதிதேவி, உலகநாதன், குணபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராஜா, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தை,
பண்டத்தரிப்பு
021 790 0760

தகவல்:
கோ.குகனேஸ் - மகன்,
தி.ஜெயக்குமார் - மருமகன்


மணமகள்தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் வயது -30 சிம்ம இராசி, பூர நட்சத்திரத்திலும் B.Sc. பௌதீக விஞ்ஞான பட்டம் பெற்று அரசாங்க பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியும் மட்டக்களப்பில் நீண்டகாலமாக வசிக்கும் எந்தவித தீய பழக்கமும் அற்ற மணமகனுக்கு அவரது குடும்பத்தினர் தகுந்த பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொ. பே.: 0750394350 thuyarahan 2007@yahoo.com


### மரண அறிவித்தல்

#### தம்பிப்பிள்ளை-நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை சுன்னாகம்)



டச்சு வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகேந்திரம் நேற்று (27.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், தேவநாயகியின் அன்புக் கணவரும், நவநீதன்(Engineer,SLT யாழ்ப்பாணம்), நவதாசன் (DA பிரதேச செயலகம், கோப்பாய்), நவரூபன் (Engineer, London) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அருந்ததி, தயாழினி, துஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முநாதன், பஞ்சநாதன், நவீனச்சந்திரன், இராசேந்திரன், கஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிலிப்பானந்தம் - மகாலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷாயினி, தக்ஷாயினி, ஷஜீவன், அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

டச்வீதி, உடுவில்,
சுன்னாகம்.
தொ.பே.: 021 224 0900 (105223)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசு எதிர்நோக்கவுள்ள அமிலச் சோதனை இது....

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது முதுமொழி. இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கையில் மேற்சொன்ன பழமொழி அடிக்கடியும், பல வகைகளிலும், பல விதங்களிலும் பொருந்திப் போகிறது. மிகப் பலருக்கு அன்றாட வாழ்க்கையே இந்தப் பழமொழி ஆகியுள்ளது.

மிகக் குறிப்பாக, வன்னிப் போரில் தமது இரத்த உறவினர்களை இழந்தும், குடும்ப உறவினர்கள் அங்கவீனர்களாகியும், பிள்ளைகள் காணாமற் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டும் உள்ளதால் - அம்மக்களின் உள்ளங்கள் உடைந்து, வாழ்க்கை கசந்து, எல்லா வகைகளிலும் விரக்தியுற்றவர்களாக நாள்களைக் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இவற்றுக்கும் மேலாக, உணவு, உடை, இல்லிடம் இல்லாது சீவியத்தை நடத்த முடியாத ஏதிலிகளாக நாள்களைக் கடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். மிகக் குறிப்பாக உணவுக்கும் மருந்துக்கும் ஏனைய அன்றாடத் தேவைகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச மனிதநேய அமைப்புகள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடர்கிறது.

அத்தகைய மக்களுக்கு, எல்லா வகைகளிலும் இடி விழுந்தது போல் வந்துள்ளது புதிய செய்தி - புதிய தகவல். உலக உணவுத் திட்டத்துக்குப் பெரும் நிதி நெருக்கடி உண்டாகியுள்ளது. அந்த நிறுவனத்துக்குக் கிடைக்கும் நன்கொடைகள் குறைந்துவிட்டன.

அதனால், இடம்பெயர்ந்த மற்றும் மீளக்குடியேறிய மக்களுக்கு உலக உணவுத் திட்டம் வழங்கும் உணவு மற்றும் மருந்து விநியோகம் பாதிப்புற்றுள்ளது என்பதே அந்தச் செய்தியாகும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படும் கோதுமை மா மற்றும் சீனி ஆகிய உணவுப் பொருள்களின் அளவு அரைவாசியாக குறைக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது. அது தவிர்க்கமுடியாதது என்று கருதப்படுகின்றது.

கொடையாளர்களின் நிதியுதவி மட்டம் இன்னும் இரண்டு மாதங்களில் அதிகரித்துப் பழைய நிலைக்கு வராவிடில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், குழந்தைகளுக்கு வழங்கப்படும் போஷாக்கு உணவு விநியோகத்திலும் பாதிப்பு வரும் என்று அஞ்சப்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்துக்குக் கிடைக்கும் நிதி உதவிகள் குறைந்து வருவதால் உண்டாகும் பாதிப்பை நிவர்த்தி செய்வது இலங்கை அரசின் தட்டிக் கழிக்க முடியாத கடமையாகும். ஆனால் அரசாங்கத்தின் பார்வை, கவனம், கரிசனை இந்த விடயத்தில் திசை திரும்புமா என்பது சந்தேகமே.

அடுத்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்துவிட்டது; சமாதானம் பிறந்துள்ளது; நாட்டில் சுமுக நிலை தோன்றியுள்ளது. ஏ-9 பாதை திறக்கப்பட்டு தென்னிலங்கை மக்கள் நாளாந்தம் ஆயிரக்கணக்கில் சுற்றுலாப் பயணிகளாக வடக்கே வந்து போகிறார்கள். வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஏனைய தொழில் துறைகள் சார்ந்த செயற்பாடுகள் குடாநாட்டில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக உயர்ந்து செல்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் அல்லது அரசியல் மற்றும் பொருளாதார கள நிலைமையில், இந்த வருடத்தின் பிந்திய ஆறு மாத காலத்துக்கான அரசின் உத்தேச வரவு - செலவுக்கான நிதித் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. அதாவது சுமார் 201 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் மீள் குடியேற்ற அமைச்சுக்கு இரண்டு பில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டது.

அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு - செலவு அறிக்கையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 215 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் மீள்குடியேற்ற அமைச்சுக்கு 17.5 பில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

கணக்கு எப்போதும் கதை பேசும். போர் முடிவுற்ற பின்னரும் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 215 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இது இந்த வருடத்திற்கான (2010 இற்கான) மொத்த பாதுகாப்புச் செலவினத்தை விட ஆறு வீதம் அதிகமானதாகும்.

எனினும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு 17.5 பில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

ஆயுதக் கொள்வனவுக்கு வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடனைத் திரும்பச் செலுத்துவதற்காக உத்தேச வரவு - செலவு அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அரசு காரணம் கூறியிருக்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்திற்கு தொடர்ந்து நிதி நிலைமை மேலும் இறுக்கம் அடைந்தால், மீளக் குடியேறியுள்ள தமிழ் மக்கள் நிலைமை மேலும் மோசமடையும். வெளியுலக உதவியும் சொந்த நாட்டின் உதவியும் இல்லையென்ற நிர்க்கதி நிலைக்கு அவர்கள் தள்ளப்படவுள்ளார்கள்.

இருக்க வீடுமில்லை, உழைக்க நாதியுமில்லை என்ற நிலையில் உள்ள இந்த மக்களுக்கு அரசாங்கமே உதவ வேண்டும். நீண்ட நெடுங்காலத்துக்கு ஐ.நா. போன்ற சர்வதேச, மற்றும் வெளியார் உதவியை எதிர்பார்ப்பது வெட்கத்துக்கு உரியது.

தமிழ் மக்களை இந்த நாட்டு மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் அரசு, இனிமேல் மேற்கொள்ளவுள்ள பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்து - நாட்டை இராணுவ மயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து - அந்த நிதியை மீளக்குடியேறிய மக்களின் உணவு மற்றும் சுகநலச் சேவைகளுக்குச் செலவிட வேண்டும்.

இல்லையேல் வன்னியில் மீளக்குடியேறியுள்ள மக்கள் மத்தியில் பட்டினிச்சாவுகள் மலியும். அதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடும். இது விடயத்தில் விரைந்து முடிவு எடுக்க வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன.

தமிழ்மக்கள் மீது மனிதாபிமான ரீதியான இரக்கம், உணர்வு தானும் அரசுக்கு உண்டா என்பதற்கு இது ஓர் அமிலச் சோதனையாக மாறும்.

## மின்சாரக் கம்பங்களுக்கான குழிகளை அப்பகுதி மக்களே தோண்ட வேண்டுமாம்

### கைதடியில் நடக்கிறது இப்படியொரு மின் விநியோக வேலை!

கைதடி, ஒக். 28

மின்னிணைப்புத் தேவையென்றால் மின்கம்பம் நடுவதற்கு கிடங்கு வெட்டித் தரவேண்டும். மறுத்தால் இந்த இணைப்பை வேறிடத்திற்கு மாற்றி விடுவோம் எனக் கூறி பொது மக்களைக் கொண்டு குழி தோண்டும் முறையொன்று கைதடியில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

கைதடியில் உள்ள பிரதேசம் ஒன்றிற்கு ''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் அங்குள்ள சனசமூக நிலையம் ஒன்றின் நீண்ட நாள் கோரிக்கையின் பிரகாரம் மின்சாரம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகளை ஆரம்பிக்குமாறு மின்சாரசபைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சினால் அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் மேற்படி பிரதேசத்திற்கு சென்ற அலுவலர்கள் சிலர் மின்கம்பங்கள் நடுவதற்கான கிடங்குகளைப் பொதுமக்களே வெட்டித்தர வேண்டும். முடியாது எனில் இந்த வேலைத்திட்டத்தை பளைப் பிரதேசத்திற்கு உடனடியாக மாற்றிவிடுவோம் என அதிகாரத் தொனியில் கூறினார்கள். 25 ஆண்டுகளாக இருட்டில் இருந்து வந்த இப்பிரதேசத் திற்கு மின்சாரம் வேண்டும் என்பதாலும், இந்த வேலைத்திட்டம்திரும்பிப் போகக் கூடாது என்பதனையும் கருத்திற் கொண்டு அந்தப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பகல் நேரத்தில் வேலைக்கும், இரவு தொடக்கம் அதிகாலை வரை கிடங்கு வெட்டும் வேலையையும் செய்வதையும் அவதானிக்க முடிந்தது.

மேற்படி மின்னிணைப்புக்குத் தேவைப்படும் 50இற்கும் மேற்பட்ட கிடங்குகளில் தாம் 40 கிடங்குகளை வெட்டியுள்ளதாகவும், மிகுதிக் கிடங்குகள் கல் நிறைந்த பகுதிகளாக உள்ளமையால் தம்மால் வெட்ட முடியவில்லை எனவும், இதற்காக மின்னிணைப்பை வேறிடத்திற்கு மாற்ற வேண்டாம் எனவும் அப்பகுதி இளைஞர்களால் கவலையோடு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி வேலையை ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பெடுத்தவர்கள் கிடங்கு வெட்டும் வேலையை இந்த மக்களிடம் இலவசமாக செய்யுமாறு கூறிவிட்டு அதற்கான நிதியை ஏப்பமிடுவது நீதியா? எனப் பலராலும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக்கவனமெடுத்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-288)

## சமாந்தர சைக்கிள் ஓட்டம்: பொலிஸார் கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக். 28

வீதிகளில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நேவின் பத்மதேவா எச்சரித்துள்ளார். இது குறித்து அவர்மேலும் தெரிவித் தவை வருமாறு:-

குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. வீதிப் போக்குவரத்து விதிகளை உரியமுறையில் பின்பற்றாமல் விடுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

குறிப்பாக வீதிகளில் சைக்கிளில் சமாந்தரமாகச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இத்தகைய பிரச்சினைகளால் வீதி விபத்துக்களும் அதிகரிக்கின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் அதிகமானோர் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இனிமேல் வீதிகளில் சமாந்தரமாகச் சைக்கிளில் செல்வோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.எனவே இது குறித்து சைக்கிளில் பயணிப்போர்விழிப்புடனும், பொறுப்புடனும் செயற்பட வேண்டும் என்றார் அவர். (த - 9)

## கொழும்புத்துறை வசந்தபுரத்தில் 42 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

கொழும்புத்துறை, வசந்தபுரம் பகுதியில் 42 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இவர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து தறப்பாழ் கொட்டில்கள் அமைத்தே அங்கு குடியேறியுள்ளனர்.

அங்கு குடியேறியுள்ள மக்களை நேற்றுச் சந்தித்த யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் ஆர். இளங்கோ அவர்களுக்குத் தேவையான குடி தண்ணீர் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்து வெளியேறிய இந்தப்பகுதி மக்கள் தற்போது மீள் குடியேறியுள்ள நிலையில் தமக்கு அடிப்படை வசதிகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்து தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்வேறு தரப்பினரிடமும் இது தொடர்பான வேண்டுகோள் விடுத்து வருவதாக வசந்தபுரம் விண்மீன் சனசமூக நிலையத்தின் செயலாளர் எம். ஜீவா தெரிவித்தார்.

அத்துடன் மிதிவெடி அகற்றப்படாத பகுதிகள் என்று அரச அதிகாரிகளால் அடையாளம் காட்டப்பட்ட இடங்களுக்கு மக்கள் செல்வதைத் தவிர்க்கும் நோக்குடன் அதற்கென அமைக்கப்பட்டுள்ள எமது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் அவதானித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(த - 9)

## பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் மீண்டும் யாழில்

வலிவடக்கு,ஒக். 28

இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் முன்னர் இயங்கிய பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் கொழும்பிற்கு மாற்றப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கில் தற்போது ஏற்பட்ட சுமுக நிலையை அடுத்து மீண்டும் யாழ்ப்பாணத்தில் அது இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த தலைமைக் கட்டடத்தைத் திருத்தியமைக்க 26 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்னும் ஓரிரு வாரங்களில் கட்டடத் திருத்தப்பணிகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (த-86)

## சிறுவர் நன்னடத்தை அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள்

யாழ்ப்பாணம்,ஒக். 28

'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடமாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் 7 பேருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதே வேளை இந்தப் பதவிக்கு கடந்த மாதமும் நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். அலுவலகத்தில் வைத்து அமைச்சரால் வழங்கப்பட்டன. (201 - 319)

## வடக்கு, கிழக்கில் 550 கிராமங்கள் 'கமநெகும' திட்டத்தில் அபிவிருத்தி

### 86 ஆயிரம் மில்லியன் அமெ.டொலர் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக். 28

வடக்கு, கிழக்கில் 550 கிராமங்கள் 'கமநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கென 86 ஆயிரம் மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி செலவிடப்படும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டத்தை முன்மொழிந்து சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் 2007 முதல் 2010 வரையிலான கணக்காய்வு அறிக்கையினையும், கணிப்பீட்டுச் சபை அறிக்கையினையும் முழுமையாக பூர்த்தி செய்து அதற்கான அறிக்கை பெற்றிருக்க வேண்டும்.

மக்கள் பங்கேற்புத்திட்டத்துடன் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளில் இருந்து முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு உப கருத்திட்ட முன்மொழிவுகளை கடந்த 25ஆம் திகதிக்கு முதல் வழங்கி இருத்தல் வேண்டும்.

இவ்வாறான உள்ளூராட்சிச் சபைகளுக்கு உடன் நிதி விடுவிக்கப்பட்டு அபிவிருத்தி இடம்பெறும். ஏனைய சபைகளுக்குக் காலம் தாமதித்தே நிதி கிடைக்கும்.

எனவே உள்ளூராட்சிச் சபை செயலாளர்கள் 'கமநெகும' அபிவிருத்தி முன்னெடுப்பு திட்டத்தைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்லுமாறு வடக்கு மாகாண ஆளுநர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

ஒவ்வொரு உள்ளூராட்சிச்சபை மக்களும் தமது சபைக்குரிய 200 மில்லியன் ரூபாநிதிக்கான அபிவிருத்தித் திட்டங்களை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். (த-302)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 12 | : 29.10.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : ஷஷ்டி காலை 6.20 வரை ஸப்தமி பி.இ.4.34 வரை |
| நட்சத்திரம் | : புனர்பூசம் மு.இ. 11.47 வரை |
| சுபநேரம் | : 06.03-07.33 வரை |
| ராகுகாலம் | : [illegible] வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபை
## பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
## பதவிகளுக்கான வெற்றிடம்

பனை அபிவிருத்திச் சபையின் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உதவி முகாமையாளர் (முகாமைத்துவமும், மனிதவளமும்)
02. உதவி முகாமையாளர் (அபிவிருத்தி)
03. உள்ளகக் கணக்காய்வாளர்

**01. உதவி முகாமையாளர் (முகாமைத்துவமும், மனிதவளமும்)**

கல்வித்தகைமைகளும் அனுபவமும்:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மனிதவள முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாக துறைப்படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் படிப்பும் அல்லது அதற்கு சமானமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 5 வருடகால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மனிதவள முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாக துறைப்படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்கு சமானமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 8 வருட கால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்.

**02. உதவி முகாமையாளர் (அபிவிருத்தி)**

கல்வித்தகைமைகளும் அனுபவமும்:

அங்கீகரிக்கப்பட்ட பலகலைக்கழகம் ஒன்றில் விவசாயத்துறையில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் படிப்பும் அல்லது அதற்கு சமானமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 05 வருட கால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயத்துறைப்படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்கு சமானமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அலலது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 8வருட கால நிறைவேற்றுத் தரத்தில் சேவை அனுபவம்.

ஏனைய தகைமைகள்:
★ முகாமைத்துவத்தில் சிறந்த திறமை
★ பனை சம்பந்தமான துறையில் அறிவு
★ மும்மொழிகளிலும் தேர்ச்சி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
★ கணினி அறிவு

**03. உள்ளகக் கணக்காய்வாளர்**

ACC/CIMA of U.K.அல்லது ICA of Sri Lanka இல் முழுமையாகப் பூர்த்திசெய்து தொழில் தகைமையில் 8 வருடகால நிறைவேற்றுத் தரத்தில் கணக்காய்வு சார்ந்த துறையில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கியல் அல்லது வர்த்தகத்துறையில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்குச் சமானமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 5 வருட கால நிறைவேற்று தரத்தில் கணக்காய்வு சார்ந்த துறையில் சேவை அனுபவம்.

**பொதுவானவை**

அ. வயது எல்லை:
50 வயதுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும். வயதெல்லையானது அரச/ பொதுத்துறை நிறுவனங்களில் சேவையில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

ஆ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:
MM1-1- ரூபா 25,640-3 X 665-7 X 735-15X925-46,655

இ. நியமனத்தின் தன்மை:
நிரந்தரமானது

ஈ. தேர்வு முறை:
விண்ணப்பதாரி சுயவிவரக்கோவை ஆய்வு, திறனாய்வு மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப் படுவார்.

உ. பொதுவான நிபந்தனைகள்:

I. தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை ஆவணங்களின் பிரதிகளுடன் "தலைவர்", பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.11.2010 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

II. அரச/ பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் அரச நிறுவனங்களில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்நிறுவனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் தனது மாதாந்தச் சம்பளத்தில் 8 சதவீதம் ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே 12 சதவீதமும், 3 சதவீதமும் சபை பங்களிப்புச் செய்யும்.

IV. பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமையும்.

V. மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளையும் தகைமைகளையும் உள்ளடக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பசுபதி சீவரத்தினம்
தலைவர், பனை அபிவிருத்திச் சபை
(சி/572191)


## பிரதேச செயலாளர்களுக்கு தம்புள்ளவில் பயிற்சி

நாவற்குழி, ஒக். 28

யாழ். மாவட்டத்தில் கடமை புரியும் பிரதேச செயலர்களுக்கு காணி நிர்வாகம் தொடர்பான இருநாள் பயிற்சிநெறி இன்றும் நாளை தம்புள்ளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறியானது காணி அமைச்சின் உயரதிகாரிகளால் தமிழ் மொழி மூலம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(201-121)

## பஸ்ஸில் மதுபானம்; இருபெண்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 28

சட்டவிரோதமாக மதுபானத்தை விற்பனைக்காக எடுத்துச் சென்ற வயதான பெண்கள் இருவர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி புறப்பட்ட பேருந்தினை சாவகச்சேரி பொலிஸ் புலனாய்வுக் குழுவினர் இடைமறித்துச் சோதனை மேற்கொண்டனர். இதன்போதே வயதான பெண்கள் இருவர் மதுபானப் போத்தல்களுடன் மாட்டிக் கொண்டனர்.

பெட்டி ஒன்றிற்குள் மதுபானப் போத்தல்களை வைத்து அதற்கு மேல் துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சோதனையின் போது பொலிஸார் அவற்றைக் கண்டு பிடித்தனர். அந்த இரு பெண்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

(த-313-311)

## கிளிநொச்சியில் செயலமர்வு

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மூலதனச் சந்தை தொடர்பான செயலமர்வுகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை தரம் 12, 13 ஆகிய உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் வணிகத்துறை மாணவர்களுக்கும், நண்பகல் 12 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், நாளைய தினம் வணிகத்துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு கிளிநொச்சி கல்வி வலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை வணிகத்துறை சார்ந்த பாடங்களின் செயலமர்வும் இடம்பெறும்.

இலங்கைபிணைகள் பரி மாற்று ஆணைக் குழு உத்தியோகத் தர்களால் இந்தச் செயலமர்வு நடத்தப் படவுள்ளதாக கிளி நொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.


# மரண அறிவித்தல்
## சங்கரப்பிள்ளை மதனசிங்கம்



விஸ்வகுல ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை மதனசிங்கம் நேற்று (27.10.2010) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராசமணியின் (சுசீலா)அன்புக் கணவரும், வனஜாவின் பாசமிகு தகப்பனும், கமலநாதன், மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, மகேஸ்வரி மற்றும் தங்கரத்தினம் காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (திருச்செல்வம்) ஆகியோரின் மைத்துனரும், குகநாதன், நிர்மலா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28/10/2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8 மணியளவில் கோரி யடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வனஜா (மகள்)
T.P.-0771972325

விஸ்வகுல ஒழுங்கை,
புலோலி வடக்கு, பருத்தித்துறை. (105209)



# ORIFLAME ஓரிபிலேம்

உயர்தரமான இயற்கையான தோல் மற்றும் அழகுசாதன உற்பத்திப் பொருள்கள்

★ நல்ல தோற்றம்.
★ மகிழ்ச்சியாக இருத்தல்.
★ பணம் சம்பாதித்தல்.

அனுமதி இலவசம்

இலகு அழகு செயற்திட்டம்
* தோல் பாதுகாப்பு
* தலைமுடி பராமரிப்பு
* நக மற்றும் கால் பாதுகாப்பு
* அழகுபடுத்தல்

முடிவில்லா வருமானம் மற்றும் வேலைவாய்ப்புக்கள்' (வருமானம் 3000/= தொடக்கம் 30,0000/= வரை )
* 5 நண்பர்களுடன் வருபவர்களுக்கு பரிசில்கள் உண்டு.

திகதி: 30 ஒக்டோபர் 2010
நேரம்: பி.ப. 2 மணி

இடம்: ஓரிபிலேம் அலுவலகம்,
187/80, பூனியன் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

NELUM WEERASURIYA T.P. 0212229832



# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
03.01.1938
உதிர்வு
23.10.2005
திதி:
அபரபக்க சஷ்டி

அமரர்
## வேலுப்பிள்ளை வேல்முருகு (மண்டலாய்)

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் அரச வைத்தியசாலை)

மாண்டு நீர் போயே மாநிலம் வெறுமையாகி
ஆண்டுகள் ஐந்தும் ஆனதோ ஐயா!
நீண்டிடும் வாழ்விலே நிலைத்திடும் ஐயா!
பூண்ட நின் உறவும் நினைவும்
பூதலம் எங்கும் வாழும்.

என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமக்கள்,
பேரன், சகோதரி

கட்டுக்கொம்பரை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி/572195)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள்

## பதிவு செய்யாதவர்களும் சாட்சியமளிக்க முடியும்

யாழ்ப்பாணம்,ஒக்.28

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வு யாழ்ப்பாணத் தில் நவம்பர் 11 ஆம் திகதி முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை நான்கு தினங்கள் இடம்பெற வுள்ளது.

இதற்கான புதிய அட்டவணையை யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் வெளியிட் டுள்ளார்.

நவம்பர் மாதம் 11 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 11 மணி வரை யாழ்.பிரதேச செயலர் பிரிவு மக்களுக்காக குருநகர் கலாசார மண்டபத்தில் அமர்வு இடம் பெறும். இதில் சாட்சியமளிக்க இதுவரை 28பேர் பதிவு செய் துள்ளனர். பி.ப 11.30 மணிமுதல் ஒருமணிவரை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு மக்களுக்காக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் அமர்வு இடம்பெறும். இதில் 27 பேர் சாட்சியமளிக்கப் பதிவு செய்துள்ளனர். பி.ப 2 மணி முதல் 5 மணி வரை கோப் பாய் பிரதேச செயலர் பிரிவு மக் களுக்காக நீர்வேலி கிராம முன் னேற்ற சங்க மண்டபத்தில் அமர்வு இடம்பெறும். இதில் 25 பேர் வரை சாட்சியமளிக்கப் பதிவு செய்துள்ளனர்.

நவம்பர் மாதம் 12 ஆம் திகதி காலை 9 மணி முதல் 12 மணி வரை தெல்லிப்பழை மற்றும் உடு வில் பிரதேச செயலக மக்களுக் காக அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் அமர்வு இடம் பெறும். இதில் 55 பேர் வரை சாட்சியமளிக்கவுள்ளனர். பி.ப.ஒரு மணிமுதல் 4 மணிவரை சண்டி லிப்பாய், காரைநகர், சங்கானை பிரதேச செயலக மக்களுக்காக சித்தங்கேணி மகளிர் அபிவிருத் திச் சங்க மண்டபத்தில் அமர்வு இடம்பெறும். இதன்போது 75 பேர் சாட்சியமளிக்கப் பதிவு செய் துள்ளனர்.

நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பி.ப 9 மணிமுதல் 12 மணிவரை பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலக மக்களுக்காக குடத்தனை தேவாலயத்தில் அமர்வு இடம்பெறும். இதில் 65 பேர்வரை சாட்சியமளிக்க பதிவு செய்துள்ளனர்.

பி.ப ஒரு மணிமுதல் 2.30 மணி வரை கரவெட்டிப் பிரதேச செயலக மக்களுக்காக நெல்லியடி முருகன் கோயிலில் அமர்வு இடம்பெறும். இதன்போது 30 பேர் சாட்சிய மளிக்க பதிவு செய்துள்ளனர். பி.ப.3.30 மணி வரை சாவகச்சேரி பிரதேச செயலக மக்களுக்காக சாவகச் சேரி கலாசார மண்டபத்தில் அமர்வு இடம்பெறும். 25 பேர் வரை சாட்சியமளிக்க பதிவு செய்துள்ளனர்.

நவம்பர் 14 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஊர் காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக ஊர்காவற் றுறை புனித அந்தோனியார் ஆல யத்தில் இடம்பெறும். இதில் 42 பேர் சாட்சியமளிக்கவுள்ளனர்.

பி.ப.ஒரு மணிமுதல் 4 மணி வரை வேலணை பிரதேச மக் களுக்காக மண்கும்பான் பிள்ளை யார் கோயில் கல்யாண மண்டபத் தில் அமர்வு இடம்பெறும். இதன் போது 25 பேர்வரை சாட்சிய மளிக்கப் பதிவு செய்துள்ளனர்.

ஏற்கனவே பதிவு செய்யாத வர்களும் அமர்வுகளில் சாட்சிய மளிக்க முடியும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (த-15)



ஜேர்மன் மொழி கற்கை வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வில் ஜேர்மன் பல்கலைக்கழக பேராசிரியர் மாரிவோன் பேக்மன் நாடாவெட்டி கற்கை நெறி நிலையத்தைத் திறந்து வைப்பதைப் படத் தில் காணலாம். (படம்:- அலுவலகச் செய்தியாளர்)

# தீவகத்தின் தரிசு நிலங்களில் விரைவில் மரநடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28

தீவகப் பகுதியில் குறிப்பாக அல்லைப்பிட்டி தொடக்கம் மண்கும்பான் வீதியின் வடக்குப் புறமாக தரிசு நிலமாகக் காணப் படும் பெருமளவு நிலப்பரப்பில் மரநடுகைத் திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருக்கும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறிக்கும் இடையிலான கலந்துரை யாடல் அண்மையில் இடம் பெற் றது. இக்கலந்துரையாடலிலே மேற் கண்ட விடயம் தொடர்பான தீர் மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் இடம்பெற்ற விடயங்கள் வரு மாறு:-

கோடை காலத்தில் கட்டாந் தரையாகவும் மாரி காலத்தில் வெள் ளக்காடாகவும் காணப்படும் இப் பிரதேசமானது எந்தவித பயனு மின்றியே காணப்படுகின்றது. இவ்வாறான மரநடுகைத் திட் டத்தை ஆரம்பிப்பதன் மூலம் சோலைப் பிரதேசமாக மாற்ற முடி யும்.

மேலும் சிறியளவிலான மண் திட்டுக்களை அமைத்து அவற் றில் பயன்தரு மரக்கன்றுகளை நட முடியும். இதன்மூலம் வெள் ளத்தால் ஏற்படும் பாதிப்புக்களை யும் குறைக்க முடியும்.

இந்தத் திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதெனவும் வேலணை பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் பொது மக்கள் ஆகியோ ரின் பங்களிப்புடனும் வட மாகாண சபையின் ஒத்துழைப் புடனும் மரநடுகைத் திட்டத்தை மேற்கொள்வதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(201-311)

# கீரிமலை நகுலேஸ்வரா மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனத்தால் சீருடைப் பொதி




சுன்னாகம்,ஒக்.28

யாழ்.எயிட் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் கீரி மலை நகுலேஸ்வர மகா வித்தி யாலயத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 26 பேருக்கு காலணிகளும், தைக்கப்பட்ட சீருடைப் பொதிகளும் வழங்கப் பட்டுள்ளன. கடந்த திங்கட் கிழமை பாடசாலையில் நடை பெற்ற நிகழ்வில் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், எயிட் நிறு வனத்தின் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர் வ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டு இவற்றை மாணவர்களுக்கு வழங் கினர்.

அண்மையில் இந்தப் பாட சாலையில் கல்வி பயிலும்138 மாணவர்களுக்கு இந்த அமைப் பினால் தைக்கப்பட்ட சீருடை கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (201-38)

# குருசோ வீதியின் வடிகாலில் தேங்கியுள்ளது கழிவு நீர்

## டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்



வலி.வடக்கு,ஒக்.28

யாழ்ப்பாணம், குருசோ வீதி யின் மேற்குப் புறத்தே அமைந் துள்ள கழிவு நீர் செல்லும் வாய்க் காலில் தேங்கும் கழிவுநீரால் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் நாளாந்தம் பல்வேறு சிரமங் களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

குடிமனைகள் நிறைந்துள்ள பகுதியில் மக்கள் குடியிருப்புக் களுக்கு ஊடாக இந்த கழிவு நீர் வாய்க்கால் செல்கின்றது.

இந்தக் கழிவு நீர் வாய்க்கால் சுமார் நானூறு மீற்றர் வரை ஆழ மாக வெட்டப்பட்டு குருசோ வீதியைக் கடந்து கடற்கரை நோக்கிச் செல்கின்றது. இது மணல் நிறைந்து கழிவு நீர் செல்ல முடி யாதவாறு தடைப்பட் டுக் காணப்படுகின் றது.

இதேவேளை குறிப்பிட்ட கழிவு வாய்க்கால் கடந்த ஒரு மாதத்துக்குள் யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர்களி னால் ஆழமாக்கப் பட்டு இடையில் கைவி டப்பட் டுள்ளது.

கொழும்புத்துறை வீதியில் இருந்து தெற்குப் புறமாகச் செல்லும் இந்தக் கழிவு வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நாற்றம் எடுப்பதுடன் நுளம்புகளின் பெருக்கமும் அதி கரித்துக் காணப்படுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்ற னர்.

டெங்கு ஒழிப்பில் அக்கறை காட்டும் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட பலர் யாழ்.மாநகர சபைக்கு இந்த விடயம்பற்றிகூறிய போதிலும் இதற்கான எந்தவொரு நட வடிக் கையும் மேற்கொள்ளப்பட வில்லை யென இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (201-86)

# சங்கானை மாளியவத்தை வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.28

பிரான்பற்று வீதியிலிருந்து பிரிந்து செல்லும் சிறு வீதியான மாளியவத்தை வீதி (செல்லை யார் வாத்தியார் வீதி) பல வருடங் களாகத் திருத்தப்படாமல் உள்ள வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதியைப் புனரமைப் புச் செய்வது தொடர்பாக வலி காமம் மேற்கு பிரதேச சபைக்குப் பல தடவைகள் அறிவித்தும் இது வரைக்கும் எந்தவித நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லை. அத் துடன் கடந்த 25 வருடங்களுக்கு முன்பு மேற்படி வீதி தார் ஊற்றி செப்பனிடப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் இற்றைவரைக் கும் எந்தவித புனரமைப்புப் பணி களும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் மாளியவத்தை வீதியிலிருந்து பிரிந்து செல்லும் விளிசுட்டி கிராமத்தின் சிறுவீதி சில மாதங்களுக்கு முன்பு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மக்கி மண் மூலம் செப்பனிடப்பட்டுள் ளது.

மழை காலங்களில் ஏனைய பகுதிகளிலிருந்து வரும் மழை வெள்ளம் இவ்வீதியைக் கடந்து தான் செல்கின்றது. எனவே இந்த விடயம் தெரிந்தும் கூட மக்கி மண்ணால் மேற்படி வீதி திருத்தப் பட்டுள்ளதால் வெள்ளம் வழிந் தோட முடியாத நிலையில் வீதி வெள்ளக்காடாக காட்சியளிக் கின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், வியா பாரிகள் மற்றும் கர்ப்பிணித் தாய் மார்கள் என பல்வேறு தரப்பட்ட வர்களும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே மழை காலங்களில் போக்குவரத்தை மேற்கொள்கின் றனர்.

எனவே மேற்குறித்த காரணங் களை கவனத்தில் எடுத்து இந்த வீதியை மக்கள் பாவனைக்கு உகந்த வீதியாகப் புனரமைத்துத் தரு மாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். (201)

## தவறவிட்ட மாடுகளை பெற்றுக் கொள்ளலாம்

சுன்னாகம், ஒக். 28

கட்டாக்காலி மாடுகள் இரண்டு உரிமை கோரப்படாத நிலையில் சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பராமரிப்பில் உள்ளன. தவற விட்ட மாடுகளின் உரிமையாளர்கள் மேற்படி சம் மேளனத்துடனோ, சுன்னாகம் தெற்கு கிராம அலுவலருடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (201-38)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, ஒக். 28

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்புத் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக் கிழமை பி.ப. 2 மணிக்கு நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (201-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## 'திருஞானம்' மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 28

சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையின் 'திருஞானம்' பவளமலர் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மண்ட பத்தில் அதிபர் செல்வி த. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தின ராக வாழ்நாள்பேராசிரியர்சி.தில்லை நாதனும் சிறப்பு விருந்தினர் களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப் பாளர் வெ.குபேரநாதன், இளைப் பாறிய அதிபர் பொ.கமலநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தின ராக வைத்திய கலாநிதி வை.சு. சண் முகநாதனும் கலந்து கொள்வர். (201)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலய முகா மைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல அதி பர்களும் 2011 ஆம் ஆண்டுக்குத் தேவையான வரவு இடாப்பு எண்ணிக்கையின் விவரங்களைக் கொண்டு வருமாறு கேட்கப்பட் டுள்ளனர். (த-204)

# உணவுக்கான வேலை மட்டுப்படுத்தப்பட்டதால் பயனடைந்து வந்த பல குடும்பங்கள் பாதிப்பு

வலி.வடக்கு, ஒக். 28

உலக உணவுத் திட்டத்தின் உணவுக்கான வேலைத்திட்டச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. இதனால் இத்திட்ட தின் கீழ் பயனடைந்து வந்த பல குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கடந்த 6 வருடங்களுக்கு பொது வீதிகள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் என்பன வற்றில் சிறிய வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்பட்டன. வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களால் கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இத்தகைய செயற்பாடுகளில் பொதுமக்கள் நாளாந்தம் 6 மணித் தியாலங்கள் ஈடுபடுத்தப்பட்ட னர். இதற்காக அரிசி,மா,சீனி, பருப்பு,தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தன.

இதேவேளை தற்போது உணவுக்கான வேலைத்திட்டத் தின் பயனாளிகளின் எண்ணிக் கையை மட்டுப்படுத்துமாறு உலக உணவுத்திட்ட நிறுவனம் அறிவித்துள்ளது. எனவே பல குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலைமைக்குள்ளானமை குறிப் பிடத்தக்கது.

(த-201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1237 நீலம்

சிங்கம் 03 09 10 11 26-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 8,448,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 241,228 | 20/- | 4,824,560/- |
| 2 இலக்கங்கள் | 22,201 | 40/- | 888,040/- |
| 1 இல. + லக்கினம் | 21,916 | 60/- | 1,314,960/- |
| 2 இல. + லக்கினம் | 1,993 | 200/- | 398,600/- |
| 3 இலக்கங்கள் | 590 | 1000/- | 590,000/- |
| 3 இல. + லக்கினம் | 54 | 10,000/- | 540,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,448,900/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,156,160/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 648 | | 622,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 288,633 | | 9,778,660/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,987,700/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 02 27 43 48

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 645 | 500/- | 322,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 648 | | 622,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பில் ஜக்பொட் ரூபா. 300,000/-

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஊடக வளங்கள் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 15.11.2010 திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கல்வி மற்றும் பிற தகைமைகள்**

1. க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் சித்தி
2. வயதெல்லை: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**கடமை விவரம்**

1. பணிபுரியும் அலுவலர்களுக்கு எல்லா அலுவலக கடமைகளில் உதவி புரிதல்.
2. ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் அலுவலகம், வகுப்பறைகள், ஏனைய பகுதிகளை சுத்தமாக பேணுவதும் தகுந்த முறையில் பராமரிப்பதும்
3. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்துக்கும் பிரதான பல்கலைக்கழக வளாகத்துக்கும் இடையேயான கடிதங்கள் மற்றும் ஆவணங்களைக் கையளித்தல்.
4. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளரினால் பணிக்கப்படும் இதர கடமைகளை நிறைவேற்றுதல்.

சம்பளம்: ரூபா 9000/= (நிலையானது) (மாதம் ஒன்றுக்கு)

தெரிவு:நேர்முகத் தேர்வின் மூலம்.

**பொதுவான நிபந்தனைகள்**

மேற்குறித்த நியமனம் முழுநேர ஒருவருட காலத்துக்கான ஒப்பந்தமாக இருக்கும்.நியமன காலத்தில் வழங்கப்பட்ட சேவை மற்றும் வேலைத்திறன் என்பவற்றின் திருப்திகர தன்மைகளைக் கொண்டு சேவை ஒப்பந்தம் புதுப்பித்து வழங்கப்படலாம்.

நியமனம் பெறுபவருக்கு ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் உதவு தொகை செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் பெறுவதற்கு மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளையில் அல்லது நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டுடன் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விசார் தாபனக்கிளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும்பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 100/= பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23×10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடாத விண்ணப்பங்களும் விண்ணப்பமுடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
27.10.2010 (சி/572197) யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ் முகாமையாளர் சம்மேளனமும் வடபிராந்திய பொறியியலாளர் சம்மேளனமும் இணைந்து நடத்துகின்ற தலைமைத்துவமும் வினைத்திறனும் பற்றிய கருத்தரங்கு நல்லூரில் அமைந்துள்ள 'யூரோவில்' மாநாட்டு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலாநிதி கே.குகதாசன் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-319)

## முன்னாள் சிப்பாய்க்கு விளக்க மறியல்

கொழும்பு,ஒக்.28

12 வயதுச் சிறுமியை வல்லுறவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாத்தறை பொலிஸ் சிறுவர் மகளிர் பணியகத்தால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்ட நீதிவான் உதேஷ் ரணதுங்கவின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சிப்பாயை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சிறுமியை ஏமாற்றிக் கடத்திச் சென்று சந்தேக நபர் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த விடயம் அம்பலமானதையடுத்து இச்சிறுமி பாடசாலையை விட்டு விலக்கப்பட்டார்.

இதுதொடர்பில் மாத்தறை சிறுவர் மகளிர் பிரிவுக்குக் கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-5)

## முதியோர் தினம்

கரவெட்டி,ஒக்.28

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர் மற்றும் மாற்று ஆற்றலுடையோர் தினம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி முன்னாள் உதவி அரசாங்க அதிபர் எஸ்.பத்தினிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக தியாகி அறக்கொடை நிறுவன உப தலைவர் என்.சுந்தரமூர்த்தி, பரமானந்தா ஆச்சிரமத்தின் தலைவி செல்வி செ.தம்பு ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-319)

## தென்மராட்சிப் பகுதியில் நெற்பயிர்கள் கருகும் நிலையில்

சாவகச்சேரி, ஒக். 28

தென்மராட்சிப் பகுதியில் சில இடங்களில் காலபோக நெற்பயிர்கள் வெயில் காரணமாக எரிந்து காய்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.இதே வேளை குளங்களை அண்டியுள்ள வயல் சொந்தக்காரர்கள் நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் வயலில் உள்ள நெற்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அதேவேளை சில விவசாயிகள் தமது வயல்களில் புல் பூண்டுகளை கட்டுப்படுத்தும் மருந்துகளை விசிறி வருகின்றனர்.மருந்து கலக்கி விசிறுவதற்காக உழவு இயந்திரத்தில் நீர் நிரம்பிய பரல்களை ஏற்றி வயல்வெளிக்குக் கொண்டு செல்கின்றனர். (ஒ-131)

### விற்பனைக்கு

32 - XXXX இலக்கமுடைய டீசல் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0773714828

### வீடு வாடகைக்கு

இல 67/42, சீனிவாசகம் வீதி, 2ஆம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.(வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடனும்) அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் கம்பனிகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-0777283811, 0770770529.

### தேவை

சிறிய அளவில் இயங்கும் அலுவலகத்துக்கு எழுதுவினைஞர் தேவை.யாழ்.நகரப் பகுதிக்கு அண்மையாக இருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 4086 பெ/வ உதயன்

## விழியொழுகும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 • 07 • 1927

மறைவு 28 • 10 • 2009

### அமரர் அந்தோனிப்பிள்ளை எலியாஸ்

கண்டி உயர் கல்லூரி முன்னாள் ஆசிரியரும்,
அரச மீன்பிடித் திணைக்கள பரிசோதகரும்
(31, Kandy Road, Jaffna & XB/1/1/2,National Housing Scheme.)
Edmonton Road, Kirulapone,Colombo - 06

ஆற்றொழுக்காய் அறிவுரைகள் கூறியெம்மை
ஆளாக்கி வைத்து விட்டு ஆழ்துயில் கொண்ட
பப்பா நேற்றோடு நீர் எமைப் பிரிந்து
ஆண்டொன்று ஆயிற்றா !
தேறாத நெஞ்சோடு விழி சொரிய வாழ்கின்றோம்
மாற்றங்கள் மண்ணுலகில் மலைபோல் வந்திடினும்
போற்றற்குரிய உம் புகழுடம்பு அருகாது அழியாது
வீற்றிருப்பீர் விமலன் பதம் விழுமிய புகழுடனே
விரும்பியுமை எந்நாளும் விழியெனவே வணங்கிடுவோம்.

என்றென்றும் நீங்காத நினைவுடன்
மனைவி, மகன்மார்,மகள்மார்,பேரப்பிள்ளை T.P-077 3413438

## நெஞ்சம் மறவாத 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்: 10.09.1946



அரன் திருவடியில்: 28.09.2010

### அமரர் முருகேசு சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற இ.மி.சபை ஊழியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது ஞாபக சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் நாம் அழைக்கத் தவறியிருப்பின் அதனை பெருமனத்துடன் மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிக பணிவுடன் வேண்டுகின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (105211) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### மருதலிங்கம்(வைரப்பிள்ளை) பார்வதி (கண்மணி)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாக் கொண்ட மருதலிங்கம்(வைரப்பிள்ளை) பார்வதி (கண்மணி) கடந்த 26.10.2010 செவ்வாய்க்கிழமை குமரகோட்டம், கோண்டாவிலில் காலமாகிவிட்டார்.

அன்னார் மருதலிங்கத்தின் அன்பு மனைவியும், கந்தையா-இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், கணபதிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அருமை மருமகளும், சின்னத்தம்பி, கந்தசாமி, முருகையா, மகேந்திரன்(ஜேர்மனி)பானுமதி, பாமாவதி (ஜேர்மனி), சிவதர்சினி, குகதாசன், குகதீசன் (கனடா) காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வரத்தினம், நவரத்தினம், மகாலிங்கம், சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சங்கர்லால் (இந்தியா), சுந்தர்லால் , ஆனந்தலால் (ரிப்ரொப் உணவகம், சுன்னாகம்), மதன்லால், சுமன்லால் ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவதர்சினி, சர்மினி, ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், முகேஷ், வினா, சஞ்சய், மினிசா, கஜிந்தன், மிதுசன், சுதர்சனா, நிதர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(29.10.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குமரகோட்டம்,
கோண்டாவில். (105209) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் இடமாற்றம்; அதிபர்களும், உத்தியோகத்தர்களும் பணிப்புறக்கணிப்பு

கிளிநொச்சி,ஒக்.28

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வலயக் கல்விப் பணிமனையின் உத்தியோகத்தர்களும், பெரும்பாலான பாடசாலை அதிபர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்த நிலையில் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் வலயக் கல்வி அலுவலகத்தின் முன் கூடிய இவர்கள் தமது பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர். அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு மகஜர் ஒன்றைத் தயாரிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

இடமாற்றம் வழங்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இன்னமும் 8 மாதங்களே உள்ள நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டமை விதிகளுக்கு ஏற்புடையதல்ல என்றும் அங்கு கூடிநின்றவர்கள் கூறினர்.

பணிப் புறக்கணிப்பு தொடர்பாகக் கேள்விப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து புறக்கணிப்பில் ஈடுபட்டவர்களுடன் உரையாடினார்.

இந்தப் பணிப் புறக்கணிப்பின் போது வலயக் கல்வி அலுவலகம் மூடியிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (க-301)



கிளிநொச்சி, உருத்திரபுரம் திருக்குடும்ப கன்னியர்மட மாணவர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

# முன்பள்ளிச் சிறுவர்களுக்கு இன்று சுகாதாரப் பொருள்கள் வழங்கல்

பளை,ஒக்.28

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 13 முன்பள்ளிப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறார்களுக்கு இன்று வியாழக்கிழமை சுகாதார சேவைத் திணைக்களத்தினரால் பற்தூரிகையும் பற்பசையும் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார சேவைத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையின் போது 90 வீதமான சிறார்கள் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு ஆளாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவர்களது எதிர்கால நலனில் அக்கறை கொண்ட தால் இதனை வழங்க முன்வந்துள்ளோம். சிறார்களுக்கு ஆண்டு தோறும் இரு முறை இதனை வழங்கவுள்ளோம் எனப் பச்சிலைப்பள்ளி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மு.குணரட்ணம் தெரிவித்தார்.

இதற்குத் தேவையான நிதியுதவியை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்கியுள்ளது. (க-311-313)

# சவாரி மாடுகளுக்கு அனுமதியில்லை; போட்டியாளர்கள் பெரும் ஏமாற்றம்

வட்டக்கச்சி,ஒக்.28

கடந்தவாரம் யாழ்ப்பாணம், மட்டுவிலில் நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிக்கு மாடுகளைக் கொண்டு செல்ல கிளிநொச்சி மாவட்ட மிருக வைத்தியரால் அனுமதி மறுக்கப்பட்டதால் போட்டியாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக வட்டக்கச்சி சவாரிச் சங்கத்தை சேர்ந்த கலை என்பவர் தெரிவிக்கையில், சவாரிப் போட்டியில் கலந்துகொள்ள மாடுகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை கமக்கார அமைப்பு, கிராம அலுவலர், காவல்துறை ஆகியோரிடம் பெற்றிருந்தோம். இறுதியாக மிருக வைத்தியரிடம் அனுமதி பெறுமாறு எமக்குக் கூறப்பட்டது. இதன் பிரகாரம் மிருக வைத்தியரிடம் அனுமதி பெறச் சென்றபோது அரச தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பணிப்புக்கமைய அனுமதி வழங்க முடியாதுள்ளது என மிருக வைத்தியர் தெரிவித்தார். இதனால் சவாரிப் போட்டியில் எமது காளைகள் கலந்து கொள்ள முடியாது போய்விட்டது. மன்னார், முல்லைத்தீவு சவாரியாளர்கள் போட்டிக்குச் சென்ற போதும் எம்மால் கலந்து கொள்ள முடியாது தடை செய்யப்பட்டுள்ளது.

மாடுகளை வன்னிக்கு வெளியே கொண்டு செல்வதற்கு உள்ள நடைமுறை நன்மையானது. எனினும் சவாரிப் போட்டிக்குக் கொண்டு செல்லும் மாடுகளுக்கும் அதே அனுமதி மறுப்பு நமது கிராமிய விளையாட்டுக்களைப் பாதிக்கின்றது - என்றார்.

வட்டக்கச்சி மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்ததாக நீண்ட காலமாகவே மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் உள்ளன. அதற்கென அவர்கள் காளைகளைப் பராமரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-301)

# ஒட்டுசுட்டானில் நடமாடும் சேவை

ஒட்டுசுட்டான்,ஒக்.28

ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க பணிமனையினரால் இப்பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு நடமாடும் சேவையொன்று வழங்கப்பட்டது.

கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்த நடமாடும் சேவை வழங்கப்பட்டது. இதில் புதிதாகத் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல், வயோதிபர் அடையாள அட்டை விநியோகித்தல், பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளல் போன்ற சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த துறை சார் உத்தியோகத்தர்கள் காலை முதல் மாலை வரை இந்த நடமாடும் சேவையை மக்களுக்கு வழங்கினர்.

இதேவேளை தமது தொலைந்த காணி உத்தரவுப் பத்திரங்களைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு மக்கள் நடமாடும் சேவையின் போது வேண்டுகோள் விடுத்தனர். (க-341)

# வேம்படுகேணி, இத்தாவில், முகமாலை, கிளாலி பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர இரண்டு வருடங்கள் எடுக்கும்

## — அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார் —

பளை,ஒக்.28

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியைச் சேர்ந்த வேம்படுகேணி, இத்தாவில், முகமாலை, கிளாலி ஆகிய பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு இன்னும் 2 வருடங்களாவது ஆகுமென பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பளை கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் ''உயர்பாதுகாப்பு வலயம்'' என்று எதுவும் கிடையாது. அடர்த்தியான இப்பிரதேசங்களில் அதிகமான மிதிவெடிகள் காணப்படுவதால் மக்களின் பாதுகாப்புக் கருதி அவற்றை முற்றுமுழுதாக அகற்றுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. எனவே இப்பிரதேசங்களில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் செல்லும் வீதிகளைப் புனரமைப்புச் செய்து மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டினை மேற்கொள்வதற்கு வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரீன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ரி.முகுந்தன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரும் விசேட ஆணையாளருமான சி. சிவப்பிரகாசம், பச்சிலைப்பள்ளி மேற்கு ஒன்றியத் தலைவர் செ.மார்க்கண்டு, மாகாண தெங்குச் செய்கை உரிமையாளர் சங்கத்தலைவர் மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதே குழுவினர் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள்.

இதன் போது கச்சார்வெளி, அல்லிப்பளை, அரசர்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 50 சைக்கிள்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்குவார். (க-313- 311)

# சைக்கிள்கள் இல்லாத காரணத்தால் நடந்து செல்லும் பாடசாலை மாணவர்கள்

ஒட்டுசுட்டான்,ஒக்.28

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் பிள்ளைகள் சைக்கிள்கள் இல்லாத காரணத்தால் பாடசாலைகளுக்கு நடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

குறிப்பாக க.பொ.த.சாதாரண தரம், உயர் தரம் ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலைகளில் சைக்கிள்களுக்கான பதிவுகளை மேற்கொண்டபோதும் அவை இன்னமும் வழங்கப்படவில்லை.

தற்போது தம்மிடம் சைக்கிள்கள் வாங்குவதற்கான வசதிகள் இல்லாததால் தமது பிள்ளைகள் கஷ்டப்படுவதாக இவர்கள் தெரிவித்தனர். நெடுந்தூரம் சென்று கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் திரும்பி வரும் வரையில் கவலையுடன் காத்திருப்பதைக் காண முடிகின்றது. ஆகவே இந்தப் பிள்ளைகளின் அவல நிலையை உணர்ந்து ஏதாவது ஒரு நிறுவனம் உதவ வேண்டுமென இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். (க-341)

# 'என்றிப்' நிறுவன வேலைத்திட்டம் நிறுத்தம்; திருத்தப் பணிகள் அரைகுறை நிலையில்

ஒட்டுசுட்டான்,ஒக்.28

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 'என்றிப்' நிறுவனத்தின் காசுக்கான வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதால் வீதிகள், ஒழுங்கைகளின் திருத்த வேலைகள் அரைகுறையுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் 'என்றிப்' நிறுவனத்தின் காசுக்கான வேலைத்திட்டம் நடைபெற்றபோது மக்களுக்குப் பணம் கிடைத்ததோடு பல வருடங்களாகத் திருத்தப்படாத வீதிகள், வாய்க்கால்கள், குளங்கட்டு வேலைகள் என்பன சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த நிறுவனம் தற்போது தனது வேலைத் திட்டத்தை நிறுத்தியதால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் அரைகுறையில் நிற்கின்றன.

ஆகவே இந்த நிறுவனம் தனது வேலைத் திட்டத்தை மீண்டும் ஆரம்பித்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-341)




# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

## சரவணபவன் எம்.பியின் முன் மொழிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்ட நிதியிலிருந்து 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு வழங்கியுள்ளார்.

அவர் வழங்கிய உதவித் திட்டங்களும் அவற்றின் தொகையும் வருமாறு:-

**கரைச்சிப் பிரதேச செயலகம்**

★ வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ திரேசா பெண்கள் பாடசாலைக்கு பக்ஸ், போட்டோக் கொப்பி இயந்திரம் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா

★ திருவையாறு மயூரன் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ ஐயனார் புரம் கலைவாணி முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் முன்பள்ளிக்கு கற்றல் உபகணரங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ மணியங்குளம் ஐயனார் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் -10 ஆயிரம் ரூபா

★ கோணாவில் கரிகாலன் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ இராமநாதபுரம் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் -10 ஆயிரம் ரூபா

★ இரத்தினபுரம் சுஜித் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ ஆனை விழுந்தான் காசிம் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ ஊற்றுபுலம் கிறிஸ்து அரசன் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ சுபாஸ் கொலணி சுபாஸ் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா

★ கனகாம்பிகை அம்பாள் ஆலயத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா

★ கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

**கண்டாவளை**

★ தருமபுரம் மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ கரவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ கண்டாவளை மகாவித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா

★ குமாரசாமிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா (201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம்

சரியானதா → ← தவறானதா

இன்றைய உலகில் எமது நாட்டில் தொழில் வாய்ப்பின்மை, பட்டதாரிகள் படித்துவிட்டு வேலை தேடி அலைகின்றார்கள். இளம் சந்ததியினர் உழைத்து வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கிறார்கள். அரசாங்கமோ வேலையைக் கொடுக்கமுடியாமல் திண்டாடுகிறது. காரணம் பணவீக்கம், நாட்டிலே சகல துறையிலும் பொருளாதார மந்தநிலை. இந்தக் காரணங்களால் வாழ்க்கையில் சலிப்புற்று இளம் சமுதாயத்தினர் வெளிநாடு சென்று வேலை தேடுவது தவிர்க்க முடியாததொன்று. வெளிநாடுகளுக்குச் செல்லும் இளைஞர்கள் வேலையைப்பற்றி கவலைப்படுவதில்லை. என்ன வேலையானாலும் பரவாயில்லை. பணம் சம்பாதித்தால் போதும் என்ற நம்பிக்கையில் பணிபுரிகின்றார்கள். குறுகிய காலத்தில் தனது நிலையில் உயர்வடைந்து பொருளாதாரத்தில் மேம்பாடடைகிறார்கள். தனது குடும்பத்தை ஏனையோருக்கு நிகராக உயர் நிலைக்குக் கொண்டு வருகிறார்கள். மண்குடிசையில் வாழ்ந்த குடும்பம் இன்று மாடிமனையில் வாழ்கிறார்கள். அன்றாடம் கஞ்சிகுடித்த ஏழைக் குடும்பம் இன்று நான்கு பேர் மதிக்கத்தக்கதாக வாழ்க்கையில் உயர்ந்து நிற்கிறது. இதற்கு காரணம் வெளிநாட்டு வேலை வாய்ப்பே. இது ஒரு சரியான முடிவாகும்.

கந்த -ஞானமுத்து,
கைதடி மேற்கு 2




காற்றுப்புக முடியா கொள்கலன்களிலும், சரக்குக் கப்பல்களிலும் உயிரை வெறுத்து வெளிநாடு செல்ல முயன்று உயிரை விட்டவர்களும், பிடிபட்டு சிறைவாசம் அனுபவிப்பவர்களும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளனர். இந்தவெளிநாட்டு மோகம் எமது பாரம்பரியம், கலாசாரம் என்பவற்றை சின்னாபின்னமாக்குவதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. இணையத்தினை பயன்படுத்தி முகம் பார்த்துக்கதைப்பதற்கும், Faccbook பார்ப்பதற்கும் என மக்கள் தமது நேரத்தை வீணடிக்க முயற்சிப்பதன் காரணமாக இணையத்தள நிலையங்கள் புதிது புதிதாக எமது வாழ்வை சீரழிக்க பல்வேறு கவர்ச்சிகரமான சலுகைகளில் வெளிவந்த வண்ணமுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாணவர்களும் பல துர்நடத்தைகளில் ஈடுபட்டு அவர்களது எதிர்காலத்தையே குழிதோண்டிப் புதைக்கின்றனர். அதுமட்டுமல்லாது வெளிநாட்டு உடைகளின் இறக்குமதி, எயிட்ஸ், நீலப்படங்கள், மதுக்கலாசாரம், போதைவஸ்துப் பாவனை என்பன காலங்காலமாக பேணிப்பாதுகாக்கப்பட்ட எமது தனித்துவமான பண்பாட்டை அழிவடைய செய்து வருகின்றது.

இந்தியர்கள் 'பாரதமாதா' என்று தமது நாட்டின் மீது கொண்ட விசுவாசத்தைப் போல் எம்மால் எமது தாய் நாடான இலங்கையை ஏன் நேசிக்க முடியவில்லை? இளம் சந்ததியினர் ''தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று வேற்று நாடுகளைத் தேடி ஓடுவதில் குறியாக இருந்தால் எவ்வாறு தான் எமக்கு நாட்டுப்பற்று ஏற்படும்? ஒவ்வொரு மனிதனும் தத்தமது நாட்டினை பெற்ற தாய்க்கு ஒப்பாக நினைத்தால் வெளிநாடு என்பது கசப்பான உண்மையாகிவிடும். வெளிநாடு செல்லுவதால் இலைமறைக்காயாக சில நன்மைகள் காணப்பட்டாலும் பெருமளவிற்கு தீய விளைவுகளையே உண்டு பண்ணுகிறது. பெற்றோர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று எச்சில் கோப்பை கழுவுவதும், கழிவறை துப்புரவாக்குவது தான் எதிர்கால இலட்சணமா? பிள்ளைகள் படும் கஷ்ரங்களை விளங்காமல் இங்கு அவர்களின் பணத்தில் பெருமையாய் குளிர்காய்பவர்கள் தான் எத்தனை பேர்? சொந்த மண்ணை விட்டு அனாதைகள் போல் வெளிநாடு செல்லும் இளம் சந்ததியினரை அங்குள்ளவர்கள் அற்ப புழுவிலும் கேவலமாக நடத்தி குறைந்த ஊதியத்தில் அவர்களின் உழைப்பை பல வகையிலும் சுரண்டுகிறார்கள். பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களும், மணப்பெண்களாக முகவர்களும் செல்பவர்களும் தமது எதிர்காலத்தைத் தொலைத்து விட்டு சீரழிந்து நிற்கிறார்கள். உறவுகளைப் பிரிந்து தாய் மண்ணை மறந்து-துயரமே வாழ்க்கை என அடிமைகளைப் போல் அன்னிய தேசத்தில் நிம்மதியற்று வாழும் கேவலமான இயந்திர வாழ்க்கை என்பது இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவசியம் தேவை தானா?

எனவே எதிர்காலத்தை வளமாக்குவதாகக் கூறி வெளிநாட்டிற்கு சென்று தமது தலையிலே மண்ணள்ளிப் போட்டு ஒளிமயமான எதிர்கால வாழ்கையை நரகமாக்காமல் எமது இளம் சந்ததியினர் எமது நாட்டுக்காக ஒன்று திரண்டு உழைத்தால் எமது நாடு '' மூன்றாம் மண்டலம்'' என்ற நிலையிலிருந்து விடுபட்டு அபிவிருத்திப் பாதையை நோக்கி வெகு விரைவில் பயணிக்கும் என்பது கண் கூடு.

செல்வராசா கலைவாணி,
கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி.

## பயமின்றி பரீட்சையை எதிர்கொள்ள

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நீங்கள் ஒரு விஷயத்தைப் புதிதாகக் கற்றுக் கொள்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பாடப் புத்தகத்திலிருந்தோ அல்லது ஆசிரியரிடம், நண்பர்களிடம் கேட்டு அறிந்தோ அல்லது புத்தகங்களில் படித்தோ அந்த விடயத்தை நன்றாகத் தெரிந்து கொள்கிறீர்கள். நான்கு நாள்கள் கழித்து நான் உங்களிடம் வந்து, 'இந்த விடயத்தைப் பற்றி எனக்குச் சொல்' என்று கேட்கின்றேன்.

இப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? 'ஆஹா' என்று உற்சாகமாக எனக்குச் சொல்லித் தருவீர்களா? அல்லது, 'எனக்கு அந்த விடயம் தெரியும். ஆனால், அதை இன்னொருவருக்குச் சொல்லித் தரத் தெரியாது' என்று சொல்வீர்களா?

ஒரு பாடத்தை நீங்கள் நன்றாகப் படித்துத் தெரிந்து கொள்வது மட்டும் போதாது. அதை மற்றவர்களுக்குத் தெளிவாகவும் விரிவாகவும் விளங்கிச் சொல்லும் அளவுக்கு நீங்கள் ஊன்றிக் கற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அதனால் யாருக்குப் பயன்? நீங்கள் இவ்வளவு தூரம் படித்தது வீண்.

ஒரு பூ, செடியில் பிரமாதமாகப் பூத்திருக்கிறது. அழகான வண்ணத்தில் ஜொலி ஜொலிக்கிறது. ஆனால், நெருங்கிப் பார்த்தால், அந்தப் பூவிலிருந்து துளி வாசனை இல்லை. இப்போது, யார் அந்தப் பூவை அணிந்து கொள்வார்கள்? இத்தனை பெரிய மலரால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லாமல் போகிறதில்லையா? அது தான் நீங்கள் படித்ததை அடுத்தவர்களுக்குச் சொல்லித் தர முடியாவிட்டால், அந்தப் படிப்பு வீண் என்கிறார் திருவள்ளுவர்.

ஜனனி சடாச்சரசோதி 10D
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

*(வளரும்)*

## எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நாம் இன்று விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விஞ்ஞானம் பல்லாயிரக் கணக்கான அதிசயங்களை தினம் தோறும் படைத்துக் கொண்டே இருக்கிறது. அவற்றில் சில நம் வாழ்நாளில் காணாதவையாகவும் ஆச்சரியம் மிக்கனவாகவும் அமைகின்றன. அவை மனித சமுதாயத்துக்குப் பயன்தர வேண்டுமென்ற நல்நோக்குடன் அறிவியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைகளாக இருந்தாலும் சில ஒரு தீய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன எனக் கூறலாம். விஞ்ஞான விந்தைகள் ஆக்கத்திலும் மட்டுமன்றி அழிக்கக் கூடிய விந்தைகளாக விளங்குகின்றது. மனித சமுதாயம் விஞ்ஞான விந்தைகளை ஆக்க பூர்வமான செயல்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அழிவு வேலைகளுக்குப் பயன்படுத்துதல் கூடாது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பற்பலவாயினும் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக முதல் நிலை பெறுவது மின்சாரக் கண்டுபிடிப்பாகும். தோமஸ் அல்வா எடிசனின் அயராத உழைப்பின் பேறாய் கண்டறியப்பட்ட மின்சாரம் இன்று உலகனைத்துக்கும் பயன் தருகின்றது. மின்சாரம் இன்றி இன்றைய நாடுகள் இல்லையென்ற நிலை உருவாகி விட்டது. உலகில் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் மின்சாரம் பெரிதும் பயன்படுகின்றது. பல வியக்கத்தக்க சாதனங்களை இயக்கி இவ்வுலகத்தினை இயந்திர உலகாக்கி வருவது அளவிட அரியதாகிவிட்டது. *(வளரும்)*

ஷாலினி, மட்டுவில்

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

**இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை.**

சரியானதா ☐ தவறானதா ☐

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
அடையாள அட்டை இல.........................

உங்கள் தீர்ப்புகளை 25.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

'விவாதமேடை' விவாதங்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும். தொடர்ந்து விவாத மேடைக்கு உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். வாக்கு எண்ணிக்கையின் முடிவின்படி எந்த அணி வெற்றி பெற்றது என்பதனையும் சிறந்த ஆக்கமாக தேர்ந்தெடுக் கப்பட்ட விவாதத்தை அனுப்பியவரின் பெயரையும் அடுத்தவார இளவல்கள் வட்டத்தில் எதிர்பாருங்கள்.

## விவாதமேடை

சரியானதா **இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை** தவறானதா

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை சரியானதா, தவறானதா என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.




## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார சீரழிவுகளிலிருந்து எமது சமுதாயத்தைப் பாதுகாக்க மாணவர்கள் அவதானமுள்ளவர்களாகச் செயற்படவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 28

''கலாசார சீரழிவுகளிலி ருந்து எமது சமுதாயத்தைப் பாது காக்க, மாணவர்கள் மிகவும் அவ தானமுள்ளவர்களாகத் திகழ வேண்டும்.''

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினரான பா.அரியநேத்திரன்.

நேற்றுமுன்தினம்மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த வேண்டு கோளை விடுத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் மே மாதத் திற்குப் பின்னர், நாட்டில் இடம் பெற்றுவந்த யுத்தம் ஓய்ந்துள்ளது. இது கல்வி கற்பதற்கான ஒரு சூழ லைத் தோற்றுவித்தாலும், மறு புறம் தீய சக்திகள் எமது கலா சாரத்தைச் சீரழிப்பதற்கு பாட சாலை மாணவர்களைப் பயன் படுத்துகிறார்கள்.

மாணவர்கள் வெளியில் சென்று வருவதற்கான அச்சமற்ற நிலை நீங்கியுள்ளது என அவர்களின் பெற்றோர்கள் நினைப்பதும் இதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

முன்பிருந்ததைவிட தற்போது தான் தமிழ் மக்களாகிய நாம், குறிப்பாக பாடசாலை மாணவர் கள் மிகவும் அவதானமாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஏனெனில், சில தீய சக்திகளால் திட்டமிட்ட வகையில் எமது சமு தாயத்தை பூண்டோடு அழிக்கும் வகையினாலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக கலாசார சீர்கேடு கள் மற்றும் நில ஆக்கிரமிப் புக்களைக் குறிப்பிடலாம். ஆனால், நாம் அனைவரும் அவதானமுள் ளவர்களாக இருந்தால் எல்லாவற் றையும் முறியடித்து எமது வளங் கள் அனைத்தையும் எதிர்கால சந் ததியினருக்கு ஒப்படைக்கலாம்.'' - என்றார். (சி)



கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ. குகதாசன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் ந. தயாளன் நிற்பதை யும் படத்தில் காணலாம். (135)

# மதவிவகார அமைச்சின் அனுமதியின்றி வழிபாட்டுத் தலங்களை அமைக்க முடியாது

## பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

நாட்டின் எந்த ஒரு இடத்தி லும் மதவிவகார அமைச்சின் அனுமதியின்றி வழிபாட்டுத் தலங்களை அமைக்க முடியாது என பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கந்தளாயில்கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன் றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இடம், சூழ்நிலை என்பவற்றைக் கருத்திற்கொள் ளாமல் நாட்டின் பல பகுதிகளி லும் வழிப்பாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது சமூகத் தளம்பலுக்கு வழி ஏற்படுத்தலாம் எனவும்,

எனவே, வழிபாட்டுத் தலங் களை அமைப்பதற்கு முன்னர் அது தொடர்பான விண்ணப்பங் கள் பரீசிலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் வழிபாட்டுத் தலங்களை அமைப்பது தொடர் பான சுற்றறிக்கைகளை அரச அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என அவர் மேலும் தெரி வித்தார்.

அதேவேளை, நேற்று முன் தினம் மாலைதிருகோணமலை கிண் ணியாப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த பிரதமர் கிண்ணியா பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் வைத்து திருகோணமலை மாவட்டத்தில் நான்கு பள்ளிவாசல்களைப் புனர மைப்பதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளித்தார். (சி)




யாழ்ப்பாணம் அரிமாக் கழகத்தின் ஐக்கிய நாடுகள் தினம் அண்மையில் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவத்சலன் உட்பட ஐ.நாவின் உத்தியோகத்தர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (204)

# அரச சிறுவர் நாடக விழாவில் தமிழ் நாடகங்கள் புறக்கணிப்பு

## அதற்கான அமைப்பின் தலைவர் மித்ரத்ன விசனம்

கொழும்பு, ஒக்.28

கலாசார அமைச்சு வருடாந் தம் நடத்தும் அரச சிறுவர் நாடக விழாவில் தமிழ்ச் சிறுவர் களின் நாடகங்கள் சேர்த்துக் கொள்ளப் படாதது ஏன் எனக் கேள்வி எழுப் பப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து 15 வருடங்களாக நடை பெற்றுவரும் அரச சிறுவர் நாடக விழாவில் தமிழ்ச் சிறுவர் நாட கங்கள் புறக்கணிக்கப்பட்டு வந் துள்ளன.

2010 ஆம் ஆண்டு அரச சிறு வர் நாடக விழாவில் கலந்து கொள்வதற்காக 40 விண்ணப் பங்கள் கிடைத்தன எனக் கலாசாரத் திணைக்களம் அறிவித்தது.

இருந்தும் விழாவில் தமிழ் நாடகங்களுக்கு சந்தர்ப்பம் வழங் கப்படாமல் அவை முற்றாக ஒதுக் கப்பட்டன என ''அரச தமிழ்ச் சிறு வர்களுக்கான நாடகவிழா வெற்றி பெறுவதற்கான" அமைப்பின் தலை வர் கே.மித்ரத்ன விசனத்துடன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் "உதயனு" க் குத் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் கடந்த மூன்று தசாப் தங்களாக நடைபெற்றுவந்த யுத் தம் முடிவடைந்து விட்டது. நாட்டில் தற்போது தமிழ் - சிங்கள மக்களி டையே சுமுகமான உறவு நிலவு கின்றது.

சிறுவர்கள்தான் எமது நாட்டின் நாளைய தலைவர்கள். எனவே, அவர்கள் சிறுவயதிலேயே புறக் கணிக்கப்பட்டால் அவர்களது முயற்சிகள் - அபிலாஷைகள் சிறு வயதிலேயே முடங்கிவிடும்.

நாடு இரண்டுபடும் அச்சம் இருப்பதால் அரசு தமிழ்ச் சிறுவர் களுக்கு அன்பைக் காட்டவேண் டும் என்பதை நாம் அரசுக்கு 2003 ஆம் ஆண்டே அறிவித்தி ருந்தோம்.

எனினும், அப்போது அமைச் சுக்குப் பொறுப்பாகவிருந்த வர்கள் இது குறித்து கரிசனை காட்டவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இது குறித்து எமது அமைப்பு அறிவித் தது. அவர் சிறுவர் நாடக விழாவை வெற்றிபெற வைப்பதற்காக எம் முடன் இணைந்துள்ளார். இதை யடுத்து மேற்படி விடயம் தொடர் பாக ஆராயப்பட்டது - இவ்வாறு மித்ரத்ன தெரிவித்தார். (சி)

### மட்டு. செட்டிபாளையத்தில் 20 வருடங்களாக

# பொதுமக்களின் வீடுகளில் முகாமிட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் வெளியேற்றம்

மட்டக்களப்பு, ஒக். 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரிவுக்குட் பட்ட செட்டிபாளையம் பகுதி யில் கடந்த 20 வருட காலமாக முகாமிட்டிருந்த பொதுமக்களின் வாழ்விடங்களில் விசேட அதிர டிப் படையினர் வெளியேறிச் சென்றுள்ளனர்.

சுமார் 25 பொதுமக்களின் வீடுகள் கொண்ட காணிகளை யும் நெசவு நிலையங்களுக் குரிய கட்டடம் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்துக்குரிய கட்டடங்களிலும் 1990 ஆம் ஆண்டில் இருந்து அதிரடிப் படையினர் முகாம் அமைத்திருந் தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நட வடிக்கைகள் இராணுவத்தின ரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளதைத் தொடர்ந்து விசேட அதி ரடிப் படையினர் இப்பகுதியில் இருந்து விலகிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினர் வெளியேறிச் சென்றதும் அப் பகுதி மக்கள் தமது காணிகளை துப் புரவு செய்து வருகின்றனர். (ஒ)

# கொழும்பு மாநகர மேயரின் வாசஸ்தலத்தில் தங்கியிருக்கும் முன்னாள் மேயர் 2ஆம் திகதிக்குள் வெளியேற்றப்படுவார்

## கொழும்பு மாநகர விசேட ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

''கொழும்பு மாநகர மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தி லிருந்து வெளியேறாது - தொடர்ச் சியாக வசித்து வரும், முன்னாள் மேயரான இம்தியாஸ் முஹமட், எதிர்வரும் 2ஆம் திகதி சட்ட ரீதி யாக வெளியேற்றப்படவுள்ளார்''

- இவ்வாறு கொழும்பு மாநகர விசேட ஆணையாளரான ஓமர் காமில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் மேயர் இம்தியாஸுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் ஓமர் காமில் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து முன்னாள் மேய ரான இம்தியாஸ் கூறியவை வரு மாறு:-

''என்னை எவராலும் மேயர் வாசாஸ்தலத்திலிருந்து வெளி யேற்ற முடியாது.

''ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவோ, மேல் மாகாண ஆளு நர் அலவி மௌலானாவோ அல் லது முதலமைச்சர் பிரசன்ன ரண துங்கவோ இவர்களில் எவராவது ஒருவர் என்னை வெளியேறும் படி கூறினால் மாத்திரமே நான் வெளியேறுவேன். அதுவரை வெளியேறமாட்டேன்.

''மேயர் வாசஸ்தலத்திற்குரிய மின் கட்டணம் மற்றும் நீர் கட் டணம் போன்றவற்றை செலுத்து வதை தற்போது கொழும்பு மாந கர சபை நிறுத்தியுள்ளது. இது எனக்கு எதிராக மேற்கொள்ளும் ஒரு சதி நடவடிக்கையே'' - என்றார். (சி)

### கொழும்பு நகரில் வாழும் மக்களின்

# முடுக்குக் குடியிருப்புகள், பலகை வீடுகள் அகற்றப்பட்டு அவர்களுக்கு தொடர்மாடிகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்

## அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

கொழும்பு நகரிலுள்ள முடுக்கு குடியிருப்புக்கள் மற்றும் பலகை யிலான வீடுகள் அகற்றப்படும். இவைகளில் வசிப்போருக்கு நிரந்தரமான தொடர்மாடி வீடு கள் நிர்மாணித்துக் கொடுக்கப் படும்.

- இவ்வாறு பொறியியலாளர், வீட மைப்பு, பொதுவசதிகள் அமைச் சர் விமல் வீரவன்ஸ தெரிவித் தார்.

அம்பாறை நகர மண்டபத் தில் இடம்பெற்ற 500 குடும்பங் களுக்கான வீடமைப்புக் கடன் மற்றும் வீட்டுப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் மேற்கண்டாவறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:-

கொழும்பு நகரிலுள்ள முடுக் குக் குடியிருப்புகள் மற்றும் பல கைகளிலான வீடுகள் அகற்றப் பட்டு, அக்காணிகளை வெளி நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கி நவீன முறையிலான வீடுகள், விடுதிகள், மெகா சிட்டிகள் என் பன அமைக்கப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் இரண்டாவது பதவிக் காலம் நவம்பர் 19ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் ஆறு ஆண்டுகளுக்கு இந்த நாட்டை சிறந்ததொரு நாடாகக் கட்டியெழுப்புவதற்காக இவ்வா றான முயற்சிகளை முன்னெ டுத்து வருகிறோம்.

அதற்காக சிங்கப்பூர், மலே ஷியா ஆகிய நாடுகளின் தலை வர்கள் முன்னெடுத்த சில கண் டிப்பான சட்ட திட்டங்களை அமுல் படுத்தவுள்ளோம். அத்திட்டங் களுக்கு இந்நாட்டு மக்கள் அடிபணிய வேண்டும்.

இத்திட்டத்தினை அமுல் படுத்த முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் இலாபம் கருதி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி ஒரு சிறந்த பாதுகாப்பு சுகாதாரச் சுழலைக் கொண்டுவருவதை எதிர்க்கின் றனர். அக்கட்சியினர் மக்களை காலத்துக்குக் காலம் வாக்கு களைப் பெறுவதற்கே பயன்படுத் துகின்றனர்.

எவ்வாறாயினும், புறக்கோட் டையிலுள்ள நடைபாதை வர்த்த கொட்டில்களை தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு நிரந்தரக் கட்ட டத்தை அமைத்துக்கொடுத்த பின்னர் அனைவரும் அதனை வருவேற்கின்றனர். தற்போது இரு பாதை ஓரங்களிலும் மக்கள் நடமாட வசதி செய்துகொடுக்கப் பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார்.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
கடன் பிரச்சினைகளை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். தேவையற்ற சில செலவுகளை செய்யலாம். உங்களை விமர்சித்த ஒருவரை பதிலுக்கு விமர்சிப்பீர்கள். சிலர் உங்களை சிக்கலில் மாட்டி விட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். கனவுத் தொல்லை உண்டு.

**இடபம்:**
குடும்ப உறுப்பினர்கள் சில கோரிக்கைளை முன் வைக்கலாம். முக்கிய விடயம் ஒன்றில் சிலருக்கு வாக்குக் கொடுப்பீர்கள். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். சிலரிடம் கோபமாக பேசி விட்டு, பின்னர் சமாதானம் அடைவீர்கள். உங்களுக்கு தெரிந்த ஒருவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவீர்கள்.

**மிதுனம்:**
குழந்தைகளை உல்லாசப்படுத்துவதில், மகிழ்ச்சியாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்கள் சிலர் உங்களிடம் பண உதவி கேட்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். சில வேலைகளை தொடங்க திட்டமிட்டு, பின்னர் அதை தள்ளி வைக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள்.

**கடகம்:**
போட்டிகள், எதிர்ப்புகளைச் சமாளிக்கலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எந்த வேலையும் தாமதம் இல்லாமல் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். நோய் உபாதைகள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். தாமதமாக தொடங்கிய வேலைகள் சரியான நேரத்தில் முடியும்.

**சிங்கம்:**
குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து, எதிலும் நேர்வழியில் செயற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் திடீரென உங்களைத் தேடி வரலாம். தெய்வ காரியங்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். நல்ல செய்தி கேட்கலாம்.

**கன்னி:**
ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். உறவினர் ஒருவர் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை உங்களிடம் சொல்லலாம். சிக்கலாகி விடுமோ என நினைத்த காரியம் ஒன்று சுமுகமாக முடிந்து விடும். வெளியூர்களில் வசிக்கும் சிலர் உங்களைத் தேடி வரலாம். பெரிய மனிதர் ஆசிகளைப் பெறுவீர்கள்

**துலாம்:**
போட்டிகள், எதிர்ப்புகளால் மன உளைச்சலுக்கு ஆள்படலாம். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். நண்பர் ஒருவருக்காக வெளியிடங்களில் நீண்ட நேரம் காத்திருக்கலாம். சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம்.

**விருச்சிகம்:**
சோர்வு, சோம்பல் இல்லாமல், எதிலும் புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்ற பணத்தை தண்ணீராக செலவு செய்வீர்கள். உங்களின் பெருமையான செயற்பாடுகளைப் பற்றி உறவினர்களிடம் சொல்வீர்கள்.

**தனுசு:**
குடும்பத்தில் அமைதி குடிகொள்ளும். எதிர்பார்த்த பணவரவுகளை மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடும் அலைச்சலை தரும் என நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிந்து விடலாம். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்திகளைக் கேட்கலாம். சகஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

**மகரம்:**
சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து, பெரியளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள் சிலர் செய்யும் தவறுக்கு நீங்களும் துணை போகலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். நீங்கள் செய்யும் சில காரியங்களைப் பார்த்து, மற்றவர்கள் உங்கள் மீது கோபம் கொள்ளலாம்.

**கும்பம்:**
தாய் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் தங்களின் தேவை ஒன்றை, உங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்வர். வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:**
பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். நண்பர் ஒருவரின் ரகசியத்தை அவர்களுக்குத் தெரியாமல் அறிந்து கொள்வீர்கள். அதிக செலவில் வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த செலவில் வாங்குவீர்கள். உங்களுக்காக மற்றவர்கள் பண உதவி செய்யலாம். பெண்களால் சந்தோஷம், மகிழ்ச்சி உண்டு.

# சர்வதேச முதியோர் தினத்தையொட்டி உடுவில் பிரதேச செயலகம் நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஒக்.28

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தினால் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

கட்டுரை - கீழ்ப்பிரிவு

சி.ஜதர்சிகா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி), ஜே.மேரிஜென்சிகா (உடுவில் முருகமூர்த்தி வித்தி), சி.சங்கநிதி (ஏழாலை சைவ மகாஜனா வித்தி)

மத்திய பிரிவு

அ.சாம்பவி (சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி), அ.தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி),த.தனுசிகா (குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தி)

மேற்பிரிவு

ப.தமிழினி (இணுவில் மத்திய கல்லூரி), சீ.யாழினி (இணுவில் இந்துக் கல்லூரி)

கவிதை - கீழ்ப்பிரிவு

இ.தினேஸ் (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி), நா.சாயினி (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை), ப.நிலாஜினி (உடுவில் முருகமூர்த்தி வித்தி)

மத்திய பிரிவு

பா.பாலஜீவன் ( இணுவில் மத்திய கல்லூரி),ச.சுஜித்தா (சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தி), த.கோஜிகா(தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை)

மேற்பிரிவு

வ.சுலக்ஷன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), க.ரபிதா (இணுவில் இந்துக் கல்லூரி), யூ.சஜீவினி (இணுவில் மத்திய கல்லூரி). (201-86)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்ற வாணிவிழாவில் எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வில் வித்தியாலய மாணவர்களின் வில்லிசைக் கச்சேரியை படத்தில் காணலாம். (படம்:-டர்ணிகன்)

# சிரிப்பு மருந்து

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்பார்கள். இதுதான் உண்மை.



கலைவாணர் ஒருநாள் இந்தியாவிலுள்ள நாகர் கோவிலிருந்து சென்னைக்கு அவரைச் சேர்ந்தவர்களுடன் போய்க் கொண்டிருந்தார்.

வரும் வழியில் ஒரு விபத்து ஏற்பட்டது. புளிய மரம் ஒன்றுடன் கார் மோதி காரில் இருந்தவர்களுக்கெல்லாம் பலத்த காயம் ஏற்பட்டது.

எனவே வீதி ஓரமாக துணி ஒன்றை விரித்துவிட்டு உட்கார்ந்து இருந்தார்கள். கலைவாணரும் வெற்றிலை போட்டுக் கொண்டு அவர்களுடன் அமர்ந்து இருந்தார்.

அவ் வழியாகப் போனவர்கள் இதனைக் கண்டு ''கலைவாணர் போல் அல்லவா இருக்கிறது..? அவருக்கா விபத்து?'' பதறிப்போய் அந்த இடத்துக்கு ஓடிவந்தார்கள்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டபோது கலைவாணர் கொஞ்சம் கூடப் பதறாமல் ''அதுவா... இந்த வழியாக வரும் போது களைப்பாக இருந்தது. அதுதான் காரைப் புளிய மரத்தில் சாத்தி விட்டு இப்படி உட்கார்ந்து இருக்கிறோம்'' என்றார். அவருடைய நிலையில் நாங்கள் இருந்திருந்தால் இப்படிச் சொல்லி இருப்போமா?

அவர் வாழ்க்கையை சுமையாக நினைக்கவில்லை. அதனால்தான் அவர் விபத்தைக் கூட சாதாரண விடயமாக எடுத்துக் கொண்டார்.

இதுவரைக்கும் போனதெல்லாம் போகட்டும் இனிமேலாவது கொஞ்சம் வாய்விட்டுச் சிரிச்சுப் பார்க்கலாம். தினமும் ஒரு தடவையாவது அப்படிச் செய்யுங்கள்.

**கோ.சுவாமிநாதன்.**

# நம்புவோம் வெற்றி பெறுவோம்

கங்கையாற்றில் ஒரு புண்ணிய காலத்தில் ஆயிரக் கணக்கானோர் நீராடிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் கைலாயத்தின் பக்கமிருந்த பரமேஸ்வரனைப் பார்த்து பார்வதி ''சுவாமி.. இத்தனைபேர் பாவமும் இன்றோடு போய்விட்டதா? இவர்கள் இனி பாவிகள் அல்லரா? அத்தனை பேரும் கைலாயம் வருவார்களா? அப்படியானால் இதற்கு முன் இப்படிக் குவிந்தவர்கள் இங்கு வந்து சேரக் கைலையில் கூட்டம் நிறைய வேண்டுமே?'' என்று கேட்டார். சிவபெருமான் பொருள் பொதிந்த புன்னகை உதிர்த்தார்.

கங்கைக்கரையில் வயதான சுமங்கலி நிற்கிறாள். வெள்ளத்தின் வேகத்தில் அகப்பட்டு ஒரு கிழவன் சிக்கித் திணறுகிறார். அந்தப் பெருமாட்டி அலறினாள்... ''ஐயா... கணவரை யாராவது காப்பாற்றுங்கள்... அவருக்கு நீச்சல் தெரியாது''.

பலபேர் ஓடி வந்தனர், நீரில் குதிக்கப் போனவர்களைப் பார்த்துக் கிழவி எதிர்த்தாள்... ''ஐயா... பாவிகள் அவரைத் தொடக் கூடாது. அவர் இறந்து விடுவார், பாவமே இல்லாதவர்கள் அவரைக் காப்பாற்றுங்கள்'' என்று கூறினார்.

படிப்பறிவில்லாத பாமர வாலிபன் திடீரென நீரில் பாய்ந்து கிழவரை மீட்டுக் கரையில் சேர்த்தான். பண்டிதர் ஒருவர் படபடத்தார். ''தம்பி... நீ பாவமே செய்ததில்லையா?'' கரகரத்த குரலில் அவன் ''நிறையப் பாவங்கள் செய்திருக்கிறேன்.'' என்று கூறினான்.

''ஐயா நான் பாவிதான். என்றாலும் கிழவி அழுவதை என்னால் தாங்க முடியவில்லை. கங்கையில் இந்தப் புனித நீர் பட்டால் பாவங்கள் தீரும் என நீங்கள் பேசியதைக் கேட்டேன். பாவங்கள் செய்திருந்தாலும் கங்கையில் இறங்கியதும் அது போய்விட்டனவே. அதன் பின்பும் அவரைத் தொட்டாலும் எனக்கும் அவருக்கும் எதுவும் நேராது எனத் தோன்றியது. அதனால்தான் காப்பாற்றினேன். அடுத்த வினாடியில் கிழவனையும் கிழவியையும் காணவில்லை.



''பார்த்தாயே தேவி... கங்கையில் குளித்தால் பாவம் போகும் என்று பலபேர் பேசிக் கொண்டிருந்தாலும் தப்பினவன் லட்சத்தில் ஒருவன்தான். இப்போது தெரிகிறதா? கைலாயத்தில் கூட்டம் குறைவாக இருக்கின்றது என்று'' சுவாமி கூறினார்.

நம்பிக்கைகள் முழுமையாக இருக்க வேண்டும். அரைகுறை நம்பிக்கைகள் ஆபத்தானவை.

ஒருவர் காசி ராமேஸ்வரத்துக்கு யாத்திரை போனார். ராமேஸ்வரத்தில் இறங்கியதும் செருப்பு அறுந்து போனதால் தைக்க வேண்டி வந்தது. காசு கொடுக்க பணப்பையைத் திறந்ததும் ''க..'' என்று அலறினார். 'பணத்தைக் காணவில்லையோ', என்று செருப்புத் தைப்பவன் கேலி செய்தார். ''இல்லை ஐயா... இல்லை... புனித கங்கையில் போடுவதற்கு என்று என்பாட்டி ஒரு தங்க வளையல் கொடுத்தாள். கங்கையில் குளித்த போது போடாமல் மறந்து விட்டேன். இந்த வாய்ப்பு இனி எப்போது வரும். எப்போது போய் எப்படிப் போடப் போகிறேன் என்று கவலையாக இருக்கின்றது'' என்றார் அவர்.

''அந்த வளையலைக் கொடுங்கள்'' எனக் கேட்டு செருப்புத் தைப்பவன் வாங்கி தோல் நனைப்பதற்காக வைத்திருந்த தகர டப்பாவில் உள்ள தண்ணீருக்கு மேலே பிடித்தார். ''ஹே... கங்கையே... இந்த தகரக் குவளையில் நீ இருப்பது சாத்தியம் என்றால் இந்த வளையலை அணிந்து கொள்'' என்று அவர் கூறினார். தகரக் குவளையிலிருந்து ஒரு மெல்லிய கை நீண்டது. அது வளையலை அணிந்து கொண்டு தண்ணீரில் மின்னி மறைந்தது. நம்பிக்கை இருந்தால் கங்கை எங்குதான் வராது.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டிக்குப் போட்டியான இந்திய - சீன ஆதிக்கத்தால் சர்வதேசத்திடம் மண்டியிட மறுக்கும் இலங்கை அரசு

போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுக்கும் இலங்கை அரசு, இதுவிடயம் தொடர்பில் வளைந்து கொடுப்பதற்கோ - விசாரணைகளுக்கு முகம் கொடுப்பதற்கோ - மறுத்து வருகிறது.

இந்த விடயம் ஜி.எஸ்.பி வரிச்சலுகை நீக்கத்துக்கும் வழிவகுத்தது. ஆயினும் இந்த வரிச்சலுகை நீக்கம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நிகழவில்லை.

இது தொடர்பாக 'ஐ.பி.எஸ்' என்ற இணையத்தளத்தில் வெளியான கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கொழும்பு நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் தாஜ் சமுத்திரா என்ற ஐந்து நட்சத்திர ஹோட்டல் இந்தியாவின் தாஜ் ஹோட்டல்கள் நிறுவனத்திற்குச் சொந்தமானது.

கொழும்பு நகரத்திலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் உல்லாசப் பயணிகள் நடந்தே கடற்கரையோரத்திற்குச் செல்லக்கூடியதாக கடலுக்கு அருகாக, இந்துசமுத்திரத்தை நோக்கியவாறு அமைந்திருக்கும் ஒரேயொரு ஹோட்டல் இதுதான்.

இருந்தும் அண்மைய நாட்கள் வரை, இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலும் அனைத்து வசதிகளையும் கொண்ட அதன் அறைகளும் போதியளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்றே கூறவேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக விருந்தினர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் குறைந்த கட்டணத்தில் அறைகளைப் பெறும் வசதியினை தாஜ சமுத்திரா ஹோட்டல் ஏற்படுத்தியிருந்த போதும் அது பெரும் வெற்றியைத் தரவில்லை.

இலங்கைத் தீவில் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்த போரின் விளைவாக நாட்டின் உல்லாசப்பயணத்துறை பெரிதும் நலிவடைந்து காணப்பட்டமைதான் இந்தப் பின்னடைவுக்கான பிரதான காரணமாக அமைந்தது.

இந்தப் பின்னடைவு நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படுவதற்கு வழிவகுத்திருந்தது.

ஈற்றில் கடந்த மே 2009இல் இலங்கையின் அரச படைகளால் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து போர் முடிவுக்கு வந்தது.

இன்று கொழும்பு நகர மையத்தில் அமைந்திருக்கும் தாஜ் சமுத்திரா ஹோட்டல் பெரும் வருமானத்தை ஈட்டும் அதேநேரம் தாஜ் ஹோட்டல்கள் நிறுவனமானது இலங்கையில் புதிய பெரும் முதலீடுகளை மேற்கொள்ளும் முனைப்புக்களிலும் ஈடுபட்டிருக்கிறது.

கடந்த 10 மாதங்களில் கொழும்பு பங்குச்சந்தையில் வெளிநாட்டு முதலீடு அபரிமித அதிகரிப்பைக் கண்டிருக்கிறது என வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் கூறுகிறார். "எப்போதுமே சுறுசுறுப்புடன் இயங்கும் பங்குச் சந்தையிது'' எனத் தாஜ் ஹோட்டல்கள் நிறுவனத்தைச் சேர்ந்த றேமண்ட் பிக்ஷன் கூறுகிறார்.

இலங்கை அதிகாரிகள் இவரது இந்த வார்த்தைகளைச் செவிமடுப்பார்களா? இலங்கையின் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களுக்கு ஐரோப்பியச் சந்தைகளில் அதிக பெறுமதியைப் பெற்றுக்கொடுத்த ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையினைக் கடந்த ஓகஸ்ட் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தியது. இருந்தபோதிலும் கொழும்பு இதுபோன்ற வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு, குறிப்பாக அதனது ஆடை உற்பத்திகள் அதிகம் சந்தைப்படுத்தப்படும் இடமாக ஐரோப்பிய ஒன்றியம் திகழ்கிறது.



2010ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த ஆடை ஏற்றுமதி 310 கோடி டொலர்களை எட்டியிருந்தது. இலங்கைத்தீவிலிருந்து ஏற்றுமதியாகும் மொத்த ஆடைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை ஐரோப்பியச் சந்தைகளையே சென்று சேருகின்றன.

இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் மூன்றாவது பெரிய தொழில்துறையாக ஆடை ஏற்றுமதி உள்ளது.

இலங்கையிலிருந்து பிற நாடுகளில் சென்று பணிபுரிபவர்களின் ஊடாகக் கிடைக்கும் வருமானம் முதல் இடத்திலும் உல்லாசப் பயணத்துறை இரண்டாவது இடத்திலும் உள்ளன.

கடந்த நான்கு மாதங்களில் முதல்முறையாக கடந்த ஜூன் மாதம் இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி சற்று வீழ்ந்திருந்தது.

இலங்கையின் ஆடை உற்பத்தி ஏற்றுமதியில் 11 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டமையே இதற்கான காரணமாகும்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதித் துறையை விட பங்களாதேஷின் ஆடை. ஏற்றுமதித் துறை சிறப்பாகச் செயற்படுகிறது எனவும் இலங்கையின் உற்பத்திகளை வழமையாக வாங்கும் வாடிக்கையாளர்கள் தற்போது பங்களாதேஷின் உற்பத்திகளில் நாட்டம் காட்டுகின்றனர் எனவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இலங்கை மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்தும் என்ற எண்ணத்தில் அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் காலக்கெடு விதித்தமையின் காரணமாக ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தமானது ஆறு மாத காலத் தாமதத்தின் பின்னரே அமுலுக்கு வந்திருக்கிறது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தப்படுவது தவிர்க்கமுடியாததொன்று என்றாகிவிட்டது. எனினும் கொழும்பு ஐரோப்பிய ஒன்றியத்திடம் மண்டியிடவில்லை.

வரிச்சலுகையை நிறுத்துவது என்ற தீர்மானத்துக்கமைய தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாகக் கடந்த பெப்பிரவரியில் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவை தொடர்பான சர்வதேச சாசனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச சாசனம் மற்றும் சிறுவர் உரிமைச் சாசனங்கள் என்பவற்றை மதித்துச் செயற்படுவதற்கு இலங்கை தவறிவிட்டது என்று 2009 ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

போரின் இறுதி நாட்களில் இலங்கை இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுட்டார்கள் என வெளிவந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இத்தகையதோர் நிலைப்பாட்டை எடுத்திருந்தது.

அரச படையினரும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டனர் எனக் கூறப்படும் இதுபோன்ற குற்றச்செயல்கள் தொடர்பாக இன்னமும் எந்தவொரு விசாரணையும் முடுக்கிவிடப்படவில்லை.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள் அரச படைகளால் நிர்வகிக்கப்படுகின்ற அடிப்படை வசதிகள் எதுவுமற்ற, வழமைக்கு மாறான தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது.

எது எவ்வாறிருப்பினும் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன என்றுமுன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுக்கும் இலங்கை அரசு இதுவிடயம் தொடர்பில் வளைந்து கொடுப்பதற்கும் மறுத்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து அதற்குப் பதிலளிக்கும் வகையில் செயற்பட்ட இலங்கை அரசு இந்தியா மற்றும் சீனா ஆகிய தனது 'நட்பு' நாடுகளுடனான உறவைப் பலப்படுத்திக்கொண்டது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் இன்றிருப்பதைப் போல சிறப்பாக இனி ஒருபோதும் இருக்காமாட்டா என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரான அசோக் காந்தா அண்மையில் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் ஏழு மாதக் காலப்பகுதியில் இலங்கைக்கான இந்திய ஏற்றுமதி 41 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையிலான ஏற்றுமதி வர்த்தகத்திலுள்ள தற்போதைய போக்கு 2010ஆம் ஆண்டின் இறுதி வரை தொடருமானால் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான இருதரப்பு வர்த்தக உறவின் உச்சமாக அது இருக்கும் என அசோக் காந்தா குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் 3 கோடி டொலர் பெறுமதியான முதலீட்டை மேற்கொள்வதற்கு இந்தியாவின் தாஜ் ஹோட்டல்கள் நிறுவனம் திட்டமிட்டிருக்கின்றது. கொழும்பிலுள்ள அனைத்துலக விமான நிலையத்திற்கு அருகாக முதல் தர நட்சத்திர ஹோட்டல் ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கில் அதற்கான காணியை தாஜ் நிறுவனம் கொள்வனவு செய்திருக்கிறது.

அதேநேரம் நாட்டின் மொத்த நிலையான தொலைபேசிகளில் 20 சதவீதமானவற்றைக் கொண்டிருக்கும் 'சண்ரெல்' நிறுவனத்தை விலைக்கு வாங்குவதற்கான முனைப்புக்களில் இந்தியாவின் டாட்டா குழுமம் என்ற நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது.

இலங்கையின் பயன்பாட்டுக்கு ஏற்ற வாகனங்களைத் தனித்துவமாக வடிவமைத்து வருவதாகக் கூறும் இந்தியாவின் மகேந்திரா குழுமம் என்ற வாகன உற்பத்தி நிறுவனம் இலங்கையில் தனது வாகனங்களைப் பொருத்தும் மையம் ஒன்றை ஆரம்பிக்கும் முனைப்புகளிலும் தான் ஈடுபட்டிருப்பதாகக் கூறுகிறது.

மேலும் இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை வழங்கும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியா நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் அபிவிருத்திக்கென தான் 80 கோடி டொலர் பணத்தை வழங்கவுள்ளதாக 2009ஆம் ஆண்டு உறுதியளித்திருந்தது.

அதேநேரம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளுக்காகவும் 100 கோடி டொலர் உதவியைத் தான் வழங்கவுள்ளதாக 2009இல் ஜப்பான் அறிவித்திருந்தது.

சீனாவும் தனது பங்கிற்கு அபிவிருத்தி உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளுக்காக 50 கோடி டொலர் பணத்தை தான் வழங்குவதாக சீனா உறுதியளித்திருந்தது.

இப்படியான நாடுகளை பின்னணியில் கொண்டு தனது பலத்தை அதிகரித்துள்ளது இலங்கை. இதனடிப்படையிலேயே தனக்கு எதிராக முன்வைக்கப்படும் எந்தக் குற்றச் சாட்டுக்களுக்கும் வளைந்து கொடுக்காமல் முரண்டு பிடிக்கிறது இலங்கை.

*நன்றி:- புதினப்பலகை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் மின்சாரசபைக்கு எரிபொருள் மானியம் நிறுத்தம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நிறுத்தப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு அறிவித்துள்ளது. மின்சாரசபைக்கு மானிய விலையில் எரிபொருளை வழங்குவதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றது. இதனால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது என பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மின்சாரசபைக்கு வழங்கப்படும் எரிஎண்ணெயின் உற்பத்திச் செலவு லீற்றருக்கு 60 ரூபா. இது மின்சாரசபைக்கு லீற்றர் 40 ரூபாவுக்கே வழங்கப்படுகிறது. அதன் மூலம் லீற்றரொன்றுக்கு 20 ரூபா நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் கடந்த செப்டெம்பர் மாதத்திற்கு முன் லீற்றர் 25 ரூபாவுக்கே வழங்கப்பட்டது. அதன்மூலம் கூட்டுத்தாபனத்துக்கு மாதாந்தம் 240 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இலங்கை மின்சாரசபைக்கும் ஏனைய மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கும் மானிய விலையில் எரிபொருளை விற்பனை செய்வதால் தொடர்ந்து ஏற்படும் நஷ்டங்களுக்கு முகம் கொடுக்கமுடியாது.

மின்சாரசபைக்கு கடனடிப்படையில் வழங்கப்பட்ட எரிபொருளுக்கான நிலுவையாக கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 5,500 கோடி ரூபா இருக்கிறது. கடனைச் செலுத்த மின்சாரசபை நடவடிக்கை எடுக்கவில்லை. மின்சாரசபையின் நிலுவையான 5,500 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக பாதுகாப்புப் பிரிவில் 900 கோடி ரூபாவும், ரயில்வே திணைக்களத்தில் 160 கோடி ரூபாவும், கெரவலப்பிட்டிய உற்பத்தி நிலையத்தில் 500 கோடி ரூபாவும் நிலுவையாக உள்ளன - இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (சி)

# காலபோக பயிர்ச்செய்கை அட்டவணை- 2010

இரணைமடு, அக்கராயன்குளம், புதுமுறிப்பு ஆகிய நீர்ப்பாசன குளங்களுக்கான 2010 காலபோக பயிர்ச்செய்கை கால அட்டவணை இதன்கீழ் குறிப்பிடப்பட்டவாறு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என 2000ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல சேவைச் சட்டத்தின் முதலாம், 5ஆம் பந்தியின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகிய திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகிய நான் இத்தாற் பிரகடனப்படுத்துகின்றேன்.

01.காலபோக பயிர்ச்செய்கை அட்டவணை (இரணைமடு, புதுமுறிப்பு)

| தொ. இல. | பயிர்ச் செய்கை விவரம் | ஆரம்ப திகதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| 01. | நிலம் பண்படுத்தல் | 01.10.2010 | 30.10.2010 |
| 02. | வாய்க்கால் சுத்தம் செய்தல் | 01.10.2010 | 30.10.2010 |
| 03. | விதைப்பு | 01.10.2010 | 31.10.2010 |
| 04. | காவல் குடில் கட்டல் | 01.10.2010 | 30.10.2010 |
| 05. | நீர்திறத்தல் | 15.11.2010 | 15.02.2011 |
| 06. | கால்நடைக் கட்டுப்பாடு | 01.10.2010 | 15.03.2011 |
| 07. | அறுவடை | - | 28.02.2011 |
| 08. | சூடடித்தல் | 01.01.2011 | 14.02.2011 |
| 09. | வேலி பிரித்தல் | - | 15.02.2011 |

அக்கராயன்குளம்

| தொ. இல. | பயிர்ச் செய்கை விவரம் | ஆரம்ப திகதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| 01. | நிலம் பண்படுத்தல் | 15.10.2010 | 10.11.2010 |
| 02. | வாய்க்கால் சுத்தம் செய்தல் | 15.10.2010 | 10.11.2010 |
| 03. | விதைப்பு | 15.10.2010 | 10.11.2010 |
| 04. | காவல் குடில் கட்டல் | 15.10.2010 | 10.11.2010 |
| 05. | நீர்திறத்தல் | 30.11.2010 | 30.02.2011 |
| 06. | கால்நடைக் கட்டுப்பாடு | 15.10.2010 | 30.03.2011 |
| 07. | அறுவடை | - | 15.03.2011 |
| 08. | சூடடித்தல் | 15.01.2011 | 28.02.2011 |
| 09. | வேலி பிரித்தல் | - | 28.02.2011 |

02. விதைப்பு முறை: புழுதி விதைப்பு

03. விதைக்க வேண்டிய நெல் இனங்கள்

- ★ BG-406
- ★ AT 362
- ★ BG 358
- ★ BG 308
- ★ BG 300
- ★ BW 361
- ★ உள்ளூர் இனங்கள்

04. கடமைகள் நிறைவேற்றப்படாமைக்கான தண்டம்

★ வாய்க்கால் சுத்தம் செய்யாமை, பாகம் ஒன்றிற்கான தண்டப்பணம் ரூபா 60.00

★ கால்நடை பராமரிக்கத்தவறின் கால்நடை ஒன்றிற்கான

- பிடி கூலி ரூபா 100.00
- தண்டப்பணம் ரூபா 50.00
- பராமரிப்பு நாள் ஒன்றிற்கு 50.00 (7நாள்கள் வரை)
- பயிரழிவு (மதிப்பீட்டிற்கு அமைய)

★ நீர்முகாமை செய்யத்தவறின் ஏக்கரிற்கு ரூபா 500.00

★ முறைதவறி வேலி பிரித்தல், சூடடித்தல் ஏக்கரிற்கு ரூபா 500.00

★ நெல் இனம் மாறி விதைத்தல் ரூபா 1000.00

★ செய்கை முறை மாறி விதைத்தல் ரூபா 500.00

திருமதி றூ.கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர்/
மாவட்ட செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி/572162)

# பரிசளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 116ஆவது ஆண்டு நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் மலர்வெளியீடும் எதிர்வரும் 31ஆம் திகதி காலை 9மணிக்கு கல்லூரியின் ஒறேற்றர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்தநிகழ்வில் சிலாபம்சென். மேரிஸ் நர்ஸிங்கோம் உரிமையாளர் டாக்டர் டபிள்யூ.ஈ.வோசிங்ரன் திசேரா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் அமெரிக்கக் கிளையின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் கணக்காளருமான கே.பாலசுப்பிரமணியமும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்துகொள்வர். (201-55)

* * *

சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்துகொள்வார். (201-15)


WANTED

Office/Showroom space in Jaffna

Required in the heart of Jaffna town for a mercantile establishment. Please send in details immediately as a visit to Jaffna is being shortly planned for inspection.

Contact : Chanaka Kekulawala
0777-571063 / 011-2688705
Email : bme@mackwoods.com


# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
16.05.1947

மறைவு
08.11.2009

## அமரர் ஜெயராணி குணபாலசிங்கம்

திதி: ஷஷ்டி

அன்புத் தாயே! தெய்வமே!
உங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
ஓயாது தவிக்கின்றோம்.
ஆயிரம் உறவுகள் எம் அருகே இருந்தாலும்
பெற்ற தாய்க்கு ஈடாகுமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

259/5, A.V. றோட்,
அரியாலை.

சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(105150)

# புத்தாண்டு காலம் பறந்து மறைந்ததுவோ?

## ஆருயிர் அன்னைக்கு அஞ்சலிகள்

மண் மகிழ
10 . 09 . 1945

கண் நெகிழ
18 . 10 . 2000



## திருமதி சிவகுரு குமுதினி

[கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரி]

திதி: 28.10.2010

அருந்தவங் கிடந்தீன்று ஆளாக்கி எமைக்காத்து
அன்பில் நிறைந்து நின்ற அன்னையே அகன்றீரோ?
உருகி நாம் துடிதுடித்து உணர்விழந்து பத்தாண்டும்
உமை நினைத்துத் துயரில் உருக்குலைந்தோம் பாரீரோ?
தருவாகி நமையெல்லாம் தாங்கிநின்ற தத்துவமே
தாயே உம்கருணை தரணியிலே மறவோமே!
பெருமகளே! பேரருளே! பேசரிய தெய்வமுமை
பணிந்து அடிபரவி வணங்கினமே அமைதி கொள்க!

கச்சாய் வீதி,
கோயிற்குடியிருப்பு,
சாவகச்சேரி.

சிவகுரு P.P.S. (கணவன்),
காந்தன் (கனடா), சங்கர் (கனடா),
கண்ணன் (சாவகச்சேரி),
பாப்பி (கனடா), சஞ்சீ (லண்டன்),
மருமக்கள், ஆருயிர் பேரப்பிள்ளைகள்.

(105184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை; தட்டிக் கேட்கச் சங்கங்கள் அவசியம்

## பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.28

ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. அவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தீவிரமான செயற்பாடுடைய சங்கங்கள் அவசியம் என மட்டக்களப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் கடந்த திங்கட்கிழமை காலை முதல் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மகளிர் அணியினருக்கான கருத்தரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''கல்வி நிர்வாக சேவையிலுள்ளவர்களின் குறைபாடுகளைக் கூடத் தட்டிக் கேட்கும் சங்கமாக ஆசிரியர் சங்கம் மாறவேண்டும். அதற்கமைவாக மகளிர் வலையமைப்பும் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆசிரியர் சங்கங்கள், வலையமைப்புகள் ஆகியவை மிக முக்கியமானவை.

தரமான கற்பித்தலினூடாகத் தங்களையும் தரமானவர்களாக மாற்றிக்கொள்ள மகளிர் முன்வர வேண்டும். அத்துடன் மக ளிர் மத்தியிலும் சிறந்த கல்வி நிருவாகிகள் உருவாக வேண்டும். கடந்த கால யுத்த அனர்த்தங்களால் நாம் அதிகம் இழந்துள்ளோம். அவ்வாறான இழப்புகளை ஈடுசெய்வதற்காக அனைவரும் செயற்பட வேண்டும்'' - என்றார்.

நோர்வேயின் எடியூகேசன் இன்ரர் நெஷனல் கல்வியாளர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வலையமைப்புடன் இணைந்து இந்த ஒருநாள் கருத்தரங்கை நடத்தியது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு வின் சன்ற் மகளிர் உயர்தரத் தேசிய பாடசாலை அதிபர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார். வளவாளர்களாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மகளிர் வலையமைப்பு செயலாளர்களான திருமதி யூ.யோகேஸ்வரன், திருமதி எச்.எஸ்.இராம நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணித்தலைவி திருமதி எஸ்.கிருபாகரன் இக்கருத்தரங்குக்கு தலைமை வகித்தார். இக் கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் முருகு தயாணந்தன் செய்திருந்தார். (ளி)

# அமைச்சர் விமல் வீரவன்ஸ அம்பாறைக்கு விஜயம்

அம்பாறை,ஒக்.28

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த திங்கட்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்தார். காலை 9.30 மணிக்கு அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் அவர் கலந்துகொண்டார்.

அமைச்சர் பீ.தயாரத்ன, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, கிழக்கு மாகாண வீடமைப்பு அமைச்சர் எம். எஸ்.எம். உதுமாலெவ்வை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இம்மாவட்டத்தில் யுத்தம், ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு சம்பந்தமாக இங்கு ஆராயப்பட்டது. (ளி)

# முள்ளிவாய்க்கால் அவலங்கள் குறுநாவலில் சித்திரிப்பு

## அறிமுகவிழாவில் பாராட்டு

அம்பாறை, ஒக்.28

''2009 மே 19 முள்ளிவாய்க்கால் அவலங்கள் பற்றி எழுதவும் பேசவும் அஞ்சிய ஒரு கால கட்டத்தில் சகோதரர் அரசரெத்தினம் தனது 'சாம்பல் பறவைகள்' எனும் குறுநாவலில் அது குறித்துச் சித்திரிக்க முற்பட்டிருக்கிறார். அவரது இந்தத் துணிச்சலைப் பாராட்டாமல் எம்மால் இருக்கமுடியாது.''

-இவ்வாறு பன்னூலாசிரியரும் ஊடகவியலாளருமான எம்.எம்.எம்.நூறுல்ஹக், பன்னூலாசிரியர் எஸ்.அரசரெத்தினம் எழுதிய 'சாம்பல் பறவைகள்' குறுநாவல் அறிமுக விழாவில் நூல் அறிமுகவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கல்முனை கிறிஸ்தவ இல்லத்தில் கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவர் திருமதி க. லோகிதராஜா தலைமையில் இந்நூல் அறிமுக விழா நடைபெற்றது. ஊடகவியலாளர் நூறுல்ஹக் மேலும் பேசுகையில்,

அம்பாறை மாவட்டத்தில் நாவல், குறுநாவல் முயற்சி பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. எனினும் வெளிவந்தவற்றுள் சில பரிசில்களையும், விருதுகளையும் பெற்றுள்ளன. வாசகர் பெருக்கத்தையும் சில நாவல்கள் உள்வாங்கி நிமிர்ந்து நிற்கின்றன.

இந்த வரிசையில் தற்போது அரசரெத்தினமும் நாவல், குறுநாவல் முயற்சியில் கைகோத்துப் பயணிக்கத் தொடங்கியிருக்கிறார். இவரது ஐந்தாவது நூலாகவும் முதலாவது குறுநாவலாகவும் 'சாம்பல் பறவைகள்' வெளிவந்திருக்கிறது.

இந்தக் குறுநாவல் சித்திரிக்க முற்பட்டிருக்கும் பொருள் கதையாடல் - 2009 மே 19 காலப் பகுதியை அண்மித்த முள்ளிவாய்க்கால் போராட்டம் பற்றியதாகும். இவர் தொட்டுப் பேச முற்பட்டிருக்கும் புனைவு வெறுமனே முற்றுமுழுதான கற்பனைப் புனைவு அல்ல.

மாறாக நமது நாட்டில் நடைபெற்ற யுத்த சூழலைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையம்சத்தையே 'சாம்பல் பறவைகள்' குறுநாவல் பதி வாக்க முனைந்திருக்கிறது. கதை எழுதவும் பேசவும் அஞ்சிய ஒரு கால கட்டத்தில் நூலாசிரியர் அரசரெத்தினம் அது




குறித்துப் பேசுவதற்கு முற்பட்டிருக்கிறார். அவரது துணிவை நாம் முதலில் பாராட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நூல் அறிமுகவிழாவில் அருட்தந்தை பேராசிரியர் த.சில்வஸ்டர் சிறிதரன், பிரதேச செயலாளர் க.லவநாதன், கவிஞர் சண்முகம் சிவலிங்கம், கவிஞர் உமா வரதராஜன், சட்டத் தரணி அ.யோதிலிங்கம், டாக்டர் புஷ்பலதா லோகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (ளி)

# கல்முனை பொதுச்சந்தையில் 5,500 அபின் பக்கெற்றுகள்

அம்பாறை, ஒக்.28

கல்முனை பொதுச் சந்தையினுள் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து 5ஆயிரத்து 500 அபின் பக்கெற்றுகள் களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை பிற்பகல் கைப் பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட அபின் பக்கெற்றுகள் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 500ரூபா பெறுமதியானவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர். மானவடு தலைமையிலான குழுவினரே அபின் பக்கெற்றுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி; மலையகத்தில் வாக்குகளைச் சிதறடிக்கக் கூடாது!

## மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி மலையகத்தில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இது வரவேற்கத்தக்கது. ஆனாலும் அது மலையகத்திற்குப் பொருத்தமற்ற வேட்பாளர்களை நிறுத்தி வாக்குகளைச் சிதறடிக்கக் கூடாது - என மத்திய மாகாணசபை உறுப்பினரும், தொழிலாளர் தேசிய சங்கப் பிரதித்தலைவருமான எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மலையக மக்கள் உட்பட தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஊடகங்களில் குரல் கொடுக்கும் தமிழ்க்கட்சித் தலைவர்கள் சிலர் தேர்தல் காலங்களில் தமது ஒற்றுமையை வெளிக்காட்டத் தவறி விடுகின்றனர். இதுவே சமூகரீதியான எமது அரசியல் பிரதி நிதித்துவக் குறைபாட்டுக்கு காரணம்.

அரசு இதுவரை நடைமுறையிலிருந்த முறைமைக்கு மாறாக புதிய முறைமை ஒன்றில் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டு வருகின்றது.

எனவே மிகவும் புத்திசாதுரியமாக செயற்பட்டு நாம் எமது அரசியல் பிரதிநிதித்துவத் தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தனித்தோ கூட்டாகவோ இதற்கான முடிவுகள் நிதானமாக எடுக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் ஜனநாயக மக்கள் முன்னணி மலைய கத்தில் போட்டியிடுவது தொடர்பாக அதன் தலைவர் மனோகணேசன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகிறார் என ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன்.

ஜனநாயக மக்கள் முன்னணி மலையகப் பகுதிகளில் போட்டியிடுவது வரவேற்கத்தக்கது. ஆனால் கடந்த காலங்களில் செயற்பட்டது போன்று வாக்குகளைச் சிதறடிக்கவும், பொருத்தமற்ற வேட்பாளர்களை உள் நுழைப்பதற்கும் அவர்களது செயற்பாடுகள் காரணமாகி விடக்கூடாது.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் எமது தொழிலாளர் தேசிய சங்கத்துடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வானது வேட்புமனுத் தாக்கல் செய்ததோடு முறிக்கப்பட்டது. ஊவா மாகாணசபைத் தேர்தலில் தன்னிச்சையாக வேட்பாளர்களை நிறுத்தியதால் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டன.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தை மற்றவருக்குத் தாரை வார்த்ததால் கட்சி சார்ந்தவர்கள் அல்லாதோர் மலையக மக்களின் பிரதிநிதிகளாக மாறும் நிலை ஏற்பட்டது.

எனவே, தேர்தல் முறையில் மாற்றம் செய் யப்படுகின்ற புதிய சூழலில், மலையக சகோதர அரசியல் தொழிற்சங்க கட்சிகளுடன் கலந்துரையாடி உடன்பாட்டின் அடிப்படையில் தேர்தலை எதிர்கொள்வது சிறந்தது.

இதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணிக்கு பொதுத் தேர்தல் முடிவுகள் நல்ல படிப்பினைகளைக் கொடுத்திருக்கும்.

-இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ளி)




# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 11 ஆவது சிரார்த்ததினம் 30 இல் அனுஷ்டிப்பு

நுவரெலியா, ஒக். 28

மலையகத்தின் தந்தையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 11 ஆவது சிரார்த்தத்தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மலையகமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது குறித்து இ.தொ.கா. ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கனவுகளை நனவாக்குவதற்கும் -

இலட்சியங்களைநிறைவேற்றுவதற்கும் மற்றும் அவரது அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்குமான முயற்சிகளில் இ.தொ.கா. ஈடுபட்டு வருகிறது.

அன்னாரின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு மலையகத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள ஆலயங்களில் அவரை நினைவு கூரும் வகையில் விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளன.

அன்று காலை 7.30 மணிக்கு கொழும்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்படும். பின்னர் சௌமிய பவனில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெறும்.

மேற்படி நிகழ்வுகளில் இ. தொ.கா.பொதுச்செயலாளரும், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான், கட்சியின் தலைவரும், பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம், தேசிய அமைப்பாளர் எஸ். ஜெகதீஸ்வரன், சிரேஷ்ட உபதலைவர் ஹரி சந்திரசேகர, நிர்வாக உப தலைவரும், சட்டத்தரணியுமான கா. மாரிமுத்து, நிர்வாக செயலாளர் எம்.சந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் - இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை; மாணவர் கல்வி பாதிப்பு

## முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க

கண்டி, ஒக்.28

அரசு இன, மத, மொழி பேதமின்றி அனை வருக்கும் சமமான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும் மத்திய மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாட சாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக முஸ்லிம் மாணவர்களது கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என மத்தியமாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை காலை அக்குறணை குருகொடை முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மத்திய மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாட சாலைகளில் பாரியளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. அதேநேரம் புதிதாக ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாத ஒரு நிலையும் காணப்படுகின்றது.

மத்திய மாகாணத்தில் உள்ள படித்த முஸ்லிம் இளைஞர்கள் - யுவதிகள் ஆசிரியர் தொழிலுக்கு விண்ணப்பிப்பது மிகவும் குறைந்த மட்டத்திலே உளள்ளது.

அரசு இன, மத மொழி பேதமின்றி அனைவருக்கும் சமமான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த அடிப்படையில் மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் கணினிக் கூடங்களை வழங்கி வருகின்றது. - இவ்வாறு முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது குருகொடை முஸ்லிம் வித்தியாலயத்துக்காக 27 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கணினி அறையை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

அத்துடன், வித்தியாலயத்திலிருந்து 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மற்றும் நூற்றுக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.(ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எவ்வளவு தூரம் பயணித்தாலும் 10 ரூபா!

கொழும்பு, ஒக். 28

பயணிகள் எவ்வளவு தூரம் பயணித்தாலும் 10 ரூபா மாத்திரம் கட்டணம் அறவிடும் பஸ் சேவை ஒன்று, நேற்று புறக்கோட்டையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எம். டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

இந்த பஸ் சேவையானது புறக்கோட்டையிலிருந்து மருதானை, பொரளை, நாரஹேன்பிட்டி, கிருலப்பனை, திம்பிரிகஸாயவினூடாக கொம்பனித் தெருவை அடைந்து மீண்டும் அங்கிருந்து புறக்கோட்டையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# தெய்வீகத்தோடு ஒன்றாகும் பேருணர்வே பூரணத்துவம் தரும்

எல்லாமான தெய்வீகத்தை எப்படி ஒருவர் உணர்ந்து கொள்ள முடியும். தண்ணீர் தண்ணீருடன் இரண்டறக் கலக்க முடியும். நெருப்பு நெருப்புடன் ஒன்றாக முடியும். கடவுள் உருவங்களுக்கு அப்பாற்பட்ட படியால் அவருடன் ஒன்றாக வேண்டு மென்றால் நாமும் உருவங்களுக்கு அப்பாற்பட்டவராக வேண்டும். இது எதைக் குறிக்கிறது. அதா வது நாங்களும் உருவங்களுக்கு அப்பாற்பட்டு உடற்பற்றிற்கு அப்பாற்பட வேண்டும். இது தியானத்தினால் கைகூடுகிறது. உடம்புப் பற்றை வைத்துக் கொண்டு கடவுளை வழிபடு வதன் மூலம் கடவுளோடு ஒன்றாவதை எதிர்பார்க்க முடியாது. நீங்கள் உருவத்தைக் கடந்து போகும் பொழுது தான் உருவத்துக்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தை உணர முடியும். கடவுள் எல்லையில்லாத மகிமைப் பிரகாசத்தின் திரு உரு. கடவுளை உணர வேண்டுமானால் உனது வாழ்வும் மகிமைகளின் பிரகாசம் உள்ள தாக வேண்டும். உனது வாழ்வின் ஒளி எல்லா ஒளி களுக்கும் ஆதி மூலத்திலிருந்து வந்தது என்பதை நீ உணரவேண்டும். எல்லா ஒளிகளும் எங் கிருந்து ஆரம்பித்தனவோ, அந்த தெய்வீக பிரகாசத்துடன் இந்தத் தனிச்சுடர் சங்கமிக்க வேண் டும். தனிப்பட்ட ஒருவன் அந்த உயர்ந்த பிரகாசத்தைத் (பரஞ் - ஜோதி) தியானித்து தனது தனிப் பிரதியை அந்த உயர்ந்த பிரமையுடன் சங்கமிக்க வைக்கவேண்டும்.

நீங்கள் பஜனை, ஜபம், தியானம், யாகம், யக்ஞம் அல்லது வேறுபல ஆத்மீகப் பயிற்சி களைச் செய்கிறீர்கள். இவையெல்லாம் வெளிப்புறப்பயிற்சிகள். இவை உனது உள் ளார்ந்த ஆத்மாவை கண்டு பிடிக்க உதவமாட்டாது. அந்த ஆத்மீகப் பயிற்சிகள் அவைகள் மட் டில் நல்ல செயல்கள். ஆனால் அவைகள் ஆத்மீகத்திற்கு சம்பந்தமில்லாதவை. ஆத்மீகம் என் பது ஆத்மாவுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியது. எல்லாச் செயல்களுக்கும் அதற்குத் தகுந்த பிரதிபலன் உண்டு. ஒவ்வொரு செயலும் அதற்குள்ள பலனை வெகு மானமாகக் கொண்டுள்ளது. நல்ல செயல்கள் நல்ல பலனைத் தரு கிறது. ஆனால் அவை ஆத்மீக முன்னேற்றத்திற்கு எந்த விதமாகவும் பங்களிப்பதில்லை. ஆகவே நல்ல செயல்கள் ஆத்மீக யாத் திரையில் சுவடு பதிக்க உதவும் படிக்கற்களாக இருக்க வேண்டும்.

கிரியைகளும், வழிபாடுகளும் செய்வதன் மூலம் நீங்கள் திருப் திப்பட்டு இருந்து விடக்கூடாது. எப்பொழுது ஆத்மீக சாகஸங் களில் ஈடுபடப் போகிறீர்கள். நீங்கள் இரட்டை உணர்வான துவைதத்திலிருந்து அத்வைதம் என்ற ஒன்று மட்டுமே இரண்டு அல்ல என்ற தன்மைக்குப் போகவேண்டும். தெய் வீகத்தோடு ஒன்றாகும் அத்வைத பேருணர்வு வந்த பொழுது தான் பூரணத்தைப் புரிந்து கொண்ட ஞானி ஆவீர்கள்.



## சாயி சிந்தனை

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு சிவனடியார்



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவனடியார் (ஆசாரி) நேற்று (27.10.2010) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பராணி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகாம்பாள், ரெட்ணசிங்கம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் அனிதா, தனபாலன், லோகநாயகி (லண்டன்), தங்கராசா ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடி நிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம். (105200)

### சின்னத்தம்பி இராசலிங்கம்



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரம், ஊரதீவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசலிங்கம் அவர்கள் (25.10.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மனோன் மணி (பூமணி) யின் அன்புக் கணவரும் பாலகிருஷ்ணன், கிருஷ்ணவதனி, கிருஷ்ணபேபி, இராதாகிருஷ்ணன், சிறிதரன், கிருஷ்ணமாலா, சிவதரன், பகிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் எழில்அரசி, கணபதிப்பிள்ளை குலசிங்கம், தாரணி, அகல்யா, சிறிசங்கர், மலர்ச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபிகா, டிலக்ஷன், ரஜிதன், விஜிதன், ரம்மியா, கஜரூபன், ரக்ஷனா, கிஷாந்தன், அக்ஷியா, அனுசியா, நேத்ரா, தர்சன், சாலினி, மதுஷா ஆகியோரின் பேரனும் மல்லிகேஸ்வரி இலங்கநாதன், வள்ளியம்மை, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பாலகிருஷ்ணன் (மகன்).

7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (105198)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். (த-7)

* * *

நவாலி, ஒக்.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களின் கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துச் சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

(204-100)

## தீவுப்பகுதியில் புதிய மிளகாய் இனம்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்.விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்படும் எம்.ஐ.கிறின் மிளகாய் அடுத்தமாதம் தீவுப்பகுதியில் உளள மிளகாய் உற்பத்தியாளர்களால் முதல் தடவையாகச் செய்கை பண்ணப்படவுள்ளது.

(த-7)


### காணி விற்பனைக்கு

கண்டி வீதி, நாவற்குழியில் (பழைய இறால் கொம்பனி) முன்பாக 5½பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0713055919.
ஆ.சத்தியலோகன். (105199)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்: 27.06.1934
மரணம்: 07.11.2009



### அமரர் சின்னப்பொடி கந்தசாமி (இராசதுரை)

திதி: ஷஷ்டி

குடும்பத்தின் தீபமே பரம்பரையின் முதல்வனே
அன்புடன் கண்டிப்பும் கொண்டவரே
ஏற்றம் காணவென நித்தமும் உழைத்தீர்கள்
கனவுகள் நிஜமாவதற்குள் சென்றதேனோ?
முதிர்ந்த வயதிலும் இளசுகள் போல் வாழ்ந்தீர்கள்
நாகதம்பிரான் கோயிலே எனது இல்லம் என்றீர்கள்
கோயிலே இன்று சோகமாயிற்று அறிவீரோ
கொடிய நோயிலும் சிரித்து சிரித்து வலிகள் மறைத்தீர்கள்
உங்கள் மூச்சே எங்கள் மூச்சாயிற்று
ஆண்டு ஒன்றல்ல என்றுமே எம்முடன் வாழ்வீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.578,நாகதம்பிரான் கோயில் வீதி,
செல்வாநகர், கிளிநொச்சி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


### வடை, பற்றீஸ்

உணவகங்களுக்கும், Canteenகளுக்கும் சுகாதாரமாகவும், சுவையாகவும் வடை, பற்றீஸ் ஓடருக்குச் செய்துதரப்படும்.
தொடர்பு: 0783260392 (105203)


## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

26.10.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2310

வெற்றி எழுத்து: A
வெற்றி எண்கள்: 9 4 9 8 0 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 9 | 4 | 9 | 8 | 0 | 2 | ரூபா.14,066,671/= | பரிசு | - |
| 1 பரிசுகள் | | 9 | 4 | 9 | 8 | 0 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் | 02 |
| 2 பரிசுகள் | | | 4 | 9 | 8 | 0 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 14 |
| 3 பரிசுகள் | | | | 9 | 8 | 0 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 138 |
| 4 பரிசுகள் | | | | | 8 | 0 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 1348 |
| 5 பரிசுகள் | | | | | | 0 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் | 13467 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் | 133209 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 4 | 9 | 8 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 14 |
| 8 பரிசுகள் | | 9 | 4 | 9 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 137 |
| 9 பரிசுகள் | | 9 | 4 | 9 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 1338 |
| 10 பரிசுகள் | | 9 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 13301 |
| 11 பரிசுகள் | A | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 53288 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,280,490.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 14,254,131.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 243... www.nlb.lk


## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.09.2009 வரை அடகு வைத்து 30.09.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி:
13.11.2010 (சனிக்கிழமை) காலை 8.30 மணி.

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>யாழ்.அஞ்சல் வங்கிக் கிளை | யாழ்ப்பாணக் கிளை,<br>இல.496,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P.:021 222 2696 |

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB National Savings Bank

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு-03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வலி.கிழக்கில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயம் முக்கியமானதாக விளங்குகின்றது. இந்த ஆலயத்தில் திருடர்கள் புகுந்து தாம்பாளங்கள், காளாஞ்சிகள் என்பவற்றைத் திருடிய பின்னர் கோயிலுக்குக் கிழக்குப் புறக் குடியிருப்புக்குப் பின் உள்ள வயல் வெளியினூடாகச் சென்று அவ்விடத்திலேயே அவற்றை விட்டுச் சென்றனராம். மேலும் மக்களின் நோய் பிணிகள் பலவும் அவர்களின் வேண்டுதலின்போது நிவர்த்தியானதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கோயில் ஸ்தாபிதமாகியது தொடக்கம் இவ்வாறு காலத்திற்குக் காலம்



அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நீர்வேலி கிராமத்துக்கு இக்கோயில் ஈசான திக்கில் அமைந்திருக்கின்றது. சிவப்பிராமணர்களால் நித்திய, நைமித்தியங்கள் செய்யப்படுகின்றன. சிவாகமங்களில் வடகிழக்குத் திசையாகிய ஈசான திக்கில் அமையும் கோயிலால் சகல விருப்பங்களும் கைகூடும் எனக் கூறப்பட்டிருக்கிறது. ''சர்வகாமப் பலப்ரதம்'' என்பது ஆகம வாக்காம். இட விசேடத்தாலும் மூர்த்தி, தீர்த்த விசேடத்தாலும் மேம்பட்ட இவ்வாலயத்தை யாவரும் வணங்கி இஷ்டசித்திகளையும் பரகதியையும் அடையலாம் என அருளப்படுகிறது.

அரி அரி வட்டர் என்ற ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் நீர்வேலியில் வாழ்ந்து வந்தார். அவருக்கு குப்பிளான், கட்டுவன் முதலிய கிராமங்களோடும் தொடர்பு இருந்தது.

கோயிலைப் பற்றியும் அரி அரி வட்டரைப்பற்றியுமுள்ள வரலாறுகள் நீர்வேலியில் கூறப்படுவனபோல் குப்பிளான், கட்டுவன் பகுதிகளிலும் கூறப்படுகின்றன.

அரி அரி வட்டர் சிறந்த மந்திரசக்தியுடையவர். தேவதைகளை தம்வசப்படுத்தி தாம் நினைத்தவற்றை அவற்றைக் கொண்டு செய்விக்க வல்லவர். அவருக்கு ஒருமுறை பேதியேற்பட்டது. கிராமம் முழுதும் அந்நோயியால் வருந்தியது. அச்சமயம் அரி அரி வட்டர் வாய்காற்றரவை பிள்ளையார் மீது வசந்தன் பாட்டுப்பாடி வழிபாடு செய்தார். அதனால் பேதிநோயின் கெடுதி நீங்கியது.

தற்போதும் அந்த வசந்தன் பாட்டுப்பாடிக் கோலாட்டம் அடிக்கும் வழக்கம் உண்டு.

இதுதொடர்பாக கட்டுவன் பகுதியிலும், வன்னிப்பகுதியிலும் இந்த வகைக் கோலாட்டம் ஆடப்படுவது சிந்திக்கத்தக்கது. வசந்தன் பாடலடங்கிய ஏடுகளை இன்றும் காணலாம்.

இவைதவிர இக்கோயிலின் கூட்டுப் பிரார்த்தனை இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு புண்ணிய தினங்களிலும் வெள்ளிக்கிழமை, உற்சவதினங்கள் போன்ற விசேட நாள்களிலும் தவறாது நடைபெறுகின்றது. இக் கூட்டுப்பிரார்த்தனையில் சிறுவர்களும் பெரியவர்களும் பங்கு பற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

த.எழிலன்


மேலும் இக்கோயிலிலே தைப்பூசநாளிலே விசேட அபிஷேக உற்சவத்துடன் சேக்கிழார் நாயனாரின் பெரியபுராண படனமும் பயன் கூறலும் ஆரம்பமாகிப் பங்குனி உத்தர நட்சத்திரத்திலன்று புராணபடன பூர்த்தியும் உற்சவமும் மகாகணபதி ஹோமமும் பெரிய மகேசுவர பூசையும் நடைபெற்று வருகிறது.




இவ்வாலய மகோற்சவமானது ஆடிமாத பூரணையை தீர்த்தமாகக் கொண்டு 12 நாள்கள் பெருந்திருவிழாக்கள் இடம்பெறும். ஆலயத்தில் வீற்றிருக்கும் மிகவும் புராதனமான விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான், தெட்சணாமூர்த்தி, மஹாலட்சுமி, வள்ளி, தெய்வயானை சமேத முருகப்பெருமான், நவக்கிரக நாயகர்கள், வைரவப்பெருமான் போன்ற மூர்த்தங்களும் எழுந்தருளி உள்ளன. மேலும் தேரடியில் விநாயகர் மூலஸ்தானத்தை நோக்கி எழுந்தருளியிருப்பது வேறெங்கும் இல்லாத சிறப்பம்சமாகும்.

இந்த ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா ஆலய வெளிவீதியில் உள்ள தீர்த்தக் கேணியில் நடைபெறும். இந்தத் தீர்த்தக் கேணியானது மிகவும் புராதனமானது. அத்துடன் இப்பிரதேசத்தில் மிகவும் சிறந்த நன்னீராகவும் வற்றாத ஊற்றுக்களை உடையதாகவும் அமைந்துள்ளது. இந்த வருடம் புதிய தீர்த்த மண்டபக் கலையம்சம் பொருந்தியதாக அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்க்கலை வரலாற்றில் ''தேர் அழகியல்'' ''தேர் உருவவியலில்'' ஒரு திருப்புமுனையாக அமைந்ததெனலாம். அதாவது



யாழ்ப்பாணத்தில் முகபத்திர மரபில் அமையும் முதலாவது தேராகக் கொள்வது எவ்வகையிலும் பொருத்த முடையதாகும்.

அத்துடன் இத்தேரானது 50 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவின் தலைசிறந்த ஸ்தபதியும் திருவிடைமருதூரைச் சேர்ந்தவருமாகிய இரா.கோவிந் தராஜ் என்பவர் தேரமைப்புக் கலைஞனாக அறிமுகமாகி அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களாக மாதப்பிறப்பு, மகாசிவராத்திரி, பங்குனி உத்தரபூர்தியாக பத்துத்தின லட்சார்ச்சனை, வருடப் பிறப்பு, வைகாசி திருவோண சங்காபிஷேகம், பன்னிருமாத சதுர்த்தி, நவராத்திரி, மானம்பு விழா, மானம்பு விழாவில் பெரியகுதிரை மீது விநாயகர் ஏறி அச்செழு கண்ணகை அம்மன் கோயிலில் மானம்பூ உற்சவம் நடைபெற்று மீண்டும் வீதியால் பவனிவருவது ஒரு பெரு விழாவாகக் கருதப்படுகிறது. மேலும் ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை, பிள்ளையார்கதை இருபத்தொருநாள் இலட்சார்ச்சனை, திருவெம்பாவை, மாணிக்கவாசகர் திருவாதவூரடிகள் புராணபடனம், வரலட்சுமி பூசை, கேதாரகௌரிபூசை என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வாலய மண்டப அமைப்பை நோக்கின் இருதளங்களை உடைய விமானத்துடன் கருவறை, அர்த்தமண்டபம், மஹாமண்டபம், தரிசன மண்டபம், தம்ப மண்டபம், என்பன சிறப்பான கலையம்சங்களுடன் மிளிர்கின்றன. இவ்வாறு நீர்வேலி மக்களினாலும் அயலூர் மக்களாலும் மிகவும் பக்திப்பரவசத்துடன் வழிபாடு இயற்றும் வழிகாட்டும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஆலயங்களில் முதன்மையானதாகத் திகழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

*(முற்றும்)*

# வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் – நீர்வேலி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

யாழ்.மாவட்டத்தில் வாழைப் பயிர்ச்செய்கையாளர்களின் நலனையும் விற்பனை வசதியையும் கருத்தில் கொண்டு உருவானதே வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.

இந்தச் சங்கம் கூட்டுறவுத்துறையின் செயற்பாடுகளில் வலி.கிழக்குக்கு தனியிடம் உண்டு. அந்த வகையில் நீர்வேலியில் அமைந்துள்ள வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளும் தனித்துவமானதாகும். இலங்கையில் தனிய ஒரே ஒரு சங்கமாக விளங்குவதோடு வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரின் தொழில் ரீதியான முன்னேற்றத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஞால ஆதவன்

சங்கத்தின் நோக்கம் என்ற வகையில் 'கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய சங்க உறுப்பினர்களின் சமூக பொருளாதார நலன்களை ஊக்குவித்தலும் உறுப்பினர்களிடையே சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி, தன்னுதவி ஆகியவற்றை உற்சாகப்படுத்துவதுமே சங்கத்தின் நோக்கமாய் இருத்தல் வேண்டும்' எனக் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

சங்கம் செயற்படத் தொடங்கிய காலத்தில் இருந்து 63 ஆண்டுகள் வரையில் தொடர்ந்து செயற்பட்டு வரும் சங்கத்தின் நிர்வாக எல்லைப்பரப்பு 'யாழ்.மாவட்டத்தில் உள்ள வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு' என்ற போதிலும் வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரின் உற்பத்தியைச் சந்தைப்படுத்தும் தனது பணிக் கட்டமைப்பில் கூட்டுறவு ஆணையாளரின் முன் அனுமதியுடன் அவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக வேறு எந்தத் தொழில் பரப்பிலும் சங்கம் செயற்படலாம். ஆணையாளரின் தீர்மானப்படி குறிக்கப்படும் கால எல்லையில் அந்த மேலதிக தொழில் பரப்பும் சங்கத்தின் தொழில் பரப்புக்கு உட்பட்டதாகக் கருதப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது சங்கத்தின் உபவிதியில்.

கூட்டுறவுத்துறையில் ஏனைய தொழில்சார் சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையில் இருப்பதால் அவற்றுக்கென உருவாக்கப்பட்ட சங்க விதியானது பொதுமைப் படுத்தப்பட்ட நிலையில் பயன்படுத்தப்படுவது உண்டு. ஆனால் வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று மட்டுமே இருப்பதனால் அதற்கென உருவாக்கப்பட்ட உபவிதிகள் கூட்டுறவுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டு சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சங்கத்தில் குறிப்பிட்ட பங்குகளைக் கொண்ட 380க்கு மேற்பட்டவர்கள் உறுப்பினராக உள்ளனர். உறுப்பினர்களின் தொழில் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டைத் தனித்தும் ஒருமித்தும் உயர்நிலைப்படுத்துவதில் சங்கம் உறுப்பினர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் கூட்டுறவுத் திணைக்கள மட்டத்திலும் குறிப்பிடத்தக்க உயர் நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றது.

சங்க உறுப்பினர்களதும், வாழைக்குலைச் செய்கையாளரதும் பாவனையாளர்களதும் நலனை முதல் நிலைப்படுத்தி தனது செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் சங்கம் உறுப்பினர்களுக்கான சேமிப்புத் திட்டங்களைக் கையாளுதல், சிக்கனச் சேமிப்பு ஊடாக சேமிப்பை ஊக்கப்படுத்தல், உறுப்பினர்களின் குடும்ப விவசாய கைத்தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்தல், எல்லாவகையான பொருள்களிலும் மொத்த, சில்லறை வியாபாரத்தை நடத்துதல், நிதி திரட்டுதல் உறுப்பினர்களுக்கு கடன்களையும், முற்பணத்தையும் வழங்குதல் வேறு கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்தல்,விளைபொருள், கால்நடை வளர்ப்பினால் பெறப்பட்ட பொருள்கள், குடிசைக் கைத்தொழில் பொருள்கள் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், விற்பனை செய்தல், உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் பொருட்டு ஒப்பந்தங்கள் அல்லது வேறுவகைகளில் வேலைகளை மேற்கொள்ளுதல், காணிகள், கட்டிடங்கள், இயந்திரங்களைச் சொந்தமாக்குதல், வாங்குதல் - விற்றல், வாழைக் குலைகளைக் களஞ்சியப்படுத்தல் - விற்பனை செய்தல், வாழை யில் இருந்து பெறப்படும் பயன்படுத்தக்கூடிய பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல், வேறு வியாபார முயற்சியை மேற்கொள்ளுதல் என்ற வகையில் தனது பணி முன்னெடுப்புக்களை ஆரோக்கியமான நிலையில் மேற்கொண்டு வருகின்றது.

சங்கத்தின் நடப்பு நிர்வாகத்தின் தலைவராக சி.சுந்தரலிங்கம் கடமைபுரிகின்றார். இவர் குறிப்பிடத்தக்க காலத்துக்கு மேல் தொடர்ந்து தலைவராக இருந்து வருவது சங்கத்தின் ஆரோக்கியமான செயற்பாட்டையும் உறுப்பினர்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. சங்கத்தின் செயலாளராக சி.திருநாவுக்கரசுவும் முகாமையாளராக ஆ.லோகரத்தினமும் 5 பேர் கொண்ட நிர்வாகக் குழுவுமாக (7 பேர் கொண்ட பணிப்பாளர் சபை) செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சங்கத்தின் அபிவிருத்திக்கு காலத்துக்கு காலம் தொண்டு நிறுவனங்களும் உதவிகளை வழங்கி வருகின்றது. கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும், வாகனங்களை வழங்கி புதிய கட்டடத் தொகுதியான மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சங்கத்தின் நிதிநிலை லாபத்தில் இருப்பதோடு மாதாந்தம் தற்பொழுது சகல செலவுகளும் நீக்கி உயர் இலாபத்தில் இருப்பதாக முகாமையாளர் ஆ.லோகரத்தினம் தெரிவித்தார்.

சங்கத்தின் செயற்பாடுகளில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கை கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதோடு அண்மைக் காலத்தில் தென்னிலங்கையில் இருந்துவரும் வியாபாரிகள் கட்டுப்பாடின்றித் தோட்டங்களுக்குச் சென்று வாழைக்குலையைக் கொள்வனவு செய்வதும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகத் தலைவர் சி.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவர்களை பல்லாண்டு வாழ்க வாழ்க! என வாழ்த்துவோர்

அப்பா-ரகுராமன்,அம்மா-ரம்மியா (கனடா), அம்மம்மா,அம்மப்பா,அப்பம்மா,அப்பப்பா சித்தப்பா,சித்தி,மாமா,மாமி,மற்றும் உறவினர்கள். (இன்பர்சிட்டி,பருத்தித்துறை)


# அரசால் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரித்தாளருக்கு அடுத்தவருடம் நஷ்டஈடு

கொழும்பு, ஒக்.28

அரசால் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக 860 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என பெருந்தெருக்கள் அபிவிருத்தி பிரதியமைச்சர் நிர்மல் கொத்தலாவெல தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு முதல் பாதை அபிவிருத்திக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான இந்த நஷ்டஈடு அடுத்தவருடம் வழங் கப்படும்.

இவ்வருடம் திறைசேரியிலிருந்து கிடைத்த 420 கோடி ரூபா ஏற்கனவே நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கான நஷ்டஈடுகளைத் துரிதமாக வழங்குமாறு ஜனாதிபதி, அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார் என பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

## பல்கலை பிக்கு மாணவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தரைத் தாக்கினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிக்கு மாணவரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது என நுகே கொட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். பிக்கு மாணவர்களது விடுதி யிலிருந்து வந்த இரைச்சல் குறித்து விசாரிப்பதற்காக பல்கலைக்கழக உபவேந்தர் விடுதிக்குள் செல்ல முயற்சித்தபோதே மேற் படி தாக்குதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)


செயல்பாட்டை அதிகரிப்பதுடன் உங்கள் சரீரத்தை கச்சிதமாக வைத்திருக்க உதவுகிறது

Betty Lou's®
சீனி அற்ற புரோட்டீன் சத்து பானம்

குளுக்கோஸ் கட்டுப்பாட்டு உணவுகள் நிறை கட்டுப்பாடு என்பனவற்றுக்கு Betty Lou's கச்சிதமானது, சுறுசுறுப்பான பூரணமான வாழ்க்கைக்கும் உடம்மை ஊட்டத்துடன் பேணவும் உதவுவதுடன் மேலதிக சுவையை அளிக்கின்றது

Betty Lou's உணவுக்கு பதிலாக பாவிக்க கூடிய ஆரோக்கியம் வழங்கும் பகல் போசணமாக விளங்குகிறது. இதில் அடங்கியுள்ள தாதுப்பொருட்கள் மற்றும் மினரல்கள் உடன் சமிபாடடைவதற்கும் ஏற்றதாக தயாரிக்கப்பட்டுள்ளன.



உங்களுக்கு ஊட்டமளிக்கும் சக்தி அளிக்கும்!
வியத்தகு வெனிலா, செந்நிற சொக்லேட் மற்றும் ஒப்பற்ற ஒரேஞ்ச் கிறீம்




தண்ணீரில் உடனடியாக கலக்கின்றது.
உயர் தர பால் மற்றும் அரிசி புரோட்டீன் அடங்கியுள்ளது. கடல் மினரல் உட்பட அதிக உயர்சத்துகளும் கனிபொருட்களும் உள்ளடங்கியுள்ளன.

சந்தைப்படுத்துவோர்
வரையறுக்கப்பட்ட சூரி ட்ரேடிங் (தனியார்) கம்பனி.
தொலைபேசி: + 94 11 4810251, ஈமெயில்: info@suritrading.com
ஹொட்லைன்: விசி 077 22 61899 / விக்டர் 077 4188698 / ஷதி 071 2830611
விநியோகஸ்த்தர்: City Medicals- Jaffna TP: 021-2222198
சுப்பர்மார்க்கட் மற்றும் பார்மசிகளில் கிடைக்கும்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/பளை றோ.க.த.க பாடசாலை மாணவனும்
அமிர்தநாயகம் டெனிசியா
தம்பதியரின் செல்வப்
புதல்வனுமாகிய

செல்வன் அ.அபியூட் (அபி)



2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்
பரிசில் பரீட்சையில்
142 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்ததையிட்டு
மனமகிழ்ந்து பாராட்டுவதுடன்
பல்கலையும் கற்று சிறப்புற
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
இவருக்கு கற்பித்த அதிபர்,
ஆசிரியர்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பின் அம்மா, அம்மம்மா,
அண்ணா, அக்கா, பூட்டம்மா,
சிஸ்ரர் மாமி மற்றும்
உறவினர்கள்.

புலோப்பளை கிழக்கு,
பளை. (105201)



உயர் கல்வி அமைச்சு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் – யாழ்ப்பாணம்.

SLIATE

665/2, கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2009ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த (புதிய அல்லது பழைய பாடத்திட்டம்) மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா **HNDA**(Part/Full time)
உயர் தேசிய வியாபார நிர்வாக டிப்ளோமா **HNDBA**
உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா **HNDM**
உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா **HNDIT**(Part/Full time)
உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா **HNDE**(Part/Full time)

மேலதிக தகவல்களுக்கு www.jatialumni.org என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

சில கற்கைநெறிகளுக்கு தமது பட்டப்படிப்புகளில் விலக்களிப்பு வழங்கும் பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களாவன:

BIRMINGHAM CITY University | UniSA University of South Australia | CMA

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி -
இயக்குனர்
உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்
665/2, கடற்கரைவீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
# கலைப்பீடம்

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்**
**இதழியல் டிப்ளோமா கற்கைநெறி**

## Diploma in Journalism

கல்வி ஆண்டு 2010-2012

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் பகுதிநேர மற்றும் முழுநேர இதழியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கு 18.09.2010 அன்று பத்திரிகைகளில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 10.11.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா 100ஐ செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.*

மேலதிக விபரங்களுக்கு:
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
இல.84, ஜும்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 9873
பதிவாளர்
27.10.2010 (சி-572199)



## வேலையாள் தேவை

(Computer Type Setting) கொம்பியூட்டர் ரைப் செட்டிங் தெரிந்தவர்கள், புத்தகம் கட்டுபவர்கள், பழகுபவர்கள் (Book Binding) தேவைப்படுகிறார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

"BOASCO" "போஸ்கோ" (திருமண அழைப்பிதழ்கள்)
(நல்லூர் முருகன் கோயில் முன்)
252, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் (சி-571784)


## கைவினையாளருக்கான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக். 28

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைவினைஞர்களுக்கான நவீன கைப் பணிப்பொருள் விருத்திப் பயிற்சிநெறி வகுப்புக்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை யாழ். மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் அந்தந்தப் பிரதேச செயலகத்திலோ அல்லது கைத்தொழில் அபிவிருத்தி சபை யாழ். மாவட்ட அலுவலகத்திலோ தொடர்புகொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இப்பயிற்சி நெறியானது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ற)

## ஒட்டுச்சுட்டானில் குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

இரு கைக்குண்டுகளும் எட்டு 81 மி.மீ. குண்டுகளும் ஒட்டுச்சுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில், வசந்தபுரம் பிரதேசத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய குற்ற விசாரணைப் பொலிஸ் குழுவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24.10.2010) மீட்கப்பட்டுள்ளன.

இக்குண்டுகள் அப்பிரதேசத்தில் குழியொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவின் உபபொலிஸ் பரீட்சகர் புத்திக குணரத்தினவின் தலைமையில் குழுவொன்று மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளது. (ஒ-5)


## தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம் - கரவெட்டி

### வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

எதிர்வரும் 29.10.2010 வெள்ளிக்கிழமை வள்ளியம்மன் திருமணப்படனமும் கந்தபுராணப் பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு பூசை ஆரம்பமாகும். காலை 7.30 மணியளவில் வள்ளியம்மன் திருமணப் படனம் ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று, முருகப் பெருமான் வீதிவலம் வந்து அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

**ஆலய பரிபாலன சபை.**



## அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பம்



கொழும்பில் பிரபலமான ஜெயா அழகுக் கலை நிலைய உரிமையாளர் N.நகுலராணி அவர்களின் புதிய அழகுக்கலை வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன.
எல்லாவிதமான பேசியல், சிறப்பு பேசியல், முகப்பருக்களுக்கான சிகிச்சைகள், பெடிப்பியூர், மெனிக்கியூர், வக்சிங், பேமிங், றீ பொண்டிங், ஸ்ரெயிட் கீற்றினிங், திரெட்டிங், பிளீச்சிங், கெயர் ஸ்பா முதலியன கற்பிக்கப்படும். உங்கள் பதிவுகளை உடன் செய்து கொள்ளலாம்.
பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
29.10.2010 - 31.10.2010 வரை சிறப்புச் சலுகைகளும், சிறப்புக்கட்டணக் கழிவுகளும் வழங்கப்படும். (105214)

**தொடர்பு: சாந்திபவனம்,**
**நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி. T.P. 0772378726**
**திருமண ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.**



## 21 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

(28.10.2010)




நயினாதீவு
8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
திரு.திருமதி
இராஜேஸ்வரன் குகனேஸ்வரி
தம்பதியரின்
செல்வப் புதல்வன்

**ரிஷிகாந்தன்**

தனது 21 ஆவது பிறந்த தினத்தை இன்று (28.10.2010) சுவிஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
ரிஷிக்குட்டியை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் அருள்பெற்று சகல செல்வங்களும்பெற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்
'தாயகம்' 8 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.



## மென்பானங்களை ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்

திருமண நிகழ்வா,
பிறந்த நாள் கொண்டாட்டமா,
மங்களகரமான திறப்பு விழாக்களா,
எதுவாயினும் உங்கள் நிகழ்வுகளைச்
சிறப்பிக்க முற்கூட்டியே அறிவித்தல்
தரப்படின் குளிரூட்டப்பட்ட நிலையில்
(Elephant House Soft Drinks) 200ml
யானைச் சோடாவை நீங்கள் அழைக்கின்ற
இடத்திற்கு கொண்டுவந்து வழங்கப்படும்.
"வாரீர் வந்து பருகி மகிழ்வீர்"




பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
368/B முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டு மடம். யாழ்ப்பாணம்.
T.P-021 222 5595
-021 492 5101



## தீபாவளி மலிவு விற்பனை

### அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்



| | |
|---|---|
| ★ சீத்தை- சைனா | 85/= |
| ★ பப்பிளீன்- சைனா | 85/= |
| ★ கொட்டன் '44' | 160/= |
| ★ பட்டசில்க் பிளேன்கலர் | 105/= |
| ★ சூட்டிங் லெந் | 300/= |
| ★ சாரீஸ் (Office Wear) | 450/= |

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
**66, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## பொன்விழாக் காணும் கிளி /கறுக்காய்த் தீவு ம.வி.

பூநகரி

அறுபது பத்து
இருபத் தெட்டினில்,
அற்புத முருகனின்
அருளினால்
எழுந்தது எமது பாடசாலை
பொன்விழாக் காணும்
இன்றைய நாள்வரை
பொறியியலாளர்கள்
வைத்திய நிபுணர்கள்
கணித விற்பனர்
கற்பிக்கும் ஆசான்கள்
கரையேறத் துடிக்கும்
கரையிலாக் கல்விமான்கள்
வளர்த்து வைத்த
வையகத் தாயே!

பட்டங்கள் பெற
பாதையைக் காட்டும்
பள்ளியின் புகழ்கள்
எங்கும் பரவட்டும்!
குற்றங்கள் இன்றி
கூர்வேல் போல
வெற்றிப் பயணங்கள்
நோக்கிச் செல்லட்டும்!
எந்நாளும் எப்போதும்
எங்குமே உன்புகழ்
வளரவே எம்மனம்
வாழ்த்துகின்றனவே!

வாழ்த்துவோர்,
ம. இராஜகோபால்,
இ. கலைச்செல்வன்
பழைய மாணவர்கள்
கிளி/கறுக்காய் தீவு ம.வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஓட்டங்களால் ஸ்கந்தா ஸ்ராரை வென்றது ஜொலிஸ்ரார் அணி

வலி.வடக்கு, ஒக். 28

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டக் கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய அரையிறுதி ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 27.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 160 ஓட்டங்களைப்பெற்றது.

சதீஸ் 4 நான்குகள், 2 ஆறுகளுடன் 44 ஓட்டங்களையும், ஸ்ரீகரன் 26 ஓட்டங்களையும், ஜெசீதரன் 24 ஓட்டங்களையும், துஷ்யந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிரஞ்சன் 6 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நாதன், பகீதரன், வாமணன் முறையே 23, 24,36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினார்கள்.

161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பகீதரன் 4 நான்குகள், 4 ஆறுகளுடன் 46 ஓட்டங்களையும், நிரஞ்சன் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும், வாமணன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சஞ்சீவன் 6 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், புருசோத்தமன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நிரோஜன், கிருஷ்ணசந்திரா முறையே 21, 24 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாவது சுற்றில் இன்று வியாழக்கிழமை புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப 3.30 மணி

* நக்கீரன் விளையாட்டுக் கழகம் எதிர் சிவானந்த விளையாட்டுக்கழகம்.

மாலை 4.15 மணி

* சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம். (த-23)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை உதயன் நிறுவன ஆதரவுடன் நடத்திய பளுதூக்கும் போட்டியில் 56 - 62 கிலோ எடைப் பிரிவின் போட்டியில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற வீரர்களான சி. பார்த்தன், நா. பார்த்தீபன் ஆகியோர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர், இளம்பிறையன் பயிற்சி ஆசிரியர் பொ. மகாதேவா ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# சென்.மைக்கல், றோயல், ஹென்றிஸ் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 28

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றது.

யாழ். லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புத்தூர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் எதிர்த்து விளையாடிய சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் 3:0 என்ற கோல் கணக்கில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை ஊரெழு றோயல் வி.கழகம் வீழ்த்தியது. மற்றொரு போட்டியில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணி போட்டிக்க சமுகமளிக்காததால் அந்த அணியோடு மோதவிருந்த இளவாலை யங்ஹென்றீஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (த-23)

# 16 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்: 4 பிரிவுகளில் 12 அணிகள் மோதும்

வலி.வடக்கு, ஒக். 28

வலிகாமம் கல்விக் கோட்டங்களுக்கு இடையே நடைபெற்ற 16வயதுப்பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வலய மட்டத்தில் பன்னிரண்டு பாடசாலை அணிகள் மோதவுள்ளன.

இந்த அணிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.


இப்போட்டிகளில் லீக் முறையில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

'ஏ' பிரிவு வில் அராலி இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மாதகல் சென்.யோசேப் வித்தியாலயம் ஆகியனவும்-

'பி' பிரிவில் புனித ஹென்றியரசர் கல்லூரி, வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகியனவும்,

'சி' பிரிவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் ஆகியனவும்,

'டி' பிரிவில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வட்டுக் கோட்டை மத்திய கல்லூரியும் மோதவுள்ளன. (த-86)




# தங்கம் வென்றார் ஐங்கரன்



யாழ்ப்பாணம், ஒக். 28

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக மாணவன் க. ஐங்கரன் இரண்டு தங்கப் பதக்கத்தையும், வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளார்.

இவர் 400 மீற்றர் தடை தாண்டல், 4×400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் முதலிடங்களைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களையும் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார். (த-23)

# யாழ். பல்கலையில் போதிய பயிற்சியாளர்கள்: வீரர்களின் ஒத்துழைப்பும் அக்கறையும் போதாது

## விரிவுரையாளர் இளம்பிறையன் கூறுகிறார்

வலி.வடக்கு, ஒக். 28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தற்போது பல விளையாட்டுக்களுக்குப் பயிற்சியாளர்கள் இருக்கின்றனர். ஆனால் வீரர்களின் ஒத்துழைப்பும் ஆர்வமும் குறைவா கக் காணப்படுகின்றது. அன்று பளுதூக்கும் பயிற்சியை நாம் ஆரம்பித்த போது பயிற்சியாளர்களே இல்லாத நிலை காணப்பட்டது.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இளம்பிறையன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை உதயன் ஆதரவுடன் நடத்திய திறந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு பல்கலைக்கழக பளுதூக்கும் அறையில் இளம்பிறையன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று பல போட்டிகளை நடத்துவதற்கு உரிய அனுசரணையாளர்கள் இல்லாமையால் போட்டிகளை நடத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் போட்டிகளை நடத்தக் கழகங்கள் பின்னடித்துச் செல்கின்றன.

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் உதயன் நிறுவனம், ஈ.எஸ்.பி. நிறுவனம் போன்றவை விளையாட்டுத்துறைக்கு இன்று தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றன.

உதயனைப் பொறுத்த வரையில் ஆரம்பிக்கப்பட்டு இன்று இருபத்தைந்து வருடங்கள் ஆகின்றன. அன்று முதல் இன்று வரை அது விளையாட்டுக்கு உதவிகளை வழங்கி வருகின்றமை பாராட்டத் தக்கதாகும்.

அன்று குடாநாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ் நிலையை சாதகமாகப் பயன்படுத்தி மக்களுடைய வயிற்றில் அடித்துப் பணத்தை திரட்டியவர்கள் உள்ளனர். இப்படியானவர்கள் இத்தகைய நிகழ்வுகளுக்கு உதவ முன்வரவேண்டும்.

ஈ.எஸ்.பி. நிறுவனம், உதயன் நிறுவனம் போன்றவை எப்போது கேட்டாலும் உதவிகளை வழங்கி வருகின்றன. பல வசதி படைத்த பாடசாலைகள், கல்லூரிகள் கூட இத்தகையவர்களின் உதவிகளை நாடிச்செல்கின்றன. இந்தப் பாடசாலைகளுக்குப் பழைய மாணவர்கள் பெரும் தொகையான பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் அதனையும் பெற்று இத்தகையவர்களின் உதவிகளையும் பெற்று அனுபவிக்கும் நிலைமை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

பல பாடசாலைகள் எத்தகைய உதவிகளும் இன்றி கஷ்டப்படுகின்றன. இத்தகைய பாடசாலைகளுக்கும் உதவிகள் கிடைக்க வசதி படைத்த பாடசாலைகள் விட்டுக்கொடுக்க வேண்டும் - என்றார். (த-86)

# அருணோதயா மூன்றாமிடம்

வலி.வடக்கு, ஒக். 28

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 3 ஆம் இடத்தைப் பெற்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண் டன.

போட்டி ஆரம்பமாகியதும் நடேஸ்வராக் கல்லூரி தடுத்து விளையாடிய போதிலும் தொடர்ந்து எதிரணியினரின் அதிரடியான செயற்பாட்டினால் அருணோதயாக் கல்லூரி 2 கோல்களைப் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் எதிர்பார்த்ததைவிட விறுவிறுப்பாக காணப்பட்டது. ஆனாலும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மேலும் ஒரு கோலைப் பெற்று வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அருணோதயாக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்று வலய மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28

பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர் அணிகளுக்கு இடையிலான 19 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் 15 வயதுக்கு மேற்பட்ட உள்ளூர் அணிகள் பங்குபற்றவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார். (ஐ-23)



சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரூடம் கூறி மனித மனங்களில் இடம்பிடித்தாயே அன்று;
# உன்னுயிர் நீத்து இதயங்களைக் கனமாக்கிச் சென்றாயே இன்று!

பேர்லின், ஒக். 28

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகளைத் துல்லியமாக - சரியாகக் கணித்துச் சொன்ன ஒக்டோபஸ் போல் இறந்துவிட்டது. இந்தச் செய்தி கேட்டு உதைபந்தாட்ட உலகமே சோகத்தில் மூழ்கியுள்ளது.


தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடந்துகொண்டிருந்தபோது, உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட ஒரு விடயம் என்றால் அது போல் என்ற பெயரைக் கொண்ட கடல்வாழ் உயிரினமான ஒக்டோபஸ் பற்றியதுதான்.

மேற்கு ஜேர்மனியின் ஓபர் அவுசனில் கடல்வாழ் உயிரினங்கள் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் வசித்த ஒக்டோபஸ் 'போல்', உலகக் கிண்ண உதைபந்தாட்ட முடிவுகளை மிகத்துல்லியமாகக் கணித்துக் கூறியது.

அதாவது, இரண்டு சிறிய பெட்டிகளில், போட்டியில் மோதும் அணிக்குரிய நாட்டின் தேசியக் கொடிகளை வைத்து விடுவார்கள். பிறகு அவற்றில் ஒக்டோபஸுக்குப் பிடித்தமான உணவுகளைப் போட்டு, அது வசிக்கும் தண்ணீர் தொட்டிக்குள் அப்படியே இறக்குவார்கள். அப்போது ஒக்டோபஸ் போல் எந்தப் பெட்டியைத் திறந்து உணவை எடுத்துச் சாப்பிடுகிறதோ அந்தப் பெட்டியில் உள்ள அணியே வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டது.

தாய்நாடான ஜேர்மனி மோதிய 7 ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி ஆகியவற்றின் முடிவுகளை மிகவும் துளியும் சிதறாமல் கச்சிதமாக ஒக்டோபஸ் போல் கணித்துச் சொன்னது. இதனால் உலகக் கிண்ணப் போட்டியை விட ஒக்டோபஸ் போல் பற்றி அப்போது அதிகமாகப் பேசப்பட்டது.

அரையிறுதியில் ஜேர்மனி அணி, ஸ்பெயினிடம் தோற்கும் என்று ஒக்டோபஸ் போல் கணித்துச் சொன்ன மாதிரியே பலித்த போது, அந்த நாட்டு ரசிகர்கள் கொதித்துப் போனார்கள். அந்த ஒக்டோபஸை உடனே துண்டு துண்டாக்கி, வறுத்தெடுக்க வேண்டும் என்று அதற்கு மிரட்டல் விடுத்து அருங்காட்சியகத்திற்கு மின்னஞ்சல்கள் அனுப்பினர்.



இதேவேளை, உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அணி நெதர்லாந்தைத் தோற்கடிக்கும் என்று சொன்னது. சொன்ன மாதிரியே நடந்தமையால், ஸ்பெயின் நாட்டு அரசு ஒக்டோபஸுக்குத் தங்கள் நாட்டின் கௌரவ நண்பன் குடியுரிமையை வழங்கிச் சிறப்பித்தது. அத்துடன், அந்த ஒக்டோபஸை வாங்க பல்வேறு தரப்பினரும் போட்டி போட்டனர். ஆனால், அருங்காட்சியக நிர்வாகம் அதனைக் கொடுக்க மறுத்து விட்டது.

இப்படி உலகக் கிண்ணத் தொடரின் போது ஆரூடம் கூறியதன் மூலம் குறுகிய காலத்தில் பிரபலமடைந்த ஒக்டோபஸ் போலின் ஆயுள் கடந்த திங்கட்கிழமை இரவுடன் முடிந்தது.

கிட்டத் தட்ட 3 வயதாகும் தறுவாயில் இருந்த ஒக்டோபஸ், இயற்கையாக மரணம் அடைந்துவிட்டது என அருங்காட்சியக மேலாளர் ஸ்ரீபன் போர்வோல் தெரிவித்தார்.

எங்களது இடத்திலேயே ஒக்டோபஸ் போலைப் புதைத்து, அதற்கு சிறிய சமாதியை நிரந்தரமாக இருக்கும் வகையில் கட்டுவோம். போல் இறந்துவிட்டாலும் அது கைத்தொலைபேசிகள், ரீசேர்ட் போன்ற ஆடைகள் மூலம் தொடர்ந்து வாழ்ந்துகொண்டேயிருக்கும் எனக் கண்களில் நீர் வழியச் சொன்ன ஸ்ரீபன் போர்வோல், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அது பற்றிய தொகுப்பையும் வெளியிட இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்.

ஆரூடம் கூறி மனித மனங்களில் நீங்காத இடம்பிடித்த 'போல்', இன்று மறைந்து விட்டது என்ற செய்தி உண்மையிலேயே உலக உதைபந்தாட்ட ரசிகர்களின் இதயங்களைக் கனமாக்கி - பெரும் சோக அலையை ஏற்படுத்திச் சென்றுள்ளது என்றே கூறவேண்டும்.

இதேவேளை, அடுத்த உலகக் கிண்ணத் தொடரை இங்கிலாந்துதான் நடத்தும் என்று அண்மையில் அது ஆரூடம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (''என்'')

## 33ஆவது அகவையில் சங்கக்கார

கொழும்பு, ஒக். 28



இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவரான குமார் சங்கக்கார நேற்றையதினம் தமது 33 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

இலங்கை அணி தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை அணித் தலைவரான குமார் சங்கக்கார தமது 33ஆவது பிறந்த தினத்தை நேற்று ஆஸ்திரேலியாவில் கொண்டாடினார்.

அவருக்கு இலங்கை அணியின் சக வீரர்கள் உட்பட ஆஸ்திரேலிய வீரர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

## பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் தென்னாபிரிக்க அணி வெற்றி!

துபாய், ஒக். 28

பாகிஸ்தானுக்கு எதிரான 'இருபது-20' கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' கிரிக்கெட் தொடர் துபாயில் நடைபெற்றுவருகிறது.

முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாகத் துடுப்பாட்டத்தில், இம்ரான் பர்ஹட் (10), மொஹமட் ஹபீஸ் (13), உமர் அக்மல் (14), அணித்தலைவர் சயீத் அப்ரிடி (25), மிஸ்பா உல் ஹக் (27 - ஆட்டமிழக்காமல்) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்கைத் தொடவில்லை.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில், சொட்சோபா, போத்தா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், அல்பி மோர்கல், மார்னி மோகல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 120 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 120 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், டுமினி (41), இங்ரம் (46 - ஆட்டமிழக்காமல்) ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், சொய்ப் அக்தர் 2 விக்கெட்டுகளையும், மொஹமட் ஹபீஸ், சயீட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க வீரரான டுமினி தெரிவுசெய்யப்பட்டார்.



இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா முன்னிலை பெற்றுள்ளது.

## உணர்வு மிக்க தருணம் இது!

புதுடில்லி, ஒக். 28



உலக லெவன் டெஸ்ட் அணியில் பிராட்மேனுடன், என்னையும் சேர்த்திருப்பதை நம்பவே முடியவில்லை. அதிக வியப்பைத் தரும் இந்த விடயம் உணர்வு மிக்க தருணமாக அமைந்துள்ளது.''

- இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சச்சின் கூறியுள்ளார்.

கிரிக்கெட் அரங்கில் சிறந்து விளங்கிய 11 டெஸ்ட் வீரர்களின் பட்டியலை, ஈ.எஸ்.பி.என். - கிரிக்கின்போ இணையத் தளம் அண்மையில் வெளியிட்டது.

இதில் ஆஸ்திரேலிய வீரர்கள் நால்வர், மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் மூவர், இங்கிலாந்து வீரர்கள் இருவர், மற்றும் பாகிஸ்தான் வீரர் ஒருவரும் இடம் பெற்றுள்ள னர்.

தற்போது விளையாடி வரும் வீரர்களில் இந்தியாவின் சச்சின் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே சச்சின் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிரிக்கெட் ஜாம்பவான்கள் நிறைந்த ஒரு கனவு அணியில் விளையாடுவது என்பது, மிகப்பெரிய வாய்ப்பு ஆகும். டெஸ்ட் போட்டியின் உணவு இடைவேளைக்குப் பின்னர் பிராட்மேனுடன் இணைந்து களமிறங்குவது அல்லது விவியன் ரிச்சர்ட்ஸுடன் சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வழங்குவது, கேரி சோபர்ஸுடன் இணைந்து கிரிக்கெட் குறித்து விவாதிப்பது போன்ற வித்தியாசமான அனுபவங்கள் இதில் கிடைக்கும்.

இதுபோல மற்ற வீரர்களுடன் இணைந்து கிரிக்கெட் குறித்து உரையாடலாம். ஜேக் ஹோப்ஸ், லென் ஹட்டன் போன்ற வீரர்களிடம், அவர்களது காலத்தில் அவர்கள் எதிர்கொண்ட சிறப்பான பந்து வீச்சாளர்கள் குறித்து - கிரிக்கெட் தன்மைகள் குறித்துத் தெரிவிக்குமாறு கேட்கலாம்.

இதற்குமுன்னர் நான் மால்கம் மார்ஷலுடன் உள்ளூர் போட்டியில் பங்கேற்றுள்ளேன். ரிச்சர்ஸுடன் கண்காட்சிப் போட்டியில் விளையாடியுள்ளேன். என்னுடைய 12 வயதில் முதன் முதலாக டென்னிஸ் லில்லியைச் சந்தித்துள்ளேன். பின்னர் 15 வயதில் எம்.ஆர்.எப். பவுண்டேசனில் இருந்த போது, டென்னிஸ் லில்லி, எனக்குப் பந்துவீசியுள்ளார். இது மிகவும் 'திரில்'லான அனுபவம் ஆகும்.

இப்போது இவர்கள் அணைவரும் உள்ள அணியில் நானும் இணைந்திருப்பது மிகவும் கற்பனையான - வியப்பான அனுபவத்தைத் தருகிறது இவ்வாறு சச்சின் தெரிவித்தார்.

## விசாரணைக்கு மோடி தயார்!



என் மீது சுமத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு 'வீடியோ' மூலம் பதிலளிக்கத் தயாராக உள்ளேன். இல்லாவிட்டால், லண்டனுக்கு வாருங்கள், அதற்கான விமானப் போக்குவரத்துச் செலவுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்.'' - என்று அமுலாக்கப் பிரிவினருக்கு லலித்மோடி யோசனை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளின்போது மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறி லலித்மோடி மீது இந்திய அமுலாக்கப்பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், லலித்மோடி இந்தியாவுக்கு வராமல், லண்டனில் தங்கியுள்ளார். இதனால், மோடியின் கடவுச்சீட்டைத் திரும்பப் பெறுமாறு வெளியுறவுத் துறையிடம், அமுலாக்கப்பிரிவினர் தெரிவித்தனர்.

அதேவேளை, மேற்படி விடயம் குறித்துப் பதிலளிக்குமாறு மோடிக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் கடைசி நாள் இன்று ஆகும்.

இந்நிலையில், அமுலாக்கப்பிரிவினரின் விசாரணைக்கு ஒத்துழைக்கத் தயார் என மோடி தெரிவித்துள்ளார். இருப்பினும் புதிய யோசனை ஒன்றை வழங்கியுள்ளார்.

இது குறித்து மோடியின் வழக்கறிஞரான அப்தி கூறியவை வருமாறு:- ''அமுலாக்கப்பிரிவினரின் விசாரணைக்குப் பதிலளிக்க மோடி தயாராகவுள்ளார். ஆனால், மும்பையில் மோடியின் உயிருக்கு ஆபத்துள்ளது. இதை மும்பைப் பொலிஸாரும் நன்கு அறிவர். இதனால், 'வீடியோ' மூலம் விசாரணை நடத்தவேண்டும் என மோடி விரும்புகிறார். இதற்கு சட்டத்தில் இடம் உள்ளது. இல்லாவிட்டால், லண்டன் வந்து விசாரணை நடத்தலாம். இதற்கான விமானப் போக்குவரத்துச் செலவுகளைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் மோடி தெரிவித்துள்ளார்'' - என்றார்.

## கொச்சிக்கு 30 நாள்கள் கெடு!

கொச்சி அணியின் பங்குதாரர்கள் குறித்த முழு விவரங்களைக் கையளிக்க, அந்த அணிக்கு 30 நாட்கள் அவகாசம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட கொச்சி அணியின் பங்குதாரர்கள் குறித்த முழு விவரம் தெரியாதமையால், அந்த அணி விளையாடுவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது.

இதுதொடர்பாக அந்த அணியிடம் விளக்கம் கேட்டு இந்தியக் கிரிக்கெட் சபையால் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. பின்னர், கால அவகாசம் கேட்டு கொச்சி அணி சார்பில் கோரப்பட்டது. இந்த நிலையில் கொச்சி அணி விவகாரத்தில் இறுதி முடிவு செய்ய ஐ.பி.எல். நிர்வாகக் குழுக் கூட்டம் நாக்பூரில் நேற்று நடந்தது. இதில் கொச்சி அணிக்கு 30 நாட்கள் அவகாசம் கொடுத்து - இறுதிக் கெடு விதித்து, நோட்டீஸ் அனுப்ப முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## பிரிலியன்ட் கழகம் சம்பியன்



அகில இலங்கை உதை பந்தாட்டச் சங்கம் நடத்திய 'பிரீமியர் லீக்' உதை பந்தாட்டப் போட்டியில், கல்முனை பிரிலியன்ட் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கொழும்பில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், களுத் துறை சுப்பர்பீச் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்தாடிய கல்முனை பிரிலியன்ட் விளையாட்டுக்கழகம், 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் – கதிர்காமம் விசேட பஸ் சேவை

ஒன்றுவிட்ட ஒருநாள் சேவை இரவு 8.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும், அடுத்தநாள் இரவு 8.00 மணிக்கு கதிர்காமத்தி லிருந்தும் புறப்படும்.

**29.10.2010 வெள்ளிக்கிழமையன்று ஆரம்பம்**

**A.S.T. Travels**

கல்வியங்காட்டுச் சந்தி

தொ.பே. 0779591323
0774618087

| ① புனிதவதி புடவையகம் | ② பா.நிவின் | ③ எம். மணி |
|---|---|---|
| 279, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு சந்தையடி, யாழ். 0777740368 | 118, பிரதான வீதி, யாழ். 0774837112 | 896, கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலடி, யாழ். 0774021672 |

(105229)

## தொலைபேசி நிறுவனத்தின் பஸ் தரிப்பிடங்கள்

சாவகச்சேரி, ஒக்.28

சாவகச்சேரியில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பொது மக்களுக்கான பஸ்தரிப்பிடம் ஒன்றை புதிய வடிவில் அமைத்துள்ளனர். அத்துடன் நாவற்குழிச் சந்தியிலும் இவ்விதமான பஸ்தரிப்பிடத்தை அமைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

(ஒ-131)

## தேவை

கல்பேட் 1Kg 350/- அத்தோடு ஊர் சேவல் 1 Kg 450/- ஊர் பேடும் விறாத்துக் குஞ்சும் உடன் தேவை

தொடர்பு:
[illegible]
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டன

இல.49, ரஜமல்வத்த லேன், மோதர, கொழும்பு - 15 என்ற முகவரியுடைய ஹ.லக்ஸ்மனா என்பவருடைய தே.அ.அட்டை (இல.741030810V), லைசன்ஸ், விசா காட் என்பன யாழ். ஓட்டுமடத்துக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொலைபேசி இலக்கம் 0775283087, 0214900879 உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## 21 ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்




புன்னகையும் இன்சொல்லும் பேசி- எம்
இதயத்தை வருடிச் சென்ற தென்றலே
கருணையை கடல்போல் கொண்டே
பாசத்தை நீசமின்றி பொழிபவனே
என் உறவைத் தேடி அலைகையிலே
என் உறவாக வந்து சேர்ந்தவனே
உள்ளத்தில் உலவரும் அன்பனே
பல்லாண்டு காலம் நீ வாழியவே!

இன்று 21 ஆவது அகவையிலே கால்பதிக்கும்

**இராஜேஸ்வரன் ரிஷிகாந்**

நயினை நாகபூசணி அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: உதயன் (அண்ணா) அஜந்தா (அக்கா), காவியா, சஜானி

'காவியாகம்', 3 ஆம் வட்டாரம், நயினாதீவு.

28.10.2010

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Adv. Dip. in Hardware & Networking
- Diploma in Computerized Accounting
- Dip. in Video Production & Multimedia
- Dip. in Web Designing & Development
- Dip. in Pre-Press Desktop Publishing
- Tally AutoCAD C++

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English

veta® Experts in English Training An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
30/10/2010 8.30 a.m. & 10.00 a.m.
01/11/2010 7.30 a.m. & 10.30 a.m.

DMI COMPUTER EDUCATION

சிறார்களுக்கான கணனி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

முழுமையானதும் தரமானதுமான கணனி கல்விக்கு.

**DMI COMPUTER EDUCATION**

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470

## காணி, வீடு விற்பனைக்கு

செம்மணி வீதியில் யாழ்ப்பாண கல்வி வலயத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் 6 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

மற்றும் பாரதி ஒழுங்கையில் செம்மணி வீதியும் ஆடியபாதம் வீதியும் இணையும் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 18 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
தொ.பே.இல: 0771543471

## வீடு வாடகைக்கு உண்டு

138, கனகரட்ணம் வீதி, அரியாலையில் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், திணைக்களங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-
0777062005

## JAFFNA HINDU COLLEGE




English - Day Celebrations - 2010

Date : 28.10.2010 Thursday
Time : 10.00 a.m
Venue: Cumaraswamy Hall

Patron
Mr. V. Ganesharajah (Principal)

Chief Guest
Dr. T. Gangatharan

Special Guest : E.S.P Nagaratnam

A cordial Welcome to you.

(105223)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சாந்தினி அவர்களின் தாய்

**திருமதி துரைச்சாமி கனகம்மா**

அவர்கள் கடந்த 29.09.2010 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி நகுலினி பத்மநாதன் அவர்களின் தந்தையார்

**வல்லிபுரம் பீதாம்பரம்**

அவர்கள் கடந்த 28.08.2010 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவும் முகமாக...

LIONS CLUB OF COLOMBO CAPITAL CITY - DIS.306 B2
LIONS CLUB OF MANIPAY CIRCLE - DIS. 306 B1

வீரகேசரி வெற்றி FM

இணைந்து வழங்கும்

உலகப்புகழ் பெற்ற மாயாஜால சக்கரவர்த்தி

PROF. P.M. மித்ராவின்






அக்டோபர் 29/30/31 திகதிகளில்

29-30.10.2010 2.08, 6.04 / 31.10.2010 11.08, 2.08

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

டிக்கட்டுகள் கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| கோசி ரெஸ்ரோரன்ட் | 15, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | ✆: 021-222 5899, 021-222 7100 |
| ஈஸ்வரன் டிரான்ஸ்போர்ட் | 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | ✆: 021 222 2813 |
| வீரகேசரி காரியாலயம் | 117, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம். | ✆: 021-5670100 |
| வாணி டெக்ஸ் | 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். | ✆: 021 2225578 |
| ஸ்பைஸ் டிரவல்ஸ் | 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | ✆: 021 2228591 |
| பாக்கியரத்தினம் ஹாட்வேயார் ஸ்ரோர்ஸ் | 163,165, பிரதான வீதி, சங்கானை. | ✆: 021-321 2713, 021 225015. |
| சீமாட்டி புடவைக்கடல் | 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | ✆: 021 222 8564 |
| கரண்ட் இலக்ரிகல் | 100, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | ✆: 021-222 3916 |

CO-SPONSORS

Cosy Restaurant (Pvt) Ltd. Manitams Building 15, Off Stanley Road, Jaffna. Tel: 021-222 5899, 021-2227100

New Kosalai Traders 265, Old Moor Street, Colombo 12. Tel: 011 2458823, 011 4994238

Manoj Express Services 67/A, Wolfendhal Street, Colombo 13. Tel: 2390128

Eswarran Transport Services 69, 115, Kasthuriyar Road, Jaffna. Tel: +94 021 2222813

வாணி டெக்ஸ் 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். தொ.இல: 021 2225578

Spice Travels & Tours (Pvt) Ltd 412, Hospital Road, Jaffna. Tel: [illegible]

PHS Pakiyaratnam Hardware Stores 163, 165, Main Street, Chankanai. Tel: 021-3212713, 021 225015.

சீமாட்டி புடவைக்கடல் 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 021 2228564

வெற்றி TV

GANESH TEXTILES

NAVEEN CERAMIC

SPICE

Edna CHOCOLATES

Melwire Rolling (Pvt) Ltd. MANUFACTURERS OF STEEL

CITY POINT 20TH ANNIVERSARY

JANATHA STEEL Importers & General Hardware Merchants

LBN LANKA BROADBAND NETWORKS

VIP 300/=, 500/=

MARUTHI EVENT MANAGEMENT
0722 256 021, 0771 552 512

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.க.கல்பனா அவர்களின் கணவர்

**அமரர் இரத்தினம் கமலகுமார்**

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உதவிப் பிரதேச செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
வலி.கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சிதம்பரலிங்கம்



முகமாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, இலுவம்பிள்ளையார் கோயிலடி, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிதம்பரலிங்கம் 24.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாந்தநாயகியின் அன்புக் கணவரும் கவிராஜ் (கஜன் - சுவிஸ்), திருமதி ஜெ.நளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமாரின் (இளங்கோ - கனடா) அன்பு மாமனாரும் பிரித்ய்னனின் அன்பு அம்மப்பாவும் மகேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை அம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2010) வெள்ளிக்கிழமை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலுவம்பிள்ளையார் கோயிலடி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*
(வி/572203)

தகவல் :
**பிள்ளைகள்.**
T.P : 0776636343

## மனுவல் ஜோசப் பெனடிக் சதானந்தம் (டோனாஸ்)

இல.77, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் ஜோசப் பெனடிக் சதானந்தம் (டோனாஸ்) நேற்று (27.10.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் ஜோசப் விசுவாசம் - அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற ரூத் அனியின் அன்புக் கணவரும் எல்மோ ஜேம்ஸ் ஹரிந்திரனின் பாசமிகு தந்தையும் பெரிட்டின் அன்பு மாமனும் கண்மணி, கண்ணன், குமரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் யாழ். மரியன்னை தேவாலயத்தில் இன்று (28.10.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இரங்கல் திருப்பலியின் பின் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.412, ஸ்ரான்லி வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**மனுவல் சுரேஸ்நேசன்**

## பொன்னுத்துரை சிவயோகம்



வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவயோகம் நேற்று (27.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து பொன்னுத்துரையின் (P.W.D. ஓவசியர், துறட்டிப்பனை (முத்துமாரி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தா) அன்பு மனைவியும், நவரட்ணராசா, தனலட்சுமி, விஜயலட்சுமி, இரத்தினராசா, சத்தியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் பத்மாதேவி, செல்வச்சந்திரன், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சிவனேசம், ரவீந்திரன் (காரைநகர், பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியும் வசந்தன் (சவூதி), உதயன், விமலன், யனந்தன் (மலேசியா), கிரிசாந்தி, பகீரதன், பானுஜன், ரஜனிகா, நிவேதா, ரஜிதஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரியங்காவின் பூட்டியும் சிதம்பரநாதன், தவமணி, காலஞ்சென்றவர்களான ஆறுமுகதாஸ், பரராசசிங்கம், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி,*
*தொ.பே.: 0772545296*
(105232)

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# கசிப்பு வைத்திருந்த பெண்கள் இருவருக்கு ரூ.5 லட்சம் அபராதம் விதிப்பு

வடமராட்சி, ஒக்.28

துன்னாலை தெற்கில் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை வைத்திருந்த இரண்டு பெண்களுக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் மொத்தம் ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தகவல் ஒன்றை அடுத்துப் பொலிஸாரின் சோதனையின்போது அவ்வீட்டில் 128 டிரம், 48 போத்தல் கசிப்புக் கான், கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சப்பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களும் பருத்தித்துறை நீதிவான் திருமதி றோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிவான் இருபெண்களில் ஒருவருக்கு இரண்டு லட்சம் ரூபாவும், மற்றவருக்கு மூன்று லட்சம் ரூபாவும் அபராதமாக விதித்தார். (ஓ-236)

# கரவெட்டியில் 352 பேருக்கு வீட்டுத்திட்ட உதவிகள்

யாழ்ப்பாணம், ஒக்.28

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள யுத்தத்தினால் பாதிப்படைந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 352 பேருக்கு வீட்டுத்திட்ட உதவிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் வழங்கப்பட்டுவரும் இந்த உதவித் திட்டத்தில் 5ஆம் கட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வீடுகள் அமைப்பதற்கு 40 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-319)

## கோப்பாய் கலாசாலை பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.28

கோப்பாய்ஆசிரிய கலாசாலையின் 2008-2009 ஆம் ஆண்டுக்குரிய ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சைப்பெறுபேறுகள்பரீட்சைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேறுகளைப் பார்வையிட விரும்புவோர் கலாசாலை நேரத்தில் அவற்றைப் பார்வையிட முடியும் என்று அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஓ)

## சாவகச்சேரி நகரில் வீதியில் குப்பை கொட்டிய மூவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.28

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வீதியோரத்தில் குப்பை கொட்டிய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர்ப் பகுதி பொது சுகாதாரப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துள்ளார். (ஓ-207)

# நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கோண்டாவில், இருபாலை வீதியில் ஆதன இலக்கம் 287, 289 இற்கு உரிய ஆதனங்களை (கோண்டாவில் ஆயுர்வேத வைத்திய நிலையத்துக்கு முன்பாக) நல்லூர் பிரதேச சபை ஆயுர்வேத வைத்தியசாலையும் மூலிகைத்தோட்டமும் அமைப்பதற்காகக் கொள்வனவு செய்ய இருப்பதால் இந்த ஆதனங்களை யாரும் வாங்க வேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**மே.சாந்தசீலன்**
*செயலாளர்,*
*நல்லூர் பிரதேச சபை.*
(வி/572205)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01.05.1935

மறைவு
28.10.2009

அமரத்துவம் அடைந்து
ஆண்டு ஒன்றை நிறைவு செய்யும்

## ஆ.வே.துரைரட்ணம்

[ஆசிரியர்]

ஓட்டத்தை முடித்து
உறக்கத்தில் ஆழ்ந்து ஓராண்டை நிறைவு செய்யும்
அன்பின் அப்பாவே
எங்கள் குலதெய்வமே
எங்கள் நல்வாழ்வுக்காய்
உமை உருக்கி ஒளி தந்தீர் ஐயா
எங்கள் உயர்வுக்கு உம் சிந்தனையை
உரமாக்கி விருட்சமாக்கி நின்றீர் ஐயா
வறுமையிலும் செம்மை வழி நின்று
பெருமையுடன் எமை வளர்த்தீர் ஐயா
பொறுமை எனும் வழி நின்று
நல்லதொரு ஆசிரியப் பணியுடன் எம் ஆலயத்திலும்
ஓர் பணியாளனாய் இருந்தீர் ஐயா
என்றும் எம் வாழ்வின் பசுமை நினைவுகளில்
வற்றாத ஜீவ நதியாக வாழ்ந்திடுவீர் ஐயா

*32, முதலியார் லேன்,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

*என்றும் உங்கள் நினைவுகளுடன்,*
**குடும்பத்தினர், உறவினர்.**

# மரண அறிவித்தல்



## சந்திரசேகரம் சூரியகுமாரன்

**(ஓய்வுபெற்ற நகராட்சி மன்ற ஊழியர், ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)**

ஓடக்கரை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சூரியகுமாரன் நேற்றுமுன்தினம் (26.10.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்- கௌரிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், குலஜீவராணியின் அன்புக் கணவரும், செல்வக்குமார்(லண்டன்), சுபாசினி, சிவகுமார் (லண்டன்), வதனி ஆகியோரின் அன்புத்தந்தையும், விமல்ராஜின் அன்புமாமனாரும், சந்திரகுமாரன், காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீசங்கர், குலதிலகராசா மற்றும் குலதிலகமணி (கனடா), குலஜீவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2010) வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடக்கரை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலகத்துக்குள் தெற்கு மக்களின் பலவந்த நுழைவு 1981 ஆம் ஆண்டு சம்பவத்தை மீளவும் நினைவுபடுத்துகின்றது

## சி.வி.கே.சிவஞானம் ஜனாதிபதிக்கு மனு

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். பொது நூலகத்துக்குள் தென் பகுதி மக்கள் அத்துமீறி நுழைந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்ட செயல் 1981 ஆம் ஆண்டு இதே நூலகம் காடையரால் எரிக்கப்பட்ட சம்பவத்தை மீள நினைவுபடுத்துகின்றது.

இவ்வாறு யாழ்.மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் அரசியல் வாதியுமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

''1981 இல் ஜூன் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் இதே பொது நூலகம் கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்ட சம்பவத்தை நான் 100 மீற்றர் தூரத்திலிருந்து நேரில் கண்டுள்ளேன். அப்போது நான் யாழ். மாநகரசபை ஆணையாளராக இருந்தேன். அண்மையில் நடந்த சம்பவம் இதனை எனக்கு மீளவும் நினைவுபடுத்துகிறது. யாழ்ப்பாணத்துக்கு வந்து எந்தச் சேதங்களையும் விளைவித்து விட்டு தண்டனை ஏதும் இன்றி திரும்பிச் செல்ல முடியும் என்ற, இந்த மக்கள் நம்புவதனாலேயே இத்தகைய செயல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என நான் நம்புகிறேன்'' - என்று அவர் அந்த மனுவில் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் குறித்து உங்களின் கவனத் துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

யாழ். மாவட்டத்துக்கு வெளியிலிருந்து பொது நூலகத்தைப் பார்வை யிடப் பலர் வருகின்றார்கள். இந்தப் பொது நூலகத்தில் கேட்போர் கூடம் ஒன்றும் உள்ளது.

கடந்த 22, 23, 24 ஆம் திகதிகளில் இந்த கேட்போர் கூடத்தில் இலங்கை மருத்துவச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ந்தது. இந்த மாநாட் டில் கலந்து கொள்ள இலங்கை முழுவதும் இருந்து மருத்துவர்கள் வந்திருந்தனர். இவர்களின் வாகனங்கள் வளாகத்தில் நிறைந்திருந்தன.

23ஆம் திகதி மாலை பொது நூலகத்துக்கு வந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் உள்ளே நுழைய முயன்றனர். அச்சமயம் நூலகத்துக்குள் பொது மக்கள் உள் நுழைவது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான அறிவித்தலும் மாட்டப்பட்டிருந்தது.

நூலக நிர்வாகத்தினரும் பாதுகாப்பு அலுவலர்களும் அதனை மக்களுக்கு தெரியப்படுத்தினர். எனினும் வந்த மக்களில் சிலர் தாம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறிக்கொண்டு இராணுவத்தினர் சிலரின் உதவியுடன் பலவந்தமாக கதவுகளைத் திறந்து உள்ளே நுழைந்துள்ளனர்.

நூலக ஊழியர்களின் அறிவுறுத்தல்களை உதாசீனப்படுத்திவிட்டு கட்டுப்படுத்தப்படமுடியா எண்ணிக்கையில் இவர்கள் உள்ளே நுழைந்துள்ளனர்.

1981ஆம் ஆண்டில் காணப்பட்ட வன்மம், குரோதம் என்பன 30 வருடங்கள் கடந்துவிட்டபோதும் விடாப்பிடியாகத் தொடர்கின்றன என்பதாகவே இந்தச் சம்பவம் என்னை உணரவைக் கின்றது.

நீங்கள் உட்பட அனேகமான தெற் குத் தலைவர்களும் பொது நூலக எரிப்புச் சம்பவத்தை கடுமையாக கண்டித்திருந்தீர்கள்.

இந்த நிலையில், இந்த மனுவை அனுப்பிவைப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சட்டத்துக்கு முரணான, விரும்பத்தகாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும். ஏனெனில், அவர்கள் ஜனாதிபதி செயலகத்தின் பெயரை முறையற்ற வகையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் அல்லது துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். இத்தகைய செயல்களுக்கு ஜனாதிபதி செயலகம் உறுதியளித்திருக்காது என நான் உறுதியாக நம்புகின்றேன்.

இரண்டாவது, சிங்களப் பொது மக்களின் மனங்களில் இருந்து வன்மம், குரோதம், கடும்பகை என்பன அழிக்கப்படாதவரையில் கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவாலோ வேறெந்த ஆணைக்குழுக்களாலோ இனங்களுக்கிடையிலான நல்லுறவையும், புரிந்துணர்வையும் கொண்டுவர முடியாது.

அரசியலுக்கு அப்பால் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தமக்குச் சமமான குடிமக்களே என்ற உண்மையை சிங்களப் பொது மக்களும் அனைத்து அரச அதிகாரிகளும் கட்டாயமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் மேலாதிக்க மனோபாவத்துடன் தமிழர்களை அணுகுவதையும் அவர்கள் நிறுத்தவேண்டும். தெற்கின் அனைத்துத் தலைவர்களும் இந்தக் கடமையை உறுதிப்படுத்தவேண்டும். - என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மகாஜனாவில் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 28

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஜெயரத்தினம் நினைவு தினமும், கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும், சின்னப்பா சிலை திறப்பும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எல்.கைலாயநாதனும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபருமாகிய ஆறுதிருமுருகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-319)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொட்டி நவம்பர் 17ஆம் திகதி முதல் கொழும்பு சுதந்திர சதுக்க வளவில் 'சுதந்திரம் 2010' என்ற கண்காட்சி நடைபெறும். தொடர்ந்து நான்கு நாள்கள் இடம்பெறும் இக்கண்காட்சியில் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை விளக்கும் வகையிலான காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. (சி)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த இந்திய வியாபாரிகளின் கடவுச் சீட்டுகளைப் பறிமுதல் செய்தனர். அத்துடன் அந்த வாகனத்தில் அவர்களை ஏறும் படியும் பணித்தனர்.ஆயினும் வியாபாரம் செய்த மிகுதிப் பணத்தை வாங்கவேண்டி இருப்பதால் சிறிது நேரம் கால அவகாசம் தரும்படி கேட்டனர். அதன்படி திரும்பிச் சென்ற அதிகாரிகள் மீண்டும் 10 மணியளவில் வந்து அவர்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

எனினும் இந்தக் கைதுச் சம்பவம் குறித்து தமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று யாழ்ப்பாணம் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் உபய மெதவெல உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

20 இந்திய வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட சம்பவம் பற்றி தகவல் எதுவும் தெரிய வரவில்லை. எனினும் சுற்றுலா விஸாவைப் பெற்றுவிட்டு, வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை கைதுசெய்ய முடியும்.குறித்த வியாபாரிகள் கைது செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் இத்தகைய குற்றத்துக்காகவே இவர்கள் கைதாகி இருக்க முடியும்-என்றார்.

இதேவேளை குறித்த வியாபாரிகளை கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர்களே கைது செய்ததாகவும், ''தம்மை நாடு கடத்தவே கைது செய்திருக்கிறார்கள்'' என்று இந்திய வியாபாரிகள் கூறியதாகவும் விடுதி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.அத்துடன் கைது நிகழ்ந்த பின்னர் குறித்த இந்திய வியாபாரிகளின் கைத்தொலைபேசிகளுக்கு அழைப்பை மேற்கொண்ட போதும், அவை செயலிழந்து இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.(எ)

## ஈழத் தமிழ் அகதி தமிழகத்தில் தற்கொலை முயற்சி

சென்னை, ஒக். 28

தமிழ்நாட்டில் பூந்தமல்லி என்ற இடத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த ரமணன் (வயது 24) தூக்க மாத்திரைகள் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

ரமணன் தற்போது பூந்த மல்லி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழ்நாட்டுக்கு வரும் இலங்கை அகதிகளில், போராளி இயக்கத்தில் இருந்தவர்கள் மற்றும் குறிப்பட்ட குற்ற செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் வழக்குகளை சந்தித்து வருபவர்கள் மட்டும் தனியாகப் பிரிக்கப்பட்டு, சென்னையை ஒட்டிய பூந்தமல்லி மற்றும் செங்கல் பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ள உயர்மட்ட பாதுகாப்புடன் கூடிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு முகாம்களிலும் மொத்தம் 30 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். இப்படி அடைக்கப்பட்டிருப்பவர்கள் தங்களை விடுவிக்ககோரி கடந்த பல மாதங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்திவருகின்றனர். தங்கள் மீதான வழக்குகளை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்றும் தங்களை இந்த முகாம்களிலிருந்து விடுவித்து தங்களின் குடும்பத்துடன் இணைக்க வேண்டும் என்றும் இவர்கள் கோரிவருகின்றனர்.

இலங்கைக்கு ஆயுதங்களை கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொண்டுவரும் ரமணன் செவ்வாய்க் கிழமை காலை 24 தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார் என அவரது வழக்கறிஞர் ராஜீவ்காந்தி பி.பி.சி தமிழோசைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார்.

தம்மை பூந்தமல்லி சிறப்பு முகாமிலிருந்து விடுவிக்கக்கோரி ரமணன் விடுத்த முந்தைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதனால் ஏற்பட்ட தீவிர மன உளைச்சல் காரணமாகவே அவர் இந்த தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் எனவும் அவர் கூறினார். (உ)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவை இலக்குவைத்து தற்கொலைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் 28பேர் கொல்லப்பட்டனர். சந்திரிகா உள்ளிட்ட 80பேர் வரை காயமடைந்தனர். (சி)

## உள்ளூராட்சி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் அமைப்புக்கள் சிலவும் இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிய வருகிறது. ஜே.வி.பி. இதற்கு எதிராக ஏற்கனவே மனுத் தாக்கல் செய்திருக்கின்றமை குறிப்பிட்த்தக்கது. (உ-சி)

## நீதிமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட்டது என்று

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டதன் பின்னர் உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அரச தரப்பு பேச்சு நடத்தும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்வைக்கப்படவுள்ள உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சில சிறுபான்மைக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துவந்தன. இந்த நிலையில் சிறுபான்மைக் கட்சிகள் உட்பட கட்சிகளால் முன்வைக்கப்படும் கருத்துகள் குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று அரச தரப்பு கூறியது.

இத் திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நீதிமன்றம் செல்லவுள்ளன எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது நீதிமன்றம் செல்வதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டுள்ளது. - என்று அவர் கூறினார். (சி)

## இறுதிப்போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கிறேன். இந்தக் கருத்துடன் பிரிட்டிஷ் பிரதமர் உடன்படுகின்றாரா'' - என்றார் சிவோண் மக்டொனால்ட்.

அதற்குப் பதிலளித்த பிரிட்டிஷ் பிரதமர், ''இலங்கையில் என்ன நடந்தது என்பதை அறிய எமக்கு ஒரு பக்கசார்பற்ற விசாரணை அவசியம். செய்தித் தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் அவை குறித்து நாம் பார்க்கிறோம். ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர் கூறியவை சரியா என்பதை உறுதி செய்ய ஒரு பக்கசார்பற்ற விசாரணை அங்கு அவசியம்'' - என்றார்.

இந்த விடயம் குறித்து தான் அங்கம் வகிக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஊடாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாதா என்று பி.பி.சி செய்திச் சேவை நாடாளுமன்ற உறுப்பினர் மக்டொனால்ட்டிடம் கேட்டது. ''ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவும் சீனாவும் இந்த விடயத்தில் எதிர் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் நிலையில் அது சிரமம்'' - என்று அவர் பதிலளித்தார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தற்போது நடத்தி வரும் விசாரணையின் மூலம் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து உறுதி செய்ய முடியாது எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அந்த விசாரணை பக்கசார்பற்ற வகையில் நடக்கும் என்பதில் தமக்கு நம்பிக்கை கிடையாது என்றும் சிவோண் மக்டொனால்ட் கூறினார். (உ-319)


**BITSMANS** கல்வி நிறுவனம், மானிப்பாய்

A/L - 2011 (சேதன இரசாயனம்) ORGANIC

ஆசிரியர் : திரு. S.VASU - B.Sc. (Hons)

ஆரம்பம் : இன்று (28.10.2010) வியாழன் 6.00 P.m.

(105208)

**வேலை ஆள் தேவை**

பென்சி கடைக்கு அனுபவம் உள்ள பெண் பிள்ளை தேவை.

இராமாசி பென்சி கவுஸ்

கல்வியங்காடு. தொ.இல :0772487852

(105205)

**வேலையாள் தேவை**

பாடசாலை உபகரண விற்பனை நிலையமொன்றுக்கு விற்பனையாளர் தேவை.

தொடர்பு : 021 222 4375

(சி/572200)

**ஆள் தேவை**

Play Group நேசரியில் படிக்கின்ற சிறு பிள்ளைக்கு மாலை 3.00 மணி தொடக்கம் 7.30 மணிவரை பாடம் சொல்லிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஆள் தேவை.

வலிகாமம் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0776028734

021 225 0004

(105143)

**College of Business Management (CBM)**

33, Temple Road, Kokuvil East, Kokuvil

வங்கித்துறை கற்கைநெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

CBF
DBF
} அனைத்துப் பாடங்களும்

ஆரம்பம் : 30-10-2010 சனி பி.ப. 4.00

இயக்குனர்

N.UMAKANTH - 0777110756


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org